
உள்ளே
ஓர் ஒப்பற்ற
இலவச இணைப்பு!
KALKI 22.5.94
ரூ. 3.00
கல்கி
கச்சித விலையில்
பச்சென்று காய்கறிகள்!





கட்டெரிக்கும் வெயிலை கண்டு 'அய்யய்யோ' என ஓட வேண்டாம் இனி, இதோ உமக் காகவே ஷவர் டூ ஷவர். இதன் ஜில்ஜில் இதமளிப்பில் அனுபவிப்பீர் குளுகுளு ஐஸ் உணர்வு. அதோடு கசகச பிசுபிசுப்பு உணர்வு தன்னாலே மறைந்திடும். சாதா பவுடர்களுக்கு இயலாத காரியம் இது. ஷவர் டூ ஷவர் வியர்குருவையும் தடுக்கிறது. இனி என்ன? கோடை நாட்களில் சிலுசிலுவென புத்துணர் – வோடு இருங்கள்.

● இந்த இதழுடன் சாம்பிள் பேக் ஒன்று இலவசம்!



வியர்வையின் வியப்பூட்டும் எதிரி.

Lintas J&J 12 1126 TM B

இலவச இணைப்பு



இந்த இதழின் மையப் பகுதியில் இலவச இணைப்பாகக் காஞ்சி முனிவர் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளின் அற்புதமான அருளுரை, அவரது 101 - வது பிறந்த தினத்தையொட்டி (வைகாசி - அனுஷம்) இடம் பெறுகிறது.

மையப் 'பின்'களை நெகிழ்த்தி அருள்வாக்கைத் தனியே எடுத்துத் தனி நூலாகத் தைத்து வைத்துக் கொள்ளலாம். அல்லது இந்த இதழ் கல்கியோடு சேர்த்தே பத்திரப்படுத்தலாம்.

- ஆசிரியர்

கனடா நாட்டில் காஞ்சீபுரம் பட்டு!

சென்ற வாரம் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச் சென்று திரும்பிய பிறகு, ஒரு புதிய சாதனை செய்த உற்சாகத்துடன் இருந்தார் 'நல்லி' குப்புசாமி.

அதற்கு நியாயமான காரணம் இருந்தது.

கனடா நாட்டில் உள்ள டொரன்ட்டோ நகரில் ஷோரூம் திறப்பது என்று முடிவானவுடன் அந்த நாட்டுக்குப் போகத் தேவையான விசாவுக்கு விண்ணப்பித்தார் நல்லி.

விசா அதிகாரி, ''உங்களுடன் ஒரு மணி நேரமாவது பேச வேண்டியிருக்குமே'' என்றார்.

''ஏன்?''

''இதுவரை விசாவுக்கு விண்ணப்பித்தவர்கள் ஏற்றுமதியாளர்களாகவோ, தொழிலதிபர்களாகவோ அல்லது மேல் படிப்புக்குச் செல்பவர்களாகவோதான் இருந்திருக்கிறார்கள். இந்த மாதிரி 'கடை திறக்கப் போகிறேன்' என்று கூறி யாரும் விண்ணப்பித்ததில்லை. எனவே, இதுபற்றிய விவ ரங்களை உங்களிடம் நிறையப் பேசி நான் சேகரிக்க வேண்டும். பின்னால் வேறு யாராவது விண்ணப்பித்தால் அதற்கு உபயோகமாக இருக்கும்'' என்று வேண்டுகோள் விடுத்தார் அந்த அதிகாரி.

''சரி'' என்று சம்மதம் தெரிவித்து உரையாடினார் நல்லி குப்புசாமி. அதன் முடிவில் ஐந்து வருஷங்களுக்கான, பல முறை சென்று திரும்ப வசதியான விசா கொடுத்த அதிகாரி,

''இதனை ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு புதுப்பிக்க நீங்கள் நேரில் வரவேண்டாம்; ஒரு கடிதம் எழுதினால் போதும்'' என்றார்.

ஆக, நல்லி குப்புசாமி முன்னோடியான ஒரு காரியத்தைச் செய்து விட்டுத் திரும்பியிருக்கிறார்; வேறு பலருக்கு வழிகாட்டியாகவும் விளங்குகிறார்.

''சரி, அமெரிக்காவிலும் கனடாவிலும் போய் புடவைக் கடை வைப்பதாவது? யாரை நம்பி? எத்தனை புடைவைகளை அப்படி விற்றுவிட முடியும்?'' - சந்தேகம் எழுவது இயல்பு.

''சிங்கப்பூரில் உள்ள செரங்கூன் சாலை போலவே, டொரன்டோவில் உள்ள ஜெராட் சாலையும் தமிழர்கள் நிறைய வாழும் இடம். தவிர, ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா தமிழர்கள் இங்கே வாழ்கிறார்கள். இவர்கள் பட்டுப் புடைவை வாங்கி உடுத்தும் பழக்கம் உள்ளவர்கள். வட இந்தியர்களும் கனடாவில் நிறைய உண்டு. ஆனாலும் அவர்கள் பனாரஸ், பெங்களூர் பட்டு வகைகளையே அறிந்திருக்கிறார்கள். காஞ்சிபுரம் பட்டின் நேர்த்தியை இப்போது தான் காண்கிறார்கள். அதனால் வியாபார நோக்கில் நிறைய வாய்ப்பு இருக்கிறது.''

அங்கே போய்ப் பட்டுப் புடைவைகள் விற்க முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது எப்படி?

● நல்லி குப்புசாமி




சொன்னார் நல்லி :

''டொராண்டோவில் சென்ற வருடம் மூன்று நாட்கள் நடந்த நமது பாரம்பரியக் கைவினைப் பொருட்களின் கண்காட்சியில் முதல் நாளன்றே நான் கொண்டு போயிருந்த ஆயிரம் புடைவைகளும் விற்றுப் போயின. இது என்னைத் திகைக்கச் செய்ததுடன், சிந்திக்கவும் வைத்தது; அதன் பின்விளைவுதான் இந்தக் கடை திறப்பு!''

திறப்பு விழாவுக்கு சூப்பர் ஸ்டார் ரஜினி வருவதாக இருந்தாராம். தேதி சரிப்பட்டுவராமல் போனது கொஞ்சம் ஏமாற்றம்தான் என்றாலும், விற்பனை ஏமாற்றமளிக்கவில்லை, சூப்பர்தான்!

- சித்தார்த்



மயிலை - பெருந்துறை இடைத் தேர்தல் நிலவரங்கள்:

சேஷன்

ஒரு தொகுதியின் இடைத் தேர்தல் என்பது எப்பேர்ப்பட்டதோர் திருவிழா! அதுவும், ஆளுங்கட்சி தனது தொகுதியை மீண்டும் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய ஒரு சவாலான சூழ்நிலையில் என்னவெல்லாம் நடக்க வேண்டும்! ஜெயலலிதாவின் கட் அவுட் அலங்காரங்களும் கொடிகளும் தோரணங்களும் தொகுதி மக்களையே ஒரு கலக்கு கலக்குவதோடு, போட்டியிடும் மற்ற கட்சிக்காரர்களையும் கதிகலங்கச் செய்ய வேண்டாமா? இது தானே நாம் இது வரை பார்த்து வந்திருக்கும் யதார்த்தம்?

இன்றைக்கு எல்லாமே போச்சு! காரணம்?

சேஷன்!

'ஒரு வேட்பாளர் தேர்தல் விதி முறைகளின்படிதான் செலவு செய்கிறாரா, பிரசாரம் செய்கிறாரா என்பதை நானே தொகுதிக்கு நேரில் வந்து பார்ப்பேன்; விதிமுறைகள் மீறப் பட்டிருந்தால் தேர்தல் கமிஷன் தனது நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும்' என்று சேஷன் சொன்னது, நமக்கு வேண்டுமானால் சாதாரணமாக இருக்கலாம். ஆனால், அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை - அதுவும் ஆளும் கட்சியைப் பொறுத்தவரை - இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பானில் அமெரிக்கா போட்ட அணுகுண்டுக்குச் சமமாகப் போய் விட்டது.

பெருந்துறையில் தேர்தல் அறிவிப்பு வந்தவுடனேயே, எற்கெனவே எழுதப்பட்டிருந்த சுவர் விளம்பரங்களையெல்லாம் சேஷனின் 'அணு குண்டு அறிவிப்பு' வந்தவுடன் அவசர அவசரமாகப் போய் வெள்ளையடித்து விட்டார்கள். தனிப்பட்டவர்களின் அனுமதியோடு (எழுத்துவடிவில்) சில தனியார் சுவர்களில் மட்டும் விளம்பரங்களைப் பார்க்க முடிந்தது.

மயிலாப்பூரில் இது கூடக் கிடையாது. டுடோரியல் காலேஜ், கவிசேஷப் பிரசங்க அறிவிப்புகள் அளவுக்குக் கூட தேர்தல் விளம்பரங்கள் இல்லாதது மகத்தான ஆச்சர்யம்.

அநேகமாக அத்தனை கட்சி வேட்பாளர்களுக்கும் இது தர்மசங்கடம்தான் என்றாலும், ''சேஷனின் கெடுபிடி ரொம்ப நல்லது. ஆளுங் கட்சியின் அதிகார துஷ்பிரயோகம் பெருமளவு குறைந்து போகும் என்பதால்தான் இதனை ஆதரிக்கிறேன்'' என்கிறார் பெருந்துறை காங்கிரஸ் வேட்பாளர் சி. காந்தி. இவரது வோட்டு சேகரிப்பு வேட்டை, தொகுதிக்குள் வந்து நிற்கும் பஸ்களுக்குள் கூடத் தொடர்வது ஒரு ஆச்சர்யம். ''அ.தி.மு.க. கூட்டு இல்லாத



✱ வி.எம். கந்தசாமி

✱ வெறிச்சோடிக் கிடக்கும் பெருந்துறை வீதிகள்.





* தாஜு

* கராத்தே தியாகராஜன்

* கராத்தே பாலசுப்பிரமணியன்

* ராமஜெயம்

நிலையிலும் வெற்றி காங்கிரஸுக்குத் தான்'' என்கிறார் காந்தி.

அவர் குறிப்பிட்டது போல மயிலை, பெருந்

னார்.

பெருந்துறை அ.தி.மு.க. வேட்பாளர் வி.பி. பெரியசாமி ரொம்பவும் பயந்த நிலையில்தான் வோட்டுக் கேட்கிறார். பேட்டிக்காகப் போனவர்களை சேஷனின் ஆட்களோ என்று சந்தேகித்தாரோ என்னவோ... முதலில் நம்மைச் சந்திக்கவே மறுத்தார்; ஒருவாறு பயம் தெளிந்தபின்

கையில் சிண்டு!

துறை இரு தொகுதிகளி லுமே அ.தி.மு.க. காரர்களின் பிரசார வேகம் அடங்கித்தான் இருக்கிறது.

மயிலையில் போட்டியிடும் கராத்தே பாலசுப்பிரமணியன், அம்மாவின் பரம பக்தர். பிரசாரத்தில் ஆடம்பரம் துளிக் கூட இல்லாதிருக்கும் படி பார்த்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பதாகச் சொன்

பேசினாலும் தேர்தல் பற்றியோ, வெற்றி வாய்ப்பு பற்றியோ எதுவும் பேச மறுத்தார். சைலண்ட்டாக வீடுவீடாக வோட்டு வேட்டை. இத்தனை பயந்து வோட்டுக் கேட்கும் இவர் ஒரு வழக்கறிஞர் என்பதைக் கவனத்தில் கொள்க.

மவிலாப்



* வி.பி. பெரியசாமி (அ.தி.மு.க.)

* தேர்தல் அறிவிக்கப்பட்டதும் சாலைப் பணிகள்.



ரில் பல கட்சிகள் போட்டி யிட்டாலும் தி.மு.க.- ம.தி.மு.க.(வை.கோ) வுக்கிடையிலான போட்டியைத்தான் பெரிசாக எதிர்பார்க்கி றார்கள் என்று தெரிகிறது. ஒருவரைவிட மற்றவர், ஒரு வோட்டாவது கூடுதலாகப் பெற (வெற்றியெல்லாம் இரண்டாம் பட்சம்!) பயங்கர முயற்சி நடந்து வருகிறது.


''தி.மு.க. பிளவுபட்டுள்ள நிலையில் அராஜக அ.தி.மு.க. ஆட்சிக்கு ஒரு சவாலாக இருப்பது காங்கிரஸ்தான்; அவர்களுக்குப் பாடம் புகட்ட மக்கள் காங்கிரஸைத்தான் தேர்தெடுப்பார்கள் என்று நம்பிக்கையோடு கூறும் கராத்தே தியாகராஜன், காங்கிரஸ் வேட்பாளர் என்று தாம் அறிவிக்கப்படாத நிலையிலேயே அவர் பிரசாரத்தாலும் பாவர்களாலும் தொகுதியை ஒரு கலக்குக் கலக்கியவர்!

பெருந்துறை ம.தி.மு.க.வேட்பாளர் வி.எம். கந்தசாமி, முன்பு தி.மு.க. தொண்டர்களுக்கு ரொம்பவும் தெரிந்தவர்தான் என்றாலும் இப்போது கட்சியும் சின்னமும் கொடியும் புதியவை. வெற்றி வாய்ப்பு எப்படி?

''என்னை அறிமுகம் செய்வதற்காக



• டி.கே.நல்லப்பன் (சி.பி.ஐ.)



• [illegible]: தேடிக் கண்டுப்பிடிக்கும் நிலை.

நடந்த வேட்பாளர் அறிமுகக் கூட்டத்திற்கு வை.கோ. வந்திருந்தபோது மக்கள் வெள்ளம் எக்கச்சக்கமாக இருந்தது. (இந்தக் கூட்டத்தில் போடப்பட்ட டியூப் லைட்களின் எண்ணிக்கையைக்கூட தேர்தல் கமிஷன் ஆட்கள் கணக்கெடுத்துச் சென்றதாகத் தெரிய வர, எல்லாக் கட்சியினரும் பயந்து கொண்டிருக்கிறார்கள்) அதுவே எனக்குப் பெரும் நம்பிக்கை தந்திருக்கிறது. இப்போது கொடி, சின்னம் மட்டும் பார்த்து வோட்டுபோடும் மனோபாவத்தில் மக்கள் இல்லை. அவர்கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள்!''என்கிறார் இவர்.

மயிலையைப் பொறுத்த வரை, ம.தி.மு.க. வேட்பாளர் தாணு அரசியலுக்குப் புதியவர் என்றாலும் தமது படங்களுக்கான கட் அவுட் விளம்பரங்களால் ரொம்பத்தான் பிரபலமானவர். இவரது தேர்தல் அணுகுமுறையே வெகு வித்தியாசமாக இருக்கிறது.

மயிலை, ஆத்திகர்கள் நிறைந்த ஏரியா என்பதால் சமஸ்கிருத ஸ்லோகங்கள் பாடிச் செல்வதும், தமக்கேயுரிய நெற்றிப் பொட்டு அணிவதும் கோவில்களுக்குப் போய் சாமி கும்பிடுவதுமாக, மிக வித்தியாசமான 'திராவிட பாரம்பரிய' வேட்பாளராகத் தெரிகிறார்.

பல சினிமா நடிகர்கள் தாணுவுக்கு உதவிக்கரம் நீட்டினாலும், வெளிப்படையாகத் தங்கள் ஆதரவைத் தெரிவிக்கத் தயங்குகிறார்கள் என்பது கோடம்பாக்க வட்டாரத் தகவல்.

தாணுவை எதிர்க்கும் தி.மு.க. வேட்பாளர் ராமஜெயம். வை.கோ.வின் கட்சியை ஒரு பலமான எதிரியாகத் தாங்கள் நினைக்கவில்லை என்று குண்டைத் தூக்கிப் போடுகிறார். ''இத்தொகுதியில் இரண்டு லட்சம் வாக்காளர்களில் பெரும்பாலானவர்கள் படித்தவர்கள். கலைஞரின் நிர்வாகத்





● காந்தி (காங்): பஸ்ஸில் ஏறி...

திறமை புரிந்தவர்கள். இன்றைய அரசின் அழுலை அறிந்தவர்கள். எனவே யோசித்து முடிவெடுப்பார்கள்''என்கிறார்.

பெருந்துறையில். தி.மு.க நேரடிப் போட்டி இல்லை. தி.மு.க., ஜனதாதளம், சி.பி.எம். ஆகிய கட்சிகளின் கூட்டணியோடு சி.பி.ஐ.வேட்பாளர் டி.கே. நல்லப்பன் களத்தில் இறங்கியிருக்கிறார். 'சேஷனின் கெடுபிடிகளால் ஆளும் கட்சிக்குத்தான் பாதிப்பு அதிகம்' என்று கூறும் இவர் அதே சமயத்தில், 'ரூ.50.000தான் செலவு செய்யலாம் என்பது ரொம்பக் குறைவு; காலத்துக்கு ஒவ்வாதது' என்றும் எடுத்துக் காட்டுகிறார்.

பெருந்துறையிலும் சரி, மயிலையிலும் சரி, ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களும் தமக்கே வெற்றி வாய்ப்பு என்று அடித்துச் சொல்கிறார்கள். (வேறு வழி?) ஆயினும் உண்மை நிலை?

ஏறத்தாழ 1,70,000 வாக்காளர்களைக் கொண்ட பெருந்துறைத் தொகுதியில் எந்தக் கட்சி தேர்ந்தெடுக்கப்படவிருக்கிறது? ஜாதி ரீதியாக வாக்குகள் பிரியும் வாய்ப்புகள் உண்டா?

இந்தத் தொகுதியைப் பொறுத்தவரை, ஏறத்தாழ பாதிக்குப் பாதியாக இருப்பவர்கள் கவுண்டர் இனத்தவர். முக்கியமான நான்கு கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களும் கவுண்டர் இனத்தவர்கள்தாம் என்பதால் இவர்களது வெற்றி வாய்ப்பு ஒருபோதும் ஜாதி ரீதியாக அமையப் போவதில்லை.

இந்த நிலையில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒரு சாதாரண சுயேட்சையைப் போல்தான் வாக்குகள் பெற முடியும் போலிருக்கிறது.

பாரதிய ஜனதா இங்கு ஒரு பொருட்டே அல்ல. ஆக யாருக்கு வெற்றி வாய்ப்பு?

ஹரிஜன மக்களின் ஒட்டுமொத்த ஆதரவு யாருக்குக் கிடைக்கிறதோ, அவருக்குத்தான் வெற்றிவாய்ப்பு.

மயிலையிலும் பாதிப் பேர் படித்தவர்கள் என்றாலும் மீதிப்பேர் குப்பத்துவாசிகள், மீனவர்கள், உழைப்பாளி வர்க்கத்தினர் தான். எனவேதான் இருதொகுதிகளிலும் கட்சிகள், தமது பிரசார பீரங்கிகளை இப்படியான குப்பம், காலனிகளுக்கே பெருமளவு அனுப்பி வருகின்றனர்.


''யோசிக்கத் தெரிந்த மக்களிடம் என்னதான் பிரசாரம் செய்தாலும் அவர்கள் சுயமாகச் சிந்தித்துத்தான் முடிவெடுப்பார்கள். கொஞ்சம் போல் 'செலவு பண்ணி' ஓட்டு சேகரிக்க குப்பத்து வாசிகள்தாம் பக்க பலம்!'' என்கிறார்கள் பல வேட்பாளர்கள்.

இந்நிலையில், இப்படியான மக்களிடம் தமது ஆள்பலம், பணபலம், அதிகார பலம் இவற்றைச் செலுத்தி மக்கள் மனத்தைக் கலைக்க ஆளுங்கட்சி அவசியம் முயலும். தேர்தல் கிட்டே நெருங்க, இந்நிலை இன் னும் தீவிரமாகும்'' என்று ஒட்டுமொத்தமாக எல்லா எதிர்க்கட்சியினரும் கருத்து தெரிவிக்கின்றனர்:


இத்தொகுதிகளுக்கு, சேஷன், ஒரு முறை விஸிட் செய்வதோடு நிறுத்திக் கொள்வாரா அல்லது மறுமுறையும் வருவாரா என்று தெரியவில்லை. சேஷனின் மறுவருகை நிச்சயமென்றால், யாருடைய வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படாவிட்டாலும் ஆளுங்கட்சியின் வெற்றி வாய்ப்பு நிச்சயம் பாதிக்கப்படும். இது இரு தொகுதிகளுக்குமே பொருந்தும்!

– நமது நிருபர்கள்

படங்கள்: ரவிசங்கரன், ராஜன்.



கச்சித விலையில் பச்சென்று காய்கறிகள்!



ரேகா ஷெட்டி

காலை நேரப் பரபரப்புகளுக்கிடையே, சுத்தமான, ஃப்ரெஷ்ஷான, சீப்பான, சுவையான இன்னும் பலவான காய்கறிகளுக்காக, கடை வாசல் களில் கால் கடுக்கத் தவமிருக்கும் சுமதிகளே, ஷோபாக்களே, ரமாக்களே, லக்ஷ்மிகளே, அனுஷா, ராஜிகளே! உங்கள் மீது கடவுள் அத்தனை கருணை காட்டாமல் போகவில்லை.

சென்னையில் மட்டும் பதினாறு ஏர்கண்டிஷண்ட் (தற்சமயம் ஒன்பது) காய்கறிக் கடைகள் திறந் திருக்கிறார்கள் 'மேக்ஸ்-வொர்த் க்ரீன் ஹார் வெஸ்ட்' நிறுவனத்தினர்.

காலை ஏழு மணி முதல் இரவு ஒன்பது வரை திறந்திருக்கும் இந்தக் கடைகளில் அறுபதுக்கும் மேற்பட்ட கறிகாய்கள். அத்தனையும் தளதள. தக்காளி எல்லாம் பளபள. வண்ண வண்ண டிரேக்களில் பார்க்கும்போதே கைகளெல்லாம் பரபர. மளக் மளக்கென்று வாங்கிப் போட்டுக்

கொண்டு, கம்ப்யூட்டர் பில்லைப் பார்த்துக் காசைக் கொடுத்துவிட்டு வந்து கொண்டே இருக்கலாம். சேறை மிதித்துக் கொண்டு, தாண்டித் தாண்டிக் குதிக்க வேண்டாம். வதங்கிப்போன, அழுகிப் போன, கறிகாய்களின், நாசியைப் பிடித்துக் கொள்ள வைக்கும் நாற்றத்தைச் சகித்துக் கொள்ள வேண்டாம்.

ஏர்கண்டிஷன்ட் ஷாப்? - ஆமாம்.

கம்ப்யூட்டர் பில்? - ஆமாமாம்.

தகரத் தடுப்பும், சாக்குக் கூரையுமாக இருக்கிற கடையிலேயே யானை விலை, குதிரை விலை. இந்த மாதிரி 'பாஷ்' கறிகாய்க் கடையில்? கேட்கவே வேண்டாம்.

''யூ ஆர் ராங்!'' என்கிறார் மேக்ஸ்வொர்த் அமைப்பின் பிரசிடெண்ட் ரேகா ஷெட்டி. ''இங்கே நீங்கள் வாங்குகிற ஒவ்வொரு காய்கறியின் விலையையும் குறித்துக் கொள்ளுங்கள். உங்கள் வீட்டுக்கு அருகே இருக்கிற கறிகாய்க் கடையில் விசாரித்து அதையும் குறித்துக் கொள்ளுங்கள். இரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்புறம் சந்தோஷத்தில் துள்ளிக் குதிப்பீர்கள்!''

துள்ளிக் குதித்துக் கூரையில் தலையை முட்டிக் கொள்ள விரும்பாதவர்கள், அதிகபட்சம் நிறைய சந்தோஷப்பட்டுக் கொள்ளட்டும்.

''என்ன காரணம் மிஸஸ் ஷெட்டி?''

''எங்கள் தோட்டங்களிலேயே விளையும் கறிகாய்கள். காண்ட்ராக்ட் ஒப்பந்தப்படி எங்களுக்காகப் பிறர் பண்ணைகளில் விளைவித்துத் தரும் கறிகாய்கள். நடுவில் இடைத்தரகர் யாரும் புகுந்து விலைகளைக் கூட்டிக் கொண்டே போவதில்லை. இவற்றை இந்த ஒன்பது கடைகளுக்கும் அனுப்பி வைக்கிறோம். அங்கிருந்து தனி வாடிக்கையாளர் முதல், பெரிய பெரிய ஹோட்டல்கள், கான்டீன்கள் வரை வாங்கிக் கொண்டு போகிறார்கள்!''

எல்டாம்ஸ் ரோடு ஷோரூமிலும், பாண்டி பஜார் ஷோ ரூமிலும் காய்கறிகளைப் பார்த்தாலே பசி தீரும் போல இருந்தது. பகல்வா சாலை கடை வளாகத்தில் மூட்டைகளில் வந்து இறங்கிய காய்கறிகள் 'வாங்கு வாங்கு' என்று வசீகரம் செய்தன!

எந்தக் காய்கறியில் எந்த வகை ஊட்டச் சத்து அதிகம் என்று மாக்ஸ்வொர்த்

• சுப்பிரமணியன்





• பாண்டி பஜார் மேக்ஸ்-வொர்த்தில்... (படம்: பாலாஜி)

நிறுவனம் சொல்லித் தரும். அங்கத்தினராகி அட்டை வாங்கி விட்டால் 5%-10% தள்ளுபடிச் சலுகைகூட உண்டு. ரொம்பவும் ஆரோக்கியச் சிந்தனை என்றால், யோகா, டீ.எம்.எல்லாம் கூடச் சொல்லித் தரும் ஏற்பாடுகளைச் செய்யப் போவதாகச் சொன்னார் ரேகா ஷெட்டி. (ஆனால் கறிகாய் வாங்கி வருகிறேன் பேர்வழி என்று போய்விட்டு, போன இடத்தில் பிராணாயாமம், யோகா என்று மூக்கைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டால்... திண்டாட்டம்தான்!)

''போன் செய்தால் போதும். வீட்டுக்கே அனுப்பி விடுகிறோம்!'' என்கிறார் பகல்வா ரோடு கடைப் பொறுப்பாளர் வில்சன் மாத்யூ.

இந்தியா பூராவும் 500க்கு மேற்பட்ட கறிகாய்க் கடைகள் திறக்கிற திட்டம் இருக்கிறதாம். விலையும் சகாயமாக இருந்து, கறிகாய்களும் பசுமையாக இருந்தால் அதை விட வேறு என்ன வேண்டும்?

இந்த மாதிரி முற்றிலும் வித்தியாசமான முயற்சிகள் இங்கே வெற்றியடையுமா?

''நான் 'டைம்-ஷேர்' அடிப்படையில் 'ஹாலிடே ரிசார்ட்'



* அண்ணாமலைபுரம் ஜஸ்ட் பிக்ட் கடையில்... (படம்: பாலாஜி)

ஆரம்பித்த போதும் இப்படித்தான் முதலில் கேட்டார்கள்!'' என்று தோள்களைக் குலுக்கிப் புன்னகை செய்கிறார் ஆர். சுப்பிரமணியன்; மாக்ஸ்வொர்த் நிறுவன நிர்வாக இயக்குநர்.

இன்னொரு பெரிய நிறுவனம், இம்மாதிரி ஏர்கண்டிஷண்ட் கறிகாய்க்கடை வியாபாரத்தில் இறங்கியிருக்கிறது: 'ஹிந்து' நாளிதழ் உரிமையாளர்களின் கஸ்தூரி எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட். இவர்கள் கடைக்குப் பெயர் ஜஸ்ட் பிக்ட் - (Just picked அதாவது 'இப்போதுதான் பறிக்கப்பட்டது') கறிகாய்களின் தரத்தைக் கடையின் பெயரே தெரிவித்துவிடுகிறது.

இரண்டு மூன்று வருடங்கள் முன்பு, தங்கள் பண்ணையில் முதலில் விளைந்த தக்காளிப் பழங்களை விற்பனைக்குக் கொடுத்தபோது கிடைத்த அனுபவம், இதன் இயக்குநர் வேணுகோபால் அவர்களை யோசிக்க வைத்ததாம்: ''நாமே இடைத்தரகர்களைத் தவிர்த்து நேரடியாக விற்பனைக்குக் கொண்டு வந்தால் பொது மக்களுக்கு எத்தனை குறைவான விலையில் கறிகாய்கள் கிடைக்கும்!''

உடனே பிறந்தது 'ஜஸ்ட் பிக்ட்'. சென்னையில் மட்டும் இப்போது ''ஃப்ரான்சைஸ்'' முறையில் அண்ணாமலைபுரம், அண்ணா நகர், பெஸன்ட் நகர் ஆகிய இடங்களில் இயங்கி வருகிறது. இன்னும் சில பகுதிகளில் திறக்கப்பட இருக்கிறது, விரைவிலேயே.

அண்ணாமலைபுரம் கடையை ஏற்று நடத்தும் இளைஞர் நாராயணன் சொன்னார்:

''மாலை வேளையில்தான் சரக்கு வருகிறது. எனவே மாலையில் நல்ல கூட்டம். ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் காலை விழும் வாரி வருவதால் அன்று, காலையிலும் கூட்டம் இருக்கும். வாடிக்கையாளர்கள் பஜார் ஆரம்பத்திலிருந்து இன்னும்

தொடர்ந்து வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். கறிகாய் வகைகளே கிட்டத்தட்ட அறுபது இருக்கின்றன. கீரை வகைகள் ஆறு!''

அந்த மாலை வேளையில், நிறையப் பேர் உள்ளே வைத்திருக்கும் பிளாஸ்டிக் கூடையை எடுத்துக் கொண்டு தங்களுக்கு வேண்டியதை எடுத்து எடுத்துப் போட்டுக் கொண்டு கம்ப்யூட்டர் பில்லிங்குக்கு வந்தார்கள்.

''பேரம் செய்யவும், நல்லதைப் பொறுக்கவும் நேரம் வீணாவதில்லை!'' என்றார் ஒரு பெரிய இடத்துப் பெண்மணி.

வெண்டைக்காய் எல்லாம் பிஞ்சு பிஞ்சாக, பிளாஸ்டிக் பையில் 'சமர்த்தாக' இருந்தன. முனையை எடுத்து மளுக் மளுக்கென்று ஒடித்துப் பார்க்க தேவையே இல்லாமல்.

''தரம் பிரித்துப் பார்த்துப் போட என்றே கிண்டியில் கிரேடிங் சென்டர் இருக்கிறது'' என்றார் நாராயணன்.

கிரேடிங் சென்டர் மானேஜர் அருண்குமார் சதானந்த் சொன்னார்: ''இங்கே 25 பேர் இந்தப் பணியைச் செய்கிறார்கள். நல்லதை எல்லாம்தான் விற்பனைக்கு அனுப்ப முடியும். கோணல் மாணலான கேரட்டை வைத்தால், பார்க்கிற வாடிக்கையாளருக்கு அதை வாங்கவே தோன்றாது. வெண்டைக்காய் கொஞ்சம் முற்றியதாக இருந்தால் கூட அதை அப்படியே ஒதுக்கிவிடுவோம்.''

''அப்புறம் அதை என்ன செய்வீர்கள்?''

''அதைக் குறைந்த விலைக்கு, கறிகாய் விற்பனையாளர்கள் வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள். எங்களுக்கும் பெரிய நஷ்டம் வராது!''

கீரை வகைகள் சில, இயற்கை உரங்களை மட்டுமே உபயோகித்து விளைச்சலானவையாம். அதிலும் 'பாலக்' கீரை இவர்கள் ஸ்பெஷாலிடி!

மாக்ஸ்வொர்த்தும் சரி, ஜஸ்ட் பிக்டும் சரி. இயற்கை எருவை மட்டுமே உபயோகித்துப் பயிராக்கும் கறிகாய் வகைகளையும் விற்பனைக்குக் கொண்டு வர இருக்கிறார்கள். என்ன, விலை சற்றுக் கூடுதலாய் இருக்கலாம். ஆனால், அவற்றின் சுவை



● பங்களூர் ரோடு மேக்ஸ் வொர்த் ஷாப்பில்...
(படம்: ரவிசங்கரன்)

யையும் பலனையும் பார்க்கையில், ''பேஷ் பேஷ்'' என்று சொல்ல வைக்கும் அல்லவா?

இன்றைக்கு இந்த இரண்டு நிறுவனங்கள் தவிர, அனுபவ் ஃபவுண்டேஷன் மற்றும், எம்.வி.ஜே. டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸ் இருவரும் கூட இந்த மாதிரி குளுகுளு அறைக் கறிகாய்க் கடைகள் திறக்கும் திட்டம் வைத்திருக்கிறார்களாம். விரைவிலேயே செயல்படுத்தப் படுமாம்.


இப்படி, தெருவுக்கு ஒன்று என்றில்லாவிட்டாலும், ஏரியாவுக்கு ஒரு ஏர்கண்டிஷன்ட் கறிகாய்க் கடை தரமான கறிகாய்கள், சகாயமான (அதாவது, நியாயமான) விலையில் விற்க ஏற்பாடு செய்தால், மூன்று சக்கர சைக்கிள் மீது கறிகாய்த் தட்டுக்களை அடுக்கி வைத்துக் கொண்டு, தெருத் தெருவாகக் கூவி விற்பனை செய்யும் எங்கள் தெருப் பெண்மணியின் கதி?

''அதுக்கென்ன சாமி! வரட்டுமே! எங்ககிட்ட வாங்கறவங்க வாங்காமயா போயிடுவாங்க?''

- சாருகேசி

அட்டையில் : ஜெயந்தி

வண்ணப்படம்: ரவிசங்கரன்



தோசை உண்ண ஆசை!
ஏண்டா கூமுட்டைத் தலையா! இது பெரிய சோழா ஓட்டல் தோசையா? மவனே, தோசையைக் கொடுக்கறியா, இல்லை, வெளியே வந்ததும் கையை ஒடிக்கட்டுமா?
''அதற்கென்ன? முப்பது பைசாவுக்கான தோசையைப் பிய்த்து எடுத்து விட்டு, மீதியைத் தாங்களேன்.''
இது எழுபது பைசா டோக்கன். இதை முதல்ல பிடிங்க. அந்த தோசையைக் கொடுங்க. இப்ப உங்க கைல எழுபது பைசா டோக்கன். என் கைல தோசையைக் கொடுத்துட்டதால இந்த தோசை விலை எழுபது பைசா. எப்படி என் கணக்கு, அண்ணே?
ஏண்டா அபிஷ்டு! முப்பது பைசா இல்லேன்னா என்ன! முண்டம்! சட்னியை கம்மியா ஊத்துடா... சாம்பாரை காய் இல்லாம போடு!! ஒரு எழவும் புரியலையாடா... நிக்கறதைப் பார் கட் அவுட் மாதிரி!
அரிசிக்கு ஐம்பது பைசா, உளுந்துக்கு ஐம்பது பைசாவா இல்லை, உளுந்துக்கு முப்பது பைசா அரிசிக்கு எழுபது பைசாவா? இல்லை அரிசிக்கு முப்பது பைசா, உளுந்துக்கு எழுபது பைசாவா... ஏம்பா முடியைப் பிச்சுக்கறே?
இந்தா இந்த எழுபது பைசா டோக்கனை வச்சுக்க. மீதி முப்பது பைசா டோக்கனை அதோ வரானே அக்கவுண்டண்ட் ஆராவமுதன், அவங்கிட்ட வாங்கிக்க. அக்கவுண்டண்டுனு பேர்... வாய்ப்பாடு கூட சரியா வராது. சீக்கிரம் தோசையைக் கொடு. ஆறிப் போனால் எனக்கு அல்சர் வரும்.
மிஸ்டர்... எழுபது பைசா டோக்கனை நான் 'அஜக்'னு நீட்டினால்.... நீ ஒரு தோசையை 'லபுக்'னு கொடுக்காம நின்னா எப்படி? நோ... டிபன் விஷயத்தில் 'சடக்'னு நடக்கணும்... ஆமாங்.....
ஏம்பா... எங்கிட்ட இருக்கறதே எழுபது பைசா டோக்கன்தான். அதுவும் அட்டெண்டர் முனுசாமிக்குத் தெரியாமல் 'ரைட்' பண்ணிகினு வந்தது. கொடுபா! துன்ற விஷயத்தில பேஜார் பண்ணாத!
''சார், தோசை ஒரு ரூபாய். நீங்கள் வைத்திருப்பது எழுபது பைசா டோக்கன்'' என்று ஒரு கேன்டீன் சர்வர் தோசை தர மறுத்தால், மேற்படி பிரமுகர்கள் அதை எப்படி ரியாக்ட் பண்ணுவார்கள்?
மதி...
கற்பனை பி.ஆர். கண்ணன்

Kalki Shopping Page

சிற்றிடை தன்னை
செவ்வேள் காக்க!

அழகிய இடையை பெற
பருத்த வயிற்றை சுருக்கி
பாங்குடன் திகழ
இடுப்பு வலிகள்
மாதவிடாய் கோளாறுகள் நீங்க

காந்த வயிற்றுப் பட்டை
அணியவும்

அணிய வேண்டிய இடத்தின் சுற்றளவுடன் ரூ. 220/- மணியார்டர் மூலம் அனுப்பி ரெஜிஸ்டர் தபாலில் பெறலாம்.

காந்த சிகிச்சை
ஆராய்ச்சி நிறுவனம்
38/4 சன்னதி தெரு
திருவொற்றியூர்.
சென்னை-600 019.

பரமாசாரியாருக்கு எங்கள்
மனமார்ந்த அஞ்சலி



புன்னகைக்கு ஒரு
விஜயா
பொன் நகைக்கு ஒரு
சாந்தி
மங்கையரின்
அழகுக்கு
அழகு சேர்க்கும்
பொன் ஆபரணங்களுக்குக்
கைராசியான நிறுவனம்

சாந்தி கோல்டு
ஹவுஸ்
72, உஸ்மான் ரோடு, தி.நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 441730

எங்கள் மாதாந்திர சேமிப்புத்
திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.

ஆச்சாரியாள்
பாதங்களுக்கு எங்கள்
நிறுவனத்தின் உளம்
கனிந்த அஞ்சலியைச்
செலுத்திக்
கொள்கிறோம்.

30% மட்டும் செலுத்தி
சொந்த (Approved by Govt.) வீடு
பெறுங்கள். மீதித் தொகையை 15
வருடங்களில் செலுத்தலாம்.

தற்சமயம் எங்கள் (Flat) கட்டுமிடம் :

1. Single/Double Bed Room Flats with car parking,
சாமி நகர் Annexue, II Cross Street, சின்மயாநகர்


2. Single/Double Bed Room
very close to Villivakkam Railway Station
(Proposed Flats)

அணுகவும் :

MARS CONSTRUCTIONS
Builders & Flats Promoters
30, Natesan Street,
(Near Mambalam Railway Station),
T. Nagar, Madras - 17.
Phone : 445393

புத்தம் புதிய டிசைன்களில்
உயர்ரக மதுரை சுங்குடி
புடவைகளுக்கு

RAMACHANDRA



SAREES,
(மதுரை சுங்குடி
புடவைகளின்
உலகம்)


37-B, Arya Gowder Road,
Postal Colony Bus Stop :
West Mambalam, Madras - 33.
Bus Route : 11R; 11J; 11E; 11D; 12G;
49J; 49; 5T; J13; 9A

வழங்குவோர் : ராமசந்திரா சாரீஸ்,
20-B பழைய குயவர்பாளையம்
ரோடு, மதுரை - 9.

எங்களிடம் இப்பொழுது தரமான
வெங்கடகிரி மற்றும் பெங்கால் காட்டன்
புடவைகளும் கிடைக்கும்.

Kalki Shopping Page

சக்திவாய்ந்த உடனடி வலி நிவாரணி



சிரஞ்சீவி பெயின் பாம்

தலைவலி, ஜலதோஷம், மூட்டுவலி, உடல் வலிகள், இடுப்புவலி, சுளுக்கு, அடிபட்ட வீக்கம், முதுகுவலி, கை-கால் வலி, சிறு வெட்டுக்காயம், சொத்தைப் பல்வலி வெயில் கட்டிகள், பூரான் பூச்சி கடிகளின் வலி.

இவைகளுக்கு நொடியில் உடட்பரவி மிக விரைவில் நிவாரணமளிக்கும்.

தயாரிப்பாளர் :
சிரஞ்சீவி பார்மா
சென்னை - 600 005.

விநியோகஸ்தர்கள் :
சக்தி மார்க்கெட்டிங் ஏஜென்ஸி
27, முத்துகாளத்தி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை 600 005
தொலைபேசி : 842550

B. M. SILK SAREES

B. M. சில்க் சாரீஸ்
காஞ்சிபுரம்
பட்டுசேலை
தயாரிப்பாளர் :

5, வடக்கு மாட வீதி,
மைலாப்பூர்,
சென்னை - 600 004.
Phone : 4940291

எங்களின் மாதாந்திர சீட்டு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.

குறிப்பு : அனைத்து பட்டு சேலைகளும் நறி விலைக்கே கிடைக்கும்.

All Credit Cards Accepted

நீங்கள் இல்லாமலா இந்தப் போட்டி ?

18 வாரங்களுக்கு.
(சென்னைவாசிகளுக்கு மட்டும்).

ஒரு சவரன் தங்க நகை பரிசு

7 பெண் பெரிதும் நேசிப்பான்
கணவன் / குழந்தை

இதுவா ? அதுவா ? எழுதுங்கள்

மேலும் விபரங்களுக்கு தி. நகர் பனகல் பார்க்கில் (நல்லி) பஸ் ஸ்டாப் எதிரே உள்ள ஃபாஹிமாஸ் விளம்பரப்பலகையை பாருங்கள்.

ஃபாஹிமாஸ்
ஜுவல் ஹவுஸ்
78, உஸ்மான் ரோடு,
(ரங்கநாதன் தெரு எதிரில்),
தி.நகர், சென்னை 600 017.
போன் : 445744, 446073



சென்னை உஸ்மான் சாலையில் மட்டும்

SIBI ADS



மாசற்ற ஜைமோ

சாதாரணமாக சலவை சோப்புகளில் "பாஸ்பேட்" சேர்ப்பார்கள். இது சுற்றுப்புறச் சூழலுக்கு [illegible]ரி. துணி துவைத்த பிறகு அந்த நீரைத் தோட்டத்துக்குக் கூட விடக் கூடாது! ஆனால் ஜெர்மன் நிறுவனமான ஹென்கெல், ஒரு புதிய பொருளை பாஸ்பேட்டுக்குப் பதில் சலவை சோப்பில் பயன்படுத்தக் கண்டுபிடித்திருக்கிறது. இதற்கு "ஜியோலைட்" என்று பெயர். இதனால் சுற்றுச் சூழலுக்கு மாசு இல்லை. ஹென்கல் நிறுவனம் தற்போது இந்தியா வந்து, தமிழ்நாடு பெட்ரோ பிராடக்ட்ஸுடன் சேர்ந்து, "ஸ்பிக் ஹென்கல் கெமிகல்ஸ்" என்ற புதிய தொழிலகத்தைக் காரைக்காலில் தொடங்கியுள்ளது. இங்கு ஜியோலைட் மட்டுமின்றி அதைப் பயன்படுத்தி "ஜைமோ" சலவை வில்லை சோப்பும் தயாரிக்கப்படுகிறது.

Kalki Shopping Page

தரமிக்க
ராணி சாரீஸ்

RANISAREES
MADURAI-12
R.A.M.

இந்தத் துணி லேபிலைப் பார்த்து
வாங்குங்கள்.
மற்றவை நமது தயாரிப்பு அல்ல.
எங்களின் மாதாந்திர சேமிப்புத்
திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.

கிடைக்குமிடம் :

மதுரை
டெக்ஸ்டைல்ஸ்

2, வெப்பிரகாசம் ரோடு,
பாண்டி பஜார், சென்னை - 600 017.

R.K.N. GOLD COVERING

ஒரிஜினல் சிதம்பரம் கோல்டு கவரிங்

எங்களிடம் 1/2 கிராம், 1 கிராம் செயின்,
நெக்லஸ், வளையல், கம்மல்,
உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

உபயோகித்தபின் எங்களிடம் திரும்பக்
கொடுத்தால் பொருளுக்குத்
தருந்தாற்போல் பணம் கிடைக்கும்.

1 வருடம் முதல் 5 வருடம் வரை
உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

திருமணம் மற்றும் விசேஷ வைப
வங்களுக்கு நகைகள் வாடகைக்குக்
கிடைக்கும். உபயோகித்தபின் பணம்
பெறும் நிபந்தனையுடன் கிடைக்கும்.

வெள்ளி ஜரிகை
உருக்கித் தரப்படும்.
விலைக்கு வாங்கப்படும்.

R.K.N. கோல்ட் கவரிங்
75, ரங்கநாதன் தெரு,
தி. நகர், சென்னை 600 017.
போன் : 445448

fomra & co

GENERATORS & HOME APPLIANCES

24, N.S.C. BOSE ROAD,
(Near Flower Bazar Police Station)
GEORGE TOWN, MADRAS - 600 079.
Phone : 562890/565621/560555/561311


DEALERS IN

Mixies, Wet Grinders, Pressure Cookers, Gas Stove Facial Sauna Pecopp Flycatcher/Air Coolers MILTON Cool & Warm Items Hot Case & Bread Toaster, Hand Dryer, Boss Blender, Cease Fire, Body Massager, Hair Dryer/Water Heater, Gas Lighter, Foot Massager, Refrigerators/Iron Boxes/Laundry Iron.

'GOOD KNIGHT'/BANISH/Jet All out Mosquitos Killer, Ceiling, Pedestal, Table Wall Mounting/ Air Circulators, Exhaust Fan/Immersion Heaters, Ajanta Wall Clock, Voltage Stabilizers, Indoor/Outdoor Antenna/TV Booster, Washing Machine, Generators, Gift items

Two in One & Radio/ALL BRAND BW/COL. T.V.s, PADMINI Gas Stoves
Shriram Honda, Honda, Suzuki Generator Service & Spare Parts Available.
Branch : 69, Purasawalkam High Road, Madras - 7; Phone : 6413550/6413551.

CREDIT CARDS ACCEPTED


109 டிகிரி
கொளுத்துதே!
ஐயோ
தாங்கலியே..
உஷ்
அப்பாடா...
தேர்தல் களம்


மூக்கு சரியில்லையே!
பிளாஸ்டிக் சர்ஜரி
பண்ணிடலாமே...
உங்க மூக்கு மட்டும்
அழகா இருக்குதுன்னு
நினைப்பா..!
ராவ்
பாகிஸ்
-தானுக்கு
போர்
விமான
-ங்கள்
உதவி
கிளிண்டன்
ராக்கெட்
தயாரிப்பில்
இந்தியாவின்
வளர்ச்சி



கல்கி

1994
மே 22
மலர்: 52
இதழ்: 43
பவ
வைகாசி 8



தமிழ்த்திருநாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

பட்டப் பகலில் படுகொலை!

கட்டாவ் மில் அதிபர் ஸுனித் கட்டாவ் பட்டப் பகலில் பம்பாயில் சுட்டுக் கொல்லப்பட்டது, தொழிற்சங்க அமைப்புகள், தொழிலதிபர்கள், அரசு ஆகிய முத்தரப்பினருக்கும் தலைகுனிவை ஏற்படுத்தும் சம்பவம்.

சுனித் கட்டாவ் தமது நெசவாலையை பம்பாய் புறநகர் பகுதி ஒன்றுக்கு மாற்றிவிட வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருந்தார். காரணம் பம்பாயின் மையப் பகுதியில் தற்போது ஆலை அமைந்துள்ள இடம் மிகுந்த மதிப்புடையது. அதை விற்றால் கிட்டத்தட்ட 400கோடி கிடைக்கும். ஆனால் மில்லில் பணியாற்றிய சுமார் ஐயாயிரம் ஊழியர்களில் பெரும்பான்மையினர் இதனை எதிர்த்தனர். அவர்களுக்கு வீடு-வாசலை மாற்றிக் கொண்டு புது இடம் போக விருப்பமில்லை.

சுனித் கட்டாவ், மில் ஊழியர்கள் சங்கத்தின் தேர்தல் நடந்தபோது தலைமைப்பதவிக்கு காங்கிரஸ்காரரான சங்கரராவ் ஜாதவ்வை ஆதரித்தார். ஜாதவ் தலைவரானதும் இடமாற்றத்துக்கு உதவுவார் என்பது எழுதப்படாத ஒப்பந்தம். ஜாதவ்வுக்கு ஒரு குண்டர் படையுடன் தொடர்பு உண்டு என்பது தெரிந்திருந்தும் கூட ஆசையே வென்றது. காங்கிரஸ் அரசும் ஜாதவ்வுக்குத் தன் ஆதரவையோ அவருக்கிருந்த குண்டர் படைத் தொடர்பையோ மறைக்கவில்லை. இதன் பின்விளைவாகத்தான் மற்றொரு எதிரி குண்டர் அமைப்பினரால் கட்டாவ் சுடப்பட்டு உயிரிழந்தார் என்று கருதப்படுகிறது.


ஆகமொத்தம், தொழிற்சங்க நடவடிக்கைகளில் பயங்கரவாதம் புக அனுமதித்தாகி விட்டது. தொழிலதிபர்கள் தங்களுக்குச் சாதகத் தீர்ப்பை பெற தொழிற் சங்கத் தலைவரைத் தாஜா செய்வதோடு அவருக்கு உதவும் குண்டர்களையும் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கவில்லை. காங்கிரஸ் அரசு, தனது கட்சியைச் சேர்ந்தவர்கள் பகிரங்கமாகக் குண்டர்களுடன் குலவுவதை அனுமதிக்கிறது. இதைவிட மோசமான, சோகமான சூழ்நிலை ஒன்று நாட்டில் இருக்க முடியுமா?

படகிலே வந்த எமன்!

சென்னை அருகே பழவேற்காடு ஏரியில் பள்ளிப் பிள்ளைகள் படகு சவாரி செய்யப்போய் பலர் மூழ்கி மாண்ட சம்பவம் உள்ளத்தை உருக்குவதாகும். யாரும் எதிர்பாராத ஒரு விபத்துதான் என்றாலும், பழவேற்காடு ஏரியில் உல்லாசப் படகு விடலாம் என்று அனுமதி அளித்த அரசுக்கு இதில் முழுப் பொறுப்பு உண்டு. அவ்வப்போது படகுகளின் தரம் பரிசோதனைக்கு உள்ளாகியதா? படகோட்டிகளுக்குச் சரியான பயிற்சி தரப்பட்டதா? தப்பித் தவறி விபத்து நேர்ந்தால் உல்லாசப் பயணிகளைக் காப்பாற்றவும் முதலுதவி தரவும் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டனவா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அரசிடமிருந்து சரியான பதில் இல்லை. ஏதோ அனுதாபம் தெரிவித்து நஷ்ட ஈடாகப் பணத்தை வாரி விட்டாலே எல்லாம் சரியாகப் போய்விட்டதுபோல் அரசு நினைப்பதாகத் தோன்றுகிறது.

படகோட்டிகள் செய்தது குற்றம்தான், தண்டிக்கலாம். அதைவிடப் பெரிய குற்றம் சுகாதார நிலையத்தில் இருந்திருக்க வேண்டிய டாக்டர்கள் இல்லாமல் போனது. கடும் நடவடிக்கை தேவை. சரி. ஆனால், எதிலும் மெத்தனம், இதிலும் அலட்சியம் என்று செயல்படும் அரசை யார் தண்டிப்பது? பிள்ளைகளைப் பறிகொடுத்த பள்ளி நிர்வாகம் கூடப் பயந்து போய் முதல்வருக்கு நன்றியல்லவா சொல்கிறது - அதுவும் காசு கொடுத்து விளம்பரம் செய்து! சடலங்களைச் சீக்கிரம் ஒப்புவித்ததற்கு நன்றியாம்! வெட்கக்கேடு!

விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட வேண்டிய, இதைவிட முக்கியமான சம்பவம் ஒன்று இருக்க முடியாது. அரசு அமைத்தால் கண் துடைப்பாக இருக்கும். எதிர்க்கட்சிகள், சுதந்திர சிந்தனை உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அமைக்க வேண்டும். செய்வார்களா? அல்லது குடுமிப்பிடி சண்டை, இடைத் தேர்தல் கவலைகளிலேயே மூழ்கி, கவனிக்காமல் விடுவார்களா?



★ ஆட்சியாளருக்கு லஞ்சம் கொடுப்பவர் மீதும், லஞ்சம் வாங்குகிற ஆட்சியாளர் மீதும், அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்.

★ கூலியாளின் வியர்வை உலரும் முன் அவருடைய கூலியைக் கொடுத்து விடுங்கள்.

★ ஓர் அந்நியப் பெண் மீது திடீரெனப் பார்வை பட்டுவிட்டால் உடனே பார்வையைத் திருப்பிக் கொள்ளுங்கள். அவள் மீது இரண்டாவது பார்வையைச் செலுத்தாதீர்கள். முதல் பார்வை உம்முடையது. இரண்டாவது பார்வை உம்முடையதன்று (மாறாக, ஷைத்தானுடையது).

★ மது அருந்துபவர்கள் நோயுற்று விட்டால் அவர்களை நலம் விசாரிக்கச் செல்லாதீர்கள்.

★ நான் தொழுகைக்காக வருகிறேன். என் உள்ளம் நீண்ட நேரம் தொழவைக்க வேண்டும் என்று விரும்புகிறது. பின்னர் ஏதேனுமொரு குழந்தை அழுகின்ற ஓசை காதில் விழுகின்றது. எனவே தொழுகையைச் சுருக்கிக் கொள்கிறேன். ஏனெனில் தொழுகையை நீண்டதாக்கிக் குழந்தையின் தாயைச் சிரமத்தில் ஆழ்த்திட நான் விரும்பவில்லை.

★ ஒரு தீயவன் புகழப்படும்போது அல்லாஹ் கோபமடைகிறான். அதனால் இறை அரியணை - அர்ஷ் நடுங்க ஆரம்பிக்கிறது.

★ உங்களில் எவராவது மற்றவரைப் புகழ்ந்தால், அப்படிப் புகழ்வது அவசியமாயின் இவ்வாறு கூறட்டும்: "நான் இன்னார், இப்படிப்பட்டவர் என்று கருதுகின்றேன். அல்லாஹ்வே அறிந்தவன்."

★ ஒப்பந்தக்காரன் (முஸ்லிம் அல்லாத குடிமகன்) ஒருவனுக்கு ஒரு முஸ்லிம் அநீதியிழைத்து விட்டாலோ, அவனது உரிமையைப் பறித்தாலோ, அவனது சக்திக்கு மீறிய சுமைகளை அவன் மீது சுமத்தினாலோ, அவனது பொருள் எதையேனும் பலவந்தமாக எடுத்துக் கொண்டாலோ, மறுமை நாளில் இறைவனின் நீதிமன்றத்தில் அந்த முஸ்லிமுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வழக்கில் அந்த முஸ்லிம் அல்லாத குடிமகனின் வழக்கறிஞராக நான் வாதாடுவேன்!

★ உங்களில் ஒருவரின் பணியாள் உணவு சமைத்து, அந்த உணவைச் சமைப்பதற்காக வெப்பம், புகை ஆகிய சிரமங்களைச் சகித்துக் கொண்டு, அந்த உணவை அவரிடம் கொண்டு வருகிறான் எனில், எஜமான் அவனைத் தன்னுடன் உட்கார வைத்துக் கொண்டு இருவரும் சேர்ந்து உண்ணட்டும்.

அண்ணல் நபிகளார் வாழ்விலே. (நபி மொழித் தொகுப்பு) வெளியீடு: இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், 78, பெரம்பூர் நெடுஞ்சாலை சென்னை 600 012. விலை ரூ.40.00.



வயிற்று

சென்னாலூர் மண்ணை மிதித்ததுமே மனம் ஜிவ்வென்று பறந்தது. நன்னிலம், ஸ்டேஷன் பெயர்ப் பலகையோடு சரி. வழக்கில் எல்லாம் சென்னாலூர்தான். ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும் அந்தக் குதிரை வரிசை வண்டிகளைத் தேடினேன். எத்தனை வருஷங்களாகி விட்டன! இன்னும் குதிரை வண்டிகள்? மனம் ஆசைப்பட்டது. இன்று ஏரோப்ளேனில் பறக்கிறேன். ஆனால் அன்று ராவுத்தர் குதிரை வண்டியில் போனபோது ஏற்பட்ட மகிழ்ச்சி... அடடா, அது யாருக்குக் கிடைக்கும்?

'ராவுத்தர் வண்டிதான் வாடிக்கை' என்பாள் அம்மா. வாடிக்கையென்ன, வாடிக்கை? வருஷத்துக்கு ஒருதரம் உற்சவத்துக்கு வருவோம்... அவ்வளவுதான். சென்னாலூரிலிருந்து திருப்புகலூர் வரை போக, தலைக்கு நாலணா... அப்போது நயா பைசாவெல்லாம் கிடையாது. ராவுத்தர் வண்டியைப் பொறுத்த வரையில் எனக்குத் தலை கிடையாது.

''திருக்கண்ணபுரமா...?'' சக பயணி ஒருவர் கேட்டார்.

அவருக்கு எப்படித் தெரிந்தது? ஆருடம் தெரியுமோ?

''கண்ணபுரம் பஸ் போயிருக்கும்... இதோ வருதே, நாகப்பட்டினம் வண்டியிலே போனால் திருப்புகலூரிலே இறங்கிப் போயிடலாம்.''

எனக்கு குதிரை வண்டியைப் பற்றிக் கேட்க வெட்கம். சம்மதத்தைத் தலை அசைவில் காட்டி அவரைப் பின் தொடர்ந்தேன்.

அந்த வயசில் எனக்கு கோயில், உற்சவம் எல்லாவற்றையும் விட தினந்தோறும் அங்கு கிடைக்கும் சாப்பாடுதான் தனிக் கவர்ச்சி. அதுவும் அந்தக் காலத்தில் மெட்ராஸில் ரேஷனில் கிடைக்கும் புழு அரிசியும், பிரேசில் கண்ணாடி அரிசியும் சாப்பிட்ட நாக்குக்கு அந்த அன்னதான சாப்பாடு அமிர்தம்.. அதற்கு மேலே... மெட்ராஸில் மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் சாப்பிட வேண்டும்... இங்கே மூக்குப் பிடிக்கச் சாப்பிடலாம்....

அன்னதானம் என்று கூடச் சொல்ல மாட்டார்கள்... ததியாராதனம்... வெளியூரிலிருந்து உற்சவத்துக்கு வருகின்றவர்களுக்கு என்றுதான் பேர்.. திருக்குளத்தைச் சுற்றி நாலு தெருவிலும் ஒரு வீட்டிலும் அடுப்பு புகையாது. வந்து சாப்பிடாதவர்களுக்கு வீட்டுக்குச் சாப்பாடு போகும்.

வடை, பாயசம்...விசிறிக் கொள்ள புது விசிறி.. சாப்பிட்ட கூலியாக(வா?) எட்டணா.. நாலணா.. அதிலே காரியஸ்தர்களுக்குக் கஞ்சத்தனம்.

பையன்களுக்கு காசு கிடையாது... விசிறி இல்லை...லட்டு, அப்பளமெல்லாம் பாதிப் பாதி.. பெரியவர் பார்த்து விட்டால் கத்துவார்.

''எலை வஞ்சனை ஏன்? கொழந்தைகளுக்குத்தான் நிறைய போடணும்.''

காரியஸ்தர்கள் மூஞ்சி பேஸடிக்கும்.

''என்ன சார், பழைய ஞாபகமா?'' மறுபடியும் நண்பர் ஆருடம்... மன வாசிப்பு.

'ஆங்.. அதெல்லாம் ஒன்றும் இல்லை...'' சமாளித்தேன்.

ஆர்.பி. சாரதி

இருவரும் திருப்புகலூரில் இறங்கினோம்.

திருக்கண்ணபுரம் சௌரி ராஜப் பெருமாள் தேவஸ்தானம் எழுத்தில் அன்புடன் வரவேற்றது.

என்னை வரவேற்க ஊரில் இப்போது யார் இருக்கிறார்கள்? பாட்டி, தாத்தா, மாமி, மாமா யாரும் இல்லை. மனம் கனத்தது.

''உங்களுக்கு நினைவிருக்கிறதா? அப்போதெல்லாம் உற்சவத்தில் சாப்பாடு போடுவாரே ராஜகோபாலன்...'' நண்பர் வழிநடையை கலபமாக்க முயன்றார்.

''ஆமாம்...பேர் தெரியாது...பெரியவர் என்று சொல்வார்கள்.''

''சொல்றது என்ன? உண்மையிலேயே பெரியவர் சார். இந்த வட்டாரத் திலே எங்கே உற்சவம் நடந்தாலும் வர்ற ஜனங்களுக்கு சாப்பாடு போடறது அவர் தான்.''

''எனக்கு நம்ம ஊரிலே சாப்பாடு போடறது மட்டும்தான் தெரியும்!''

''நீங்க வெளியூர்...உங்களுக்குத் தெரியாது... அவர் சாப்பாடு சாப்பிடாத வயிறே இந்த வட்டாரத்திலே இல்லை.''

''அத்தனை வயிறும் வாழ்த்துமே!''

''வயிறு வாழ்த்தி என்ன? கடைசியிலே குழி நெலமில்லே!''

''அய்யோ, அப்படியா? வண்டி வண்டியா, மூட்டை மூட்டையா அரிசி சாமான் எல்லாம் வந்து எறங்குமே?''

''குத்தகைக்காரங்க சரியா நெல்லு அளக்கலை...காஞ்சு போச்சுன்னாங்க... இன்னும் என்னென்னவோ சொன்னாங்க.''

''பாவம்!''

''கிடைத்ததை வாங்கி, சாப்பாடு, அன்னதானம்னு தொடர்ந்து செய்திட்டே போனார்.''

''அப்புறம்?''

குத்தகைக்காரங்க கிட்டே மல்லுக்கு நிக்க முடியாம நெலத்தை ஒண்ணுக்குப் பாதி விலைக்கு வித்தார்.'' நான் உண்மையாகவே வியந்து போனேன்.

''சொந்த நெலத்திலே வெளைஞ்ச அரிசின்னு போட்டதுபோக, அதே அரிசியை அந்தப் பழைய குத்தகைக்காரங்க கிட்டேயே வெலை கொடுத்து வாங்கி வந்து தானம் செய்தாரே... அதுதான் கொடுமையிலேயும் கொடுமை!''

நாங்கள் ஊரை நெருங்கிவிட்டோம். கோபுரம் தெரிந்தது. கன்னத்தில் போட்டுக் கொண்டேன்.

''என்ன சார் அவசரமா? இப்பத்தான் வர்றீங்களா?'' என் வழித்துணை நண்பருக்கு வேண்டியவர் போலிருந்தது.

வாசல் திண்ணையிலிருந்து குரல் வந்ததும், நண்பர் எனக்கு விடைகொடுத்தார்.

"இதுவரை நூறு இன்டர்வியூக்குப் போயிருக்கேன்னு சொல்றியே, ஏன் உனக்கு வேலை கிடைக்கலை?"

"எல்லோரும் மடத்தனமா கேள்வி கேட்கிறாங்க சார்!"

– எஸ். மாரியப்பன்

''அப்ப, அப்புறம் பார்க்கலாம்!''

அவர் போய்விட்டார்.

பாதியிலேயே நிறுத்திவிட்டுப் போய் விட்டாரே! அதற்கப்புறம் என்ன நடந்தது? யாரைக் கேட்பது?


உற்சவத்தில் அந்த சாப்பாடு உண்டா, இல்லையா?

வடை, பாயசம், விசிறி, நாலணா-எட்டணா?

''காசை விட்டெறிந்தால் சாப்பாடு தானா கிடைக்காது?'' என் மனைவி அடிக்கடி சொல்வதுண்டு. இன்று அவள் சொல்வது சரியாக இருக்கலாம். ஆனால் அன்று? ஓட்டலேது? டீக்கடை ஏது? சாப்பாட்டுக் கவலை இருந்தால் திருவிழாவுக்கெல்லாம் வரமுடியுமா? நான் ஸ்டார் ஓட்டல்களில் தங்கியிருக்கிறேன். ஓட்டல் தங்கலும் உற்சவமும் என்னைப் பொறுத்தவரையில் காபரே டான்சும் கம்பன் விழாவும் போலத்தான்.

நான் என் நண்பன் அழகுக்கு எழுதியிருக்கிறேன். அவன் இப்போது இங்கே இருக்கிறானோ, இல்லையோ? என்னோடு படித்தவன். கடிதம் போட்டுவிட்டு இடீரென்று கிளம்பிவிட்டேன். யாராவது இருக்க மாட்டார்களா? நான் படித்து விட்டு பம்பாய்க்கு வேலையாகப் போய்விட்டேன். அழகு கண்ணபுரத்தில் நிலம் நீச்சு என்று செட்டில் ஆகிவிட்டான். எங்களுக்குள் கடிதப் போக்குவரத்தோ, வந்து போவதோ அதிகமில்லை என்றாலும் வேறு வேலையாக மெட்ராஸ் வந்தபோது கண்ணபுரத்தைப் பார்க்காமல் போக விருப்பமில்லை. அதுவும் அம்மா, பட்டரிடம் சொல்லி கருடவாகன சப்பரத்தில் ஏற்றி விட்டு விடுவாள். மற்றவர்கள் நடந்து வரும்போது நான் மட்டும் கருடன் காலடிக்குப் பக்கத்தில் கம்மென்று உட்கார்ந்து விடுவேன். மறுநாள் அவர்களையெல்லாம் பெருமிதத்தோடு பார்ப்பேன். நாளை கருடசேவை. சப்பரத்தில் ஏறி உட்கார முடியாது. கூட நடந்துவர வேண்டும்.

மாடவீதியைத் தாண்டி வடக்கு குளக் கரைத் தெருவையடைய வேண்டும். அந்தத்



தெரு இரண்டும் சந்திக்கும் முனையில் எவ்வளவு பெரிய கட்டிடம்! ''அழகு விலாஸ் போர்டிங் அண்ட் லாட்ஜிங்'' என்ற போர்டு. உள்ளே ஜே ஜே என்று கூட்டம். கல்லாவில் உட்கார்ந்திருந்த அழகுக்கு கழுத்தே தெரியவில்லை. என்னைவிட எவ்வளவோ ஒல்லியாயிருந்தான். 'அழகு' என்று குரல் கொடுத்தேன்.

அவனே தான்!

''வா, வா. இப்போதான் வர்றியா?'' அழகு எழுந்திருக்க முடியாமல் எழுந்து வந்தான். என் கைப்பையை வாங்கிக் கொண்டான். நானும் கல்லா அருகில் அழகு பக்கத்தில் ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டேன்.

''காபி சாப்பிடு.. வீட்டுக்குப் போவோம்... ஒரு ஐந்து நிமிஷம்.''

சாப்பிடுபவர்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். முன்பு காசு கொடுக்காமல் சாப்பிட்டுவிட்டு நாலணா, எட்டணா வாங்கிக் கொண்டோமே, அதே இடம்! அப்போது போலவே கூட்டம். அங்கே ஆறேழு சர்வர்களுக்கிடையே ஒரு ஆள் மட்டும் என்னை மிகவும் கவர்ந்தான். காரணம் அவன் அழகு மட்டும் என்று சொல்ல முடியாது. அவன் சுறுசுறுப்பு... சுறுசுறுப்பா? எந்திர மனிதனாகச் சுழன்று கொண்டிருந்தான்... அவனுக்கு ஒதுக்கப்பட்ட மேஜைகளை மட்டுமல்ல... களைத்துப் போகும் மற்றவர்களுக்கும் ஓடி ஓடி உதவி செய்தான்... எனக்கும் காபி கொண்டு வந்தவன் அவன்தான். கல்லாவுக்கருகில் ஒரு மேஜை. அங்கே ஒரு வயதான பெரியவரும் அவர் மனைவியும் வந்து உட்கார்ந்தார்கள். அவர் கண்கள் விலை விவர போர்டை முதலில் நோக்கின. பிறகு இடுப்பைத் தடவினார்.

''இரண்டிரண்டு இட்லி'' பெரியவர் சொன்னார்.

''இப்போது சாப்பாட்டு டயம்... இட்லி இல்லையே!'' அந்த சர்வர் சொன்னார்.

அவர்கள் எழுந்து கொண்டார்கள்.

''ஏன், சாப்பாடு வேண்டாமா?''

''உற்சவத்தில் அன்னதானம் உண்டு என்று சொன்னார்கள்!'' மெல்ல சொல்லியபடி எழுந்தார் முதியவர்.

எனக்குப் பாவமாயிருந்தது.

அந்த சர்வர் அவர்களை எழுந்திருக்க விடவில்லை.

''பரவாயில்லை...நீங்கள் சாப்பிடுங்கள்!''

''வேண்டாம்'' அவர்கள் வாய்தான் சொல்லியது.

''ரொம்ப வருஷத்துக்கு முந்தி வந்தது. அப்போ சாப்பாட்டுக் கவலை இல்லை''

''இப்பவும் உங்களுக்கு சாப்பாட்டுக் கவலை இல்லை. நீங்க இங்கே இருக்கற வரை தாராளமா வந்து சாப்பிடலாம்.''

''அப்படிக் கூட ஓட்டலில் ஏற்பாடு இருக்கா?''

''இங்கே இருக்கு!''

இலைகளை விரிக்க ஆரம்பித்தார்.

நான் அழகைப் பார்த்தேன்.

அழகு என்னை அழைத்துக் கொண்டு வெளியேறினான். பில் போடுபவரே கல்லாவையும் பார்த்துக் கொண்டார்.

''அந்த சர்வர் யார் தெரியுமா?'' அழகு கேட்டான்.

நான் மௌனம் சாதித்தேன்.

''படிப்பு பி.காம்.''

''வேலை கிடைக்கலையா?''

''கெடைச்ச வேலையை.. கூப்பிட்டுக் கொடுத்த வேலையை வேண்டாம்'னு இங்கே வந்தவன், கல்யாணம் காட்சி எதுவும் செய்துக்கலை.''

''இது சொந்த ஊரா?''

''இல்லை..இங்கே உற்சவத்திலே முன்னே அன்னதானம் செய்வாரே...''

''ராஜகோபாலன்...'' நண்பர் சொன்ன பேர் நினைவுக்கு வந்தது.

''ஆமாம், அவர் பையன்தான் இவன்... ரொம்ப வருஷம் கழிச்சுப் பொறந்த ஒரே பையன்.''

''அவர் சொத்தெல்லாம் அன்னதானத்திலேயே போயிட்டுதாமே....''

''ஆமா..சொத்து சொகத்தையெல்லாம் வித்து தொடர்ந்து செய்தார்...இந்த ஓட்டல் இடம் கூட அவர் வித்ததுதான்.''

''அப்பா செய்த தான தர்மத்தை, அன்னதானத்தைத் தொடர சொத்து சொகம் இல்லை... நான் சர்வராயிருந்தாவது பசின்னு வர்றவங்களுக்கு சாதம் போட உதவி செய்யுங்கோ''ன்னான்.

''அவனுக்கு என்ன சம்பளம்?''

''சம்பளம் வாங்கறதில்லை... ஓட்டலிலேயேதான் சாப்பாடு..தங்கல்... இப்போ பார்த்தியே ரெண்டு பேர்... அதுமாதிரி யாராவது வந்தால் 'அண்ணா, என் கணக்கு'ன்னு சொல்லுவான்.''

எனக்கு வரண்டுபோன முடி கொண்டான் ஆற்றில் பெண்கள் ஊற்றில் ஜலம் எடுப்பது நினைவுக்கு வந்தது.

நரகமான நகரம்

6

மேம்பாலத்தின் மீது நின்று சுட்டவன், பிஸ்டலை மறைத்துக் கொண்டு விரைந்து சென்று மறைந்தான். பிரகாஷ் குனிந்து கோகுலை உலுக்கினான். என்ன செய்வது என்று அதிர்ந்து போய், நிதான மிழந்து எழுந்தான். அப்போது அவனுடைய ஷர்ட் பாக்கெட்டிலிருந்து எகிறி விழுந்தது அவனுடைய பர்ஸ். அதை அவன் பதற்றத்தில் கவனிக்கக்கூட இல்லை. நான்.... நான் என்ன செய்ய வேண்டும்? குழம்பினான். கூட்டம் கூடி விட்டது. பாயும் புல்லட்டின் 'ட்ய்ங்க்' ஒலி நிறையப் பேரைக் கவர்ந்திருந்தது!

''க்யா ஓகயா... க்யா ஓகயா?'' இவை தவிர வேறு எந்த வார்த்தையையும் அவர்கள் உபயோகப் படுத்தவில்லை. ஒரே ஒரு பான் கடைக் காரன் மட்டும் இந்தியில் தெளிவாகச் சொன்னான்:

''நான் பார்த்தேன்! மேம்பாலத்திலிருந்து ஒருவன் சுட்டான். நான் பார்த்தேன்.''

''பிரகாஷுக்குக் கொஞ்சம் ஆறுதலைத் தந்தன அந்த வார்த்தைகள். எங்கே கூட்டம் தன்னைப் பிடித்து.... கோகுலின் மரணத்துக்காகப் பழி வாங்கி விடுமோ என்று பயந்தவனுக்குக் கொஞ்சம் தெம்பு பிறந்தது. பான்கடைக்காரன் இவனிடம் கேட்டான்:

''உங்களுக்குப் பழக்கமான ஆளா?''

''யார்...?''

''செத்த இந்த ஆள்...''

''இல்லை...''

''உங்க கூட பேசிட்டு இருந்த மாதிரி தெரிஞ்சது?''

''இல்லையே...'' பொய் சொன்னான்..பிரகாஷ் அங்கே தொடர்ந்து நிற்பது தவறு என உணர்ந்து கிளம்பி நடந்தான். ஒரு டாக்ஸி அமர்த்திக் கொண்டு பானு ஹோட்டலை அடைந்தான்.

ரிசெப்ஷனில் நெடுநேரமாகக் காத்திருந்தவர் போல் பாலேகர் இவனைக் கண்டதும் கோபமாக எழுந்தார்.

''ஏன்..லேட்?''

''மறைப்பதால் ஒரு பயனுமில்லை என்று தோன்றவே ''ஸ்டேஷன் பக்கம் ஒரு மர்டர் சார்...'' என்றான்.

''என்னது!'' -மறுபடி அமர்ந்தார்.

''என் கண் முன்னால் நடந்தது. மேம்பாலத்திலிருந்து ஒருவன் சுட்டான், என் பக்கத்துல நின்னுகிட்டிருந்த ஆசாமியை.''

''உனக்குத் தெரிஞ்ச ஆளா?''

''ஊஹும். ரெண்டு பேரையுமே தெரியாது!'' இப்போதும் பொய் சொன்னான்.

''அப்போ நடந்ததை அப்படியே மறந்துடு. இல்லாது போனால் போலீஸ் உன்னை சந்தேகிக்கும்; வீண் தொந்தரவு.''

பிரகாஷ் அவரையே பார்த்தான்.

அவனிடமிருந்து அந்த 'சான்டுக்' சூட்கேஸை வாங்கிக் கொண்ட பாலேகர், அவனை ரிசெப்ஷனிலே நிறுத்தி வைத்து விட்டு லிஃப்டில் மேலே போனார்.

பிரகாஷுக்கு மெல்ல மெல்ல ஒரு காய்ச்சல் வந்துகொண்டிருந்தது. நிறைய பொய் சொல்லிவிட்டேன். முதலில் ஷ்யாம் சுந்தரின் திட்டத்தைப் பாலேகர், அஜய் போன்றவர்களிடம் சொல்லாமலிருந்ததே தப்பு. தொடர்ந்து சின்னச் சின்னதாய்ப் பல பொய்கள். ஷ்யாம் சுந்தரின் திட்டம், கோகுல் அவனுடைய தோழன் போன்ற நிஜங்களை போலீஸில் சொல்லி விடலாமோ? சொன்னால் என்னைக் காவலர்கள் தொடர்வார்கள். நிஜ குற்றவாளியை வலை வீசிப் பிடிக்கும்வரை என்னை நோண்டு

வார்கள். இப்படியே விட்டுவிடுவது நல்லது!

பாலேகர் அவனை அழைத்துக் கொண்டு வெளியே போனார். காரின் முன் இருக்கையில் இரண்டு பேரும் அமர, பாலேகர் சாவி நுழைத்து ஸ்விட்சைத் திருகினார்.

அந்தேரியிலிருந்து காட்கோபர் வந்தார்கள். ஷில்பா மெடிக்கலில் போய் தங்கள் உற்பத்தியின் லாப் டெஸ்டை விரைவில் முடித்து அறிக்கை தருமாறு வேண்டிக் கொண்டார்கள். குர்லாவில் ஒரு வயதானவர்கள் மருத்துவமனையில் அறங்காவல் தலைவர் என்று ஒரு முஸ்லீம் பெரியவரை பாலேகர் பிரகாஷ்'க்கு அறிமுகம் செய்தார்.

அதன் பிறகு கோகலே ரோடு வந்தார்கள். ஜண்டு பார்மச்சுடிக்கல்ஸின் பிரமாண்டக் கட்டிடத்தின் எதிர்ப்புறம் ஒரு சின்ன மெடிக்கல் ஸ்டோரின் சொந்தக்காரரான ஒரு சர்தாரை பிரகாஷ்'க்கு அறிமுகப் படுத்தினார்.

மதியம் மூன்றுமணிக்கு கல்பாதேவி அலுவலகம் வந்தார்கள். சேல்ஸ் கேபினில் அமர்ந்து டிபன் வாங்கிவரச் சொல்லி சாப்பிட்டுப் பசி அடங்கிய சமயம் அஜய் கூப்பிட்டான். ''உட்கார் பிரகாஷ்! பாலேகர் ஸாஹிப் என்னவோ சொன்னார்?''

''நான் அந்த ஸ்தலத்தில் இருந்தது உங்களுக்கும் பாலேகருக்கும் இப்போ தெரியும். வெளியே விடவேண்டாம், ஸார்... ப்ளீஸ்.''

''அதையேதான் நானும் சொல்றேன் பிரகாஷ்! வெளியே விடாதே! ஒருவேளை போலீஸ் உன்னை மோப்பம் பிடிக்க வந்துட்டாலும் எனக்கு தெரியாதுன்னு சொல்லிடு. நம் ஷில்பா கம்பெனி ஒரு மர்டர் கேஸ்ல சம்பந்தப்படும் வேளையில் நமக்கு இருக்கும் நல்ல பெயர் போய்டும் பார்...''

மீண்டும் சேல்ஸ் கேபினுக்கு வந்தான். ஏ.சி. குளிரைக் கண்மூடி அனுபவித்தான். அப்போது பியூன் வேகமாக வந்தான்.

''ஸாஹிப்..ரீட்டா மேடம் ஐம்பது ரூபாய் கேட்டாங்க...''

''எதுக்கு?''

''அவசரமாம். நாளைக்கே தந்துடுவாங்களாம்.'' உதவும் எண்ணத்தோடு பாக்கெட் பக்கம் கையைக் கொண்டு போனவன் அதிர்ந்தான். பாக்கெட்டில் பர்ஸ் இல்லை!

''மேடம் கிட்டே... பர்ஸை மறந்து வீட்டில வைச்சிட்டு வந்துட்டதாகச் சொல்லு!''

பியூன் போனபின் திக்திக்கென்று இதயம் தடதடக்க யோசித்தான். எங்கே விழுந்தது? எப்படி? கணிக்க முடியவில்லை. 'ஒருவேளை கோகுல் கொலையுண்ட அந்த இடத்திலேயே தவறவிட்டு விட்டேனா?'

அந்தேரி போலீஸ் ஸ்டேஷனுக்கு, செய்தி கிட்டியவுடனேயே இன்ஸ்பெக்டர் ஹனுமந்த் குமார், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவருடனும் இரண்டு கான்ஸ்டபிள்களுடனும் கருநீல வேனில் புறப்பட்டுப் போனார். இறந்தவனை ஏகப்பட்ட பேர் வந்து பார்த்த வண்ணமும், திரும்பிப் போன வண்ணமும் இருந்தார்கள். பான்கடைக்காரன் மட்டும் சிலுப்பிக் கொண்டு அங்குமிங்கும் அலைந்தான்.

சடலம் அர்த்தமில்லாமல் கால்களை வளைத்துக் கொண்டும், கைகளை மார்பிலும், வயிற்றிலும் போட்டுக் கொண்டும் கிடந்தது. கண்கள் அந்தக் கடைசி நேரப் பார்வையில் எதையோ யோசிப்பதுபோல் நிலை குத்தி நின்றன. உடலின் நிறம் மாறிக் கொண்டிருந்தது.

வானம் பார்த்துக் கொண்டிருந்த பிரேதத்தின் மார்பின் இடதுபுறம் பெரிய பொட்டான அளவில் குண்டடிபட்ட இடம் இன்ஸ்பெக்டரின் கவனத்தை ஈர்த்தது. அந்த இடத்தைச் சுற்றிலும் இரத்தம் காய்ந்து போயிருந்தது. பான்கடைக்காரனின் பரபரப்பு கண்டு அவனை அருகில் அழைத்தார். இந்தியில் உரையாடினார்கள்:

பெனிட்டோ குமார்



''யார் இது?''

''தெரியலை...''

''எப்படி... யார் கட்டது?''

''மேம்பாலத்திலிருந்து ஒருவன் கட்டான். கட்டுட்டு ஓடினான். நான் பார்த்தேன்.''

''இறந்தவன் கூட யாரும் வரலையா?''

''அருகில் ஒரு நபர் நின்றான் சார். அவன் கூட இந்த ஆள் பேசிக்கிட்டிருந்தது போலத்தான் தெரிஞ்சது. ஆனால், நான் கேட்டதுக்கு அந்த ஆள் எங்கிட்டே பேசலை.... எனக்கு இவனை யாருன்னே தெரியாது'ன்னு சொன்னான்.''

''எங்கே... அந்த ஆசாமி?''

''இங்கேதான் நின்றான். இப்ப காணும். நழுவிட்டான்.''

''எப்படி இருந்தான் அந்த ஆள்?''

''இளைஞன். இருபத்தைஞ்சு வயசுதான் இருக்கும். கட்டுமஸ்தான உடம்பு. அழகாய் இருந்தான். நல்ல நிறம்.''

''என்னவும் வச்சிருந்தானா?''

''சூட்கேஸ் ஒன்று வச்சிருந்தான். டை கட்டியிருந்தான். சேல்ஸ் மேன் மாதிரி...''

''அவனைக் கண்டால் அடையாளம் காட்ட முடியுமா?''

''முடியும் சார்...''

அப்போது சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டரின் அருகில் வந்து நின்று ''போட்டோகிராபர், 'லாப்' ஆட்கள் வந்துட்டாங்க!'' என்றார்.

போட்டோகிராபர் முட்டங்கால் போட்டும், நீண்டு வளைந்தும் நிறைய படங்கள் எடுத்தார். அப்போது உடனிருந்து பார்த்த இன்ஸ்பெக்டர்....பிரேதத்தின் அருகில், அக்குள் பக்கமாத் தரையோடு ஒரு பர்ஸ் இருப்பதைக் கண்டு கொண்டார். அதனைக் குனிந்து எடுத்தார். மனதில் சின்னதாய்ப் புன்னகை வேரூன்றியது!

பர்ஸ் திறந்து ஒரு கார்டை எடுத்து நோக்கினார். 'ஷில்பா பார்மசூடிக்கல்ஸ்' என்று நீலக் கலரில் கம்பெனியின் பெயர் அடிக்கப்பட்டிருக்க, அதற்கு மேலே 'எஸ்.டி.பிரகாஷ்' என்று பெயர் பதிந்திருக்க.. சப்-இன்ஸ்பெக்டரை அழைத்தார்.

''இறந்தவர் பெயர் பிரகாஷ். கல்பாதேவியில் உள்ள கம்பெனியில் ரெப்ரெசென்டேடிவ் வேலை. இங்கே எங்கே வந்தான். எப்படிக் கொல்லப்பட்டான் என்பதைக் கண்டுபிடிக்கிறது நம் வேலை...''

''ஆம்புலன்ஸ் வந்துருச்சு சார்...''

''ஓ.கே. நான் ஸ்டேஷன் போறேன். பிரேதத்தை ஜி.எச்சுக்கு அனுப்பிச்சுட்டு வாங்க.''

''சரி சார்...''

போஸ்ட் மார்ட்டம் செய்ய கோரிக்கை விடுத்து எழுதிக்கொடுத்து விட்டு சப்-இன்ஸ்பெக்டர் அரைமணி நேரத்தில் ஸ்டேஷன் வந்து விட்டார். அப்போது அவர் ஒரு துண்டுக் காகிதம் கொண்டு வந்தார். அளவில் ரொம்பச் சின்ன வெள்ளைக் காகிதம்.

''என்ன அது?''

''அவனோட ஷர்ட் பாக்கெட்டில் இருந்தது ஸார்!''

காகிதத்தை வாங்கிப்படித்த இன்ஸ்பெக்டர் அதன் அர்த்தம் விளங்காமல் விழித்தார்.

ஒரு ரகமான நடனமாடும் பாவனையில் ஆங்கில எழுத்துக்கள் வேயப்பட்டிருந்தது. நிச்சயமாக போதையில்தான் ஒருவன் இதை எழுதியிருக்க வேண்டும்.

''விஷ்ணு! என்ன எழுதியிருக்கிறது! விளங்கமாட்டேங்குது! ட்ரக்-அடிக்ட்கள் தான் இந்த மாதிரி எழுதுவாங்க.. 'நர்கோட்டிக் செல்' ஆளுங்ககிட்டே கொடுத்தால் ஏதாவது விஷயம் கிட்டும்.''

இன்ஸ்பெக்டர் தாளைப் பத்திரப்படுத்திக் கொண்டார்.

நான்கு மணி அளவில் ஹனுமந்த்குமாரும், விஷ்ணுவும் போலீஸ் வேனில் ஷில்பா கம்பெனி நோக்கிப் பயணமானார்கள்.

போலீஸ் உடையைக் கண்டதுமே ரிசப்ஷன் பெண்மணி பயபக்தியுடன் உபசரித்தாள்.

''எம்.டி.இல்லையா?''

''அவர் நிங்களும், வியாழனும்தான் வருவார்.''

''கம்பெனியில் அடுத்தாப்பல யாரு?'' இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''பாலேகர் ஸாஹிப். கமெர்ஷியல் மேனேஜர்.

அவள் இன்டர்காம் பட்டனைத் தட்டி பாலேகருடன் பேசினாள். பிறகு அவரோட கேபினுக்கு அழைக்கிறார். நேரப் போங்க, வலப்பக்கம் ரெண்டாவது கேபின்.''

இருவரும் போலீஸ் மிடுக்குக் கொஞ்சமும் குறையாமல் நடந்தார்கள். கேபினின் உள்புறம் 'ம்ம்ம்' என்ற சன்னமான குரலில் ஏ.சி. பாலேகர் இருவரையும் அமரச் சொல்லிவிட்டுப் பின்னரே உட்கார்ந்தார். ''என்ன விஷயம்? கேளுங்க...''

''உங்களோட தயாரிப்புகள் என்ன?''

''ஜீவாதய ஷில்பா'னு ஒரு ஐ ட்ராப்ஸ். 'நேச்சுரோ'னு ஒரு எஃபெர்வெஸ்ஸெண்ட் பவுடர்.''

''எத்தனை சேல்ஸ் ரெப்?''

''நான்கு பேர்...''

இப்போது பாலேகரைப் பயம் ஆட்கொண்டுவிட்டது. 'பிரகாஷை எப்படியோ மோப்பம் பிடித்து வந்து விட்டார்கள்... மடையன்.. என்னமோ குளறுபடி பண்ணி மாட்டிக் கொண்டான்..

''நான்கு பேர்ல இன்னிக்கு யாரை யாவது அந்தேரிக்கு அனுப்பினீங்களா?''

''எஸ். பிரகாஷ் என்பவனை அனுப்பினோம்.''

''என்ன வேலை கொடுத்தீர்கள்?''

''வேலை இன்னும் கொடுக்கலை. நாலு பேருமே புரொபேஷன் பீரியடில்தான் இருக்காங்க. ஹோட்டல் பானு போயிருந்தேன். அங்கே பிரகாஷை வரச் சொன்னேன். வந்தான். காட்கோபர் போனோம். குர்லா போனோம். வாடிக்கையாளர்களை அறிமுகம் பண்ணி வைத்தேன்.''

''அப்படியா?''

''மூன்று மணிக்கு அலுவலகம் வந்தோம்...''

''வாட்?'' அதிர்ந்தார் இன்ஸ்பெக்டர். சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்தார். பாலேகர் விழித்தார்.

''பிரகாஷ்.. உங்ககூட அலுவலகம் வந்தானா? மிஸ்டர்! நாங்க வைச்ச கண்ணியில மாட்டிக்கிட்டீங்க. உண்மையைச் சொல்லிட்டால் நல்லது! பிரகாஷ் காலை பதினோரு மணிக்கு அந்தேரியில் கடப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கான்!''

பாலேகர் சுதாரித்துக் கொண்டார். அது சாத்தியமே இல்லை, இன்ஸ்பெக்டர்''

மணி அழுத்தி, பியூன் வந்ததும் பிரகாஷை அழைத்து வரச் சொன்னார்.

(தொடரும்)

ஜில் போட்டி முடிவு

சரியான விடை :

அருகே நடந்தால்
சாரல் அடிக்கும்
அடியில் நின்றால்
இடியெனத் தாக்கும்
கோடையில் கண்டால்
கண்ணீர் வடிக்கும்
மேடையில் பேச
தமிழெனத் துள்ளும்
ஆதவன் விளையாட
வானவில் தெரியும்
ஆண்டவன் தரிசனம்
இதுவெனப் புரியும்.

சரியான விடைகளை எழுதிய பின்வரும் ஆறு வாசகர்களும் ரூ. 250/- பரிசுத் தொகையைப் பகிர்ந்து கொள்கின்றனர். தலா ரூ. 42/- அனுப்பப்படுகிறது...

1. க. சுப்பிரமணியன், 1/97, திருவண்ணாதபுரம், கீழ்நத்தம் அஞ்சல், திருநெல்வேலி (வழி) - 627 353; 2. பிரகதா ரங்கராஜன், 2, தெற்கு தேவி தெரு, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006; 3. எம். சுபாஷிணி, 6, ராஜேஸ்வரி காலனி, விருகம்பாக்கம், சென்னை - 92; 4. அ. இராசரத்தினம், சோமாகுடி (மெயின் ரோடு) மேட்டுப்பட்டி அஞ்சல், இலால்குடி வட்டம், திருச்சி மாவ.; 5. ஆர். பிரகாஷ், ஜே.ஏ.ஏ. சீனியர் அக்கவுண்ட்ஸ் ஆபீஸர் அலுவலகம், பொன்மலை, திருச்சி - 620 004; 6. எஸ். எம். நாயகம், மே/பா. வ. ஸ்டான்லி, சர்ச் யார்ட் அருகில், கொட்டில் பாடு, குளச்சல் அஞ்சல், குமரி மாவட்டம்.



சீமான்

யார் சீமான்? கார்த்திக் என்று நம்பக் கடவோம். டைட்டில் கார்டில் 'சீமான் கார்த்திக்' என்று போடுவது தவிர அவ் வடைமொழிக்கு வேறு முகாந்திரம் இல்லை.

இன்டர்வல் வரை கதை எந்தக் கழுதை மேல் ஊர்கோலம் போனாலும் சரி; அப் புறம் ஒரு சின்ன சஸ்பென்ஸ் வைத்து, பின் ஏழெட்டு சண்டை போட்டு சுபமாக்கி விடு வது ஏறத்தாழ இந்த ஸீரீஸின் ஒட்டு மொத்த ஃபார்முலாவாக இருக்கிறது.

சீமானிலும் ஓர் அற்புதமான, மெய் சிலிர்க்க வைக்கும் சஸ் பென்ஸ் வருகிறது.

''நீ உதைத்து இழுத் துப் போனாயே, ரவுடி... அது வேறு யாரும் இல்லப்பா... உங் கப்பா...'' என்று அநேக வயலின் அலறல்களின் பின்னணியில் மனோ ரமா உணர்ச்சி மேலிடக் கார்த்திக்கிடம் சொல்லுமிடம் இந்நூற் றாண்டின் தலைசிறந்த நகைச் சுவைக் காட்சி.

உடனே நீங்கள் கேட்கலாம், ''கார்த்திக், இந்தப்படத்தில் போலீசா?''

இல்லை, கலெக்டர். கடமை உணர்வு மிக்க கலெக்டர் என்னென்ன காரியங்கள் செய்வார்?

1. ரோட்டில் ரவுடியை, லட்டியால் அடித்து இழுத்துப் போவார்.

2. சிவப்பு விளக்குப் பகுதிக்கு மாறு வேடத்தில் போய் அபாரமாய்ப் பாட்டுப் பாடி, டான்ஸ் ஆடுவார். (ரெய்டாம்!)

3. விருப்பப்பட்டபோது கலெக்டர் உத்யோகத்தை ரிசைன் பண்ணிவிட்டு சிலபல ரவுடி காரியங்கள் செய்து, தேவைப் பட்டபோது மீண்டும் கலெக்டர் ஆகிவிடு வார்.

இதையெல்லாம் பார்த்து, யாருக் காவது புல்லரிக்காது போகுமா? புல்லரிக் காதவர்கள் புல்லர்கள்.

மறந்துவிட்டேனே- கலெக்டருக்கு ஒரு டவாலி இருக்கிறார் பாருங்கள்... அடடா, க்லின்டனின் அதிகாரங்களுக்கு எள்ளள வும் சளைக்காத அதிகாரங்கள் படைத்தவ ராய், கலெக்டருக்கு வரும் மனுக்களைக் கூட தானே படித்து, முடிவெடுப்பவராய்... புளகாங்கிதம் அடையச் செய்யும் பாத்திரப் படைப்புகளை என்ன வென்று சொல்வ தம்மா?

இசை - இளைய ராஜாவா, அவரது டூப்பா? ஆவின்பால் வாங்கி கார்ப்பரேஷன் தண்ணீர் கலந்து டிப்போவில் விநியோகம் பண்ணின மாதிரி..கஷ்டம்டா!


ஒருத்தரைப் பாராட்டலாம். ஒளிப்பதி வாளர். ஏழ்மையை எழிலையெல்லாம் அள்ளிக் கொண்டு வந்திருக்கிறார். அதற் காக மட்டுமா பத்து ரூபாய் செலவழித்து, படம் பார்க்கப் போவது?

கூடிய சீக்கிரம் டீ.வியில் வந்துவிடும். அப்போது பார்த்துக் கொண்டால் போதாது?

- ஆர்.பி.ஆர்.



உங்கள் குழந்தைகளைவிட வேகமாக வளர்ச்சி பெறும் டெபாசிட் திட்டம் ஒன்று இருப்பது உங்களுக்குத் தெரியுமா?



பால்யநிதி: RPS பெனிஃபிட் ஃபண்ட் வழங்கும் குழந்தைகள் டெபாசிட் திட்டம், அதிவேகமாக வளர்ச்சி பெறுகிறது. இத் திட்டத்தில் ரூ.10,000/- டெபாசிட் செய்தால் போதும். 60 மாத காலத்தில் அது ரூ. 27,000/- ஆக வளர்கிறது. 84 மாத முடிவில் ரூ. 36,780/- ஆக வளர்ந்து விடுகிறது.

இன்றே எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். விரைவாக வளர்வது குழந்தைகள் மட்டுமே அல்ல என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

RPS CHILDREN'S
BALYA NIDHI
GROWTH FUND

எக்ஸிக்யூடிவ் பிரஸிடெண்ட்: P.G. சரண்யன், முன்னாள் தலைவர், கரூர் வைஸ்யா பாங்க் லிட்.

RPS BENEFIT FUND LTD.
(Declared as "NIDHI" by the Central Government)

தலைமை அலுவலகம்: 16, இராமநாதன் தெரு, தி.நகர், சென்னை-17. போன் : 441554, 441346.

கிளைகள்: இராயபுரம், (சென்னை) - போன்: 556164, கோயம்புத்தூர் - போன்: 43576, பெங்களூர் - போன்: 366433, பாண்டிச்சேரி - போன்: 31859.
உறுப்பினர்களுக்கு மட்டும்.

பாதுகாப்பான வழியில் விரைவான வளர்ச்சி

AKSHAR RPS/94 76

காவிரி நதிக் கரையோரமாக அமைந்துள்ள ஏராளமான கோயில்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகு. ஏதேனும் ஒரு வித்தியாசமான சிற்பமோ தெய்வத்திரு உருவமோ நம்மை அதிசயத்தில் ஆழ்த்தும்.

திருச்சி மாவட்டத்தில் லால்குடியிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது அன்பில் ஆலந்துறை. இதனைக் 'கீழ் அன்பில்' என்றும் 'அன்பில்' என்றும் கூட அழைப்பர்.

'அன்பு-இல்' அதாவது அன்பின் இருப்பிடம் என்று புரிந்து கொண்டால் 'பிரேமபுரி' என்ற வடமொழிப் பெயர்ப் பொருத்தம் சட்டென்று விளங்கும்.

பசுமை கொஞ்சும் இந்த ஊரில் மாரியம்மன் கோயில், பெருமாள் கோயில் என்று பல சிறந்த கோயில்கள் உள்ளன. என்றாலும் 'பிரேமபுரி' என்ற பெயருக்குக் காரணமாக விளங்கும் எங்குமுள ஈசுவரர் கோயிலுக்கு நாம் செல்வோம். அன்பே வடிவமான காஞ்சிப் பெரியவர் உவந்து தங்கிய கோயில் என்னும்போது நம் மன ஈடுபாடு மேலும் அதிகமாகிறது. ஈசனார் பெயர் ''பிரேமலிங்கம்'' என்றும் அம்பாளுக்குப் ''பிரேம வல்லி'' என்றும் பெயர் இருப்பதாகத் தலபுராணம் கூறுகிறது. விமானத்தின் பெயர் புண்ணியாங்குரம். ஆக, அன்பு காட்டுதலே மிகப்பெரிய புண்ணியம் என்று பறைசாற்றும் கோயில் இது.

ஐந்து நிலக் கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்

மான் கொள்ளிட நதிக்கு அக்கரையில் தாளம் போட்டுக்கொண்டு பாடிக் கொண்டே வந்தபோது தம் செவியைச் சாய்த்துப் பாடலைக் காது கொடுத்துக் கேட்டாராம். அதற்கு முன்பாகவே இவருக்குக் கானத்தில் பிரியம் இருந்திருக்கிறது. பராந்தக சோழன் நூற்றிஎட்டு அக்னி ஹோத்ரிகளை இங்கே குடியேறச் செய்தாராம். இவர்கள் ஜைமினி சாமவேதத்தை ஓதுபவர்கள். இவர்களுடைய வேத பாராயணத்தை ஆர்வத்துடன் கேட்டவராதலால் செவி சாய்த்த விநாயகருக்கு ஸாமகானம் கேட்ட விநாயகர் என்ற பெயரும் வழங்குகிறது.

கோஷ்டத்தின் பின்புறம் சூரிய சந்திர விக்ரகங்கள் இருப்பதைக் கண்டு இது பற்றிக் கேட்கிறோம். அண்மையில் அக்கம் பக்கத்தில் கிடந்த சிலைகளையெல்லாம் கோயிலுக்குள் கொண்டு வந்து நிறுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். அரும் பாடுபட்டு ஒரு ஸ்தல புராணத்தைத் தேடிப்



❋ சப்த கன்னியர்

அன்பின் இருப்பிடமே அழகின் உறைவிடம்!

றால் தண்ணென்று பசுமையான மரங்கள் அடர்ந்திருக்கிறது. பிரகாரத்தில் வலம் வரும்போது சப்த கன்னியருக்கு அருகில் கணநாதர் ஒரு பக்கம் சாய்ந்து அமர்ந்திருக்கிறார். சிற்பமே சாய்ந்த நிலையில் செதுக்கப்பட்டிருக்கிறது!

ஞானக் குழந்தையான சம்பந்தப் பெரு

பிடித்துப் பார்த்தால் இங்கே சூரிய புஷ்கரணி என்று தீர்த்தம் இருப்பதாகவும் சந்திரனுக்கு சாபவிமோசனம் கிடைத்த தலமென்றும் தெரியவந்தது.

மகானாகிய கர்க்க முனிவர் இந்தத் தலத்தில் வட விருக்ஷமாக நின்று தவம் செய்ததாக ஐதிகம். அதனால் கோயில்



✱ செவிசாய்த்த விநாயகர்

உள்ள இடத்துக்கு ஆலந்துறை என்று பெயர். பிரும்மதேவர் பூஜித்ததால் பிரும்மபுரீசுவரர் என்றும் வாகீச முனிவர் பூஜித்ததால் ஸத்திய வாகீச்வரர் என்றும் பெயர் பெற்றார். இறைவிக்கு ஸௌந்தர நாயகி என்றும் ஓர் அழகான பெயர்.

மகா விஷ்ணுவும் பூஜித்திருக்கிறார். கோஷ்டத்தில் மகாவிஷ்ணுவைத் தரிசிக்கலாம். பிரும்ம தேவருடைய சந்நிதியையும் காணலாம்.

பிரும்மா செய்த அபசாரத்தினால் சிவபெருமான் அவருடைய ஐந்து சிரங்களில் ஒன்றைக் கிள்ளி எடுத்து விட்டு நான்முகனாகச் செய்து விட்டார். பிரும்ம தேவர் தாம் செய்த குற்றத்துக்கு வருந்திப் பரிகாரம் தேடியபோது சப்த ரிஷிகள் வந்து அன்பில் ஆலந்துறையில் யாகம் செய்தால் உன் சிருஷ்டித் தொழில் உனக்கு மீண்டும் கிடைக்கும் என்று கூறினார்



கள். உடனே சத்ய லோகத்திலிருந்து ஏழு லோகங்கள் வழியாக இறங்கிப் பூவுலகுக்கு வந்தார் நான்முகன்.

அவர் பிரேம புஷ்கரணியில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தபோது ஒரு காகத்தின் மூக்கில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த தவளை ஒன்று, அந்த நீரில் விழுந்தது. தண்ணீரில் விழுந்த உடனே தேவ சரீரத்தின் காந்தியுடன் ஒரு அரசனாக மாறியது. பிரும்மதேவரை அந்த அரசன் வணங்கி ''நான் மகத தேசத்தை ஆண்ட கேகய ராஜன். சிவபக்தி குறைந்து நாத்திகனாக தர்ம காரியங்கள் செய்யாமல் வாழ்ந்தேன். அந்தப் பாபத்தின் பலனாகத் தவளையாகப் பிறந்தேன். தற்செயலாக ஆலந்துறையில் திருக்குளத்தில் விழுந்ததால் என்னுடைய பழைய சரீரத்தையும் நினைவையும் அடைந்தேன். தங்களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன்'' என்று வணங்கினார். பிறகு பிரேமலிங்கத்தை வழிபட்டுச் சிவபதம் அடைந்தார். சதுரானனனுக்கும் படைப்புத் தொழிலைத் திரும்பக் கொடுத்தாராம் ஸத்திய வாகீச்வரரான எம்பெருமான்.

அப்பர் பாடியுள்ள தேவாரப் பாடல் சொல்லினிமையோடு அன்பில் என்ற வார்த்தை திரும்பத் திரும்ப மடக்கி வருவதால் கேட்பதற்கும் மிக அழகாக இருக்கிறது.

அன்பினான் அஞ்சமைத்துடனாடிய
என்பிலானை யுரித்துக் களைந்தவன்
அன்பிலானை யம்மானை அள்ளூறிய
அன்பினால் நினைத்தார் அறிந்தார்களே!

படங்கள் : கோபிநாத்.

கமலமணிராஜன்

60. 'ஜட்ஜு' மாமா!

சாருவுக்கு ஜில்லி கிடைத்ததில் உண்மையாகவே சந்தோஷந்தான். ஆனாலும், முன்னையெல்லாம் போல் அவளுடைய மனத்தில் குதூகலம் ஏற்படவில்லை. 'மாமியும் தாத்தாவும் உறவாய்ப் போய்விட்டார்கள்; நாம் தனியாய்ப் போய்விட்டோம்' என்ற எண்ணம் அவளுடைய உள்ளத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. தானும் தாத்தாவுமாய் ஊர் ஊராய்ப் போய்க் கொண்டேயிருக்கக் கூடாதா, எதற்காக இங்கே வந்தோம் என்று கூடத் தோன்றியது.

முன்னைப் போல் சாரு இப்போது பங்களாவின் தோட்டத்தில் திரிந்து விளையாடுவதில்லை. பங்களாவுக்குள் தனியாக எங்கேயாவது ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொள்வாள். சோகபாவம் ததும்பும் முகத் தோற்றத்துடன் சிந்தனையில் ஆழ்ந்திருப்பாள். அல்லது, ஜில்லியை மடியில் வைத்துக் கொண்டு அதனிடம் தன்னுடைய மனக்குறையை வெளியிடுவாள். "மாமியும் தாத்தாவும் ஒண்ணு; நீயும் நானும் ஒண்ணு!" என்பாள்.

இந்த மாதிரி ஒரு நாள் சாரு ஜில்லியை வைத்துக் கொண்டு சோகமான குரலில் அதனுடன் பேசிக் கொண்டிருந்த போது, சாவித்திரி அங்கே வந்தாள். "சாரு! ஏன் இப்படித் தனியாகத் தனியாக வந்து உட்கார்ந்து கொள்கிறாய்? ஓடித் திரிந்து விளையாடறதுக்கென்ன?" என்று கேட்டாள்.

"என்னோடு விளையாடறதுக்கு யார் இருக்கா? நான்தான் தனிப்பட்டவளாய்ப் போய்ட்டேனே?" என்றாள் சாரு.

"என்ன சாரு! பெரிய பாட்டி மாதிரி பேசறே! நீ தனிப்பட்டவளாய்ப் போகவாவது? உன்னோடே விளையாடறதற்கு நான் இருக்கேனே! வா! நாம் இரண்டு பேரும் கண்ணாமூச்சி விளையாடலாம்" என்றாள் சாவித்திரி.

சாரு, சாவித்திரியின் பின்னால் வந்து அவளுடைய புடைவைத் தலைப்பை மடித்துக் கண்ணைக் கட்டினாள். அப்போது சாவித்திரி, "இதோ பாரு! என் கண்ணைக் கட்டிவிட்டு, முன்னே ராத்திரியிலே எழுந்து ஓடிப்போனயே, அந்த மாதிரி ஓடிவிடக் கூடாது!" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள். மறுபடியும், "ஆனால், இப்ப நீ எங்கே ஓடறது! தாத்தாதான் இங்கேயே இருக்காரே?" என்றாள்.

சாரு, இதற்குள் கண்ணைக் கட்டிவிட்டு, "ஊம்; ஒண்ணு, இரண்டு சொல்லுங்கோ!" என்றாள். சாவித்திரி, "ஒண்ணு, இரண்டு, மூணு...." என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே, சாரு அந்த அறையிலிருந்து ஓடி, ஆபீஸ் அறைக்குள் போனாள். அங்கே வக்கீல் ஆபத்சகாயமய்யர் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். சாரு அவருக்குத் தெரியாமல், சத்தமில்லாமல் நடந்து ஒரு ஸோபாவுக்குப் பின்புறத்தில் ஒளிந்து கொண்டாள். ஒளிந்து கொண்டவள் மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள். 'தாத்தாவும் மாமியும் ஒண்ணாய்ப் போய்விட்டா. எனக்கு இப்போ ஓடறதுக்குக் கூட இடமில்லை' என்று எண்ணி அவள் மனம் ஏங்கிற்று.



சற்று நேரத்துக்கெல்லாம் அந்த அறைக்குள் சாவித்திரி வந்தாள். "வக்கீல் ஸார்! சாரு இங்கே வந்தாளா?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

"இல்லையே, இங்கே வரலையே?" என்றார் வக்கீல். பிறகு, "பத்திரம் எழுதியாச்சு; கையெழுத்துப் போடலாம்" என்றார்.

உமா மேஜைக்கருகில் உட்கார்ந்து, "எங்கே வாசிங்கோ! கேட்கிறேன்" என்றாள்.

ஆபத்சகாயமய்யர் அடிக்கடி, "என்னிடம் நம்பிக்கை வையுங்கள்" என்று உமாராணியிடம் சொல்லிக் கொண்டிருந்தாரல்லவா? அதற்குரிய சந்தர்ப்பம் இப்போது வந்திருந்தது. ஸ்ரீதரனுடைய வக்கீல், கோர்ட்டில் குழந்தையைப் பற்றிக் கேள்வி கேட்டதிலிருந்து,

சாவித்திரி பெரிதும் கலக்கமடைந்து போயிருந்தாள். யாரிடமாவது யோசனை கேட்டே ஆக வேண்டுமென்று தோன்றிற்று.

ஆகவே, ஆபத்சகாய மய்யரிடம் தன் வரலாறு முழுவதையும் விவரமாகச் சொன்னாள். சாரு தான் தன்னுடைய குழந்தை என்று கூறி, சாஸ்திரியிடம் அவருக்குத் தெரியாமல் குழந்தையை விட்டுவிட்டுப் போனதையும் விவரித்தாள். பிறகு, தகப்பனாருக்குக் குழந்தை மேல் உள்ள பாத்தியதையைப் பற்றிச் சட்டம் என்ன சொல்கிறது என்று கேட்டாள்.

ஆபத்சகாய மய்யர் சட்ட புஸ்தகங்களையெல்லாம் நன்றாய்ப் புரட்டிப் பார்த்து விட்டு, "குழந்தைமேலே கட்டாயம் தகப்பனாருக்குப் பாத்தியதை உண்டு. இப்போ நடக்கிற கேஸிலே நீங்கள் ஜயித்த போதிலும், குழந்தையைத் தம்மிடம் ஒப்புவிக்க வேணுமென்று அவர் உங்க மேலே மறுபடியும் கேஸ் போடலாம்" என்றார்.



சட்டம் இந்த மாதிரி தான் இருக்கும் என்று சாவித்திரிக்கு ஏற்கெனவே ஒருவாறு தெரிந்திருந்தது. அது இப்போது உறுதியாகவே, "வக்கீல் ஸார்! என்னுடைய கதி எப்படியாவது ஆகட்டும்; ஆனால், என் குழந்தையை அவரிடம் ஒரு நாளும் ஒப்புவிக்க மாட்டேன். அதைவிட அவள், நான் இரண்டு பேரும் செத்துப் போய்ட்டால் கூடப் பாதகமில்லை" என்றாள்.

பிறகு, சாருவுக்குத் தன்னுடைய சொத்தையெல்லாம் எழுதிவைத்து 'ஸெட்டில்மெண்ட்' பத்திரம் செய்ய வேண்டுமென்றும், சம்பு சாஸ்திரியைக் கார்டியனாக நியமிக்க வேண்டுமென்றும், "சம்பு சாஸ்திரியின் வளர்ப்புப் பெண்" என்று பத்திரத்தில் குறிப்பிட வேண்டுமென்றும் உமாராணி சொன்னதன் பேரில், அதன்படியே, வக்கீல் ஆபத்சகாயமய்யர் பத்திரம் எழுதினார்.

உமா சாருவைத் தேடிக் கொண்டு ஆபீஸ் அறைக்குள் வந்தபோது, வக்கீல் மேற்சொன்ன பத்திரந்தான் தயாராகி விட்டதென்று சொல்லிக் கையெழுத்திடச் சொன்னார். பத்திரத்தைப் படிக்கக் கேட்டுவிட்டுச் சாவித்திரி கையொப்பம் இட்டாள். பிறகு, "வக்கீல் ஸார்! எனக்கு நீங்கள் எத்தனையோ ஒத்தாசை செய்திருக்கிறீர்கள். அதையெல்லாம்விட முக்கியமான ஓர் ஒத்தாசை கேட்கப் போகிறேன். அதைச் செய்ய வேணும்" என்றாள்.

அருள் வாக்கு

மாம்பலம் தின்றால்தான் பலம் என்கிற 'பாயிண்ட்'டுக்கு வருகிறேன். இப்போது ரொம்பவும் பலத்தைக் குறிப்பிட வேண்டுமானால் என்ன சொல்கிறோம்? 'சிங்கபலம்', 'புலிபலம்' என்றா சொல்கிறோம்? இல்லை. 'யானைபலம்' என்றுதான் சொல்கிறோம். மற்றப் பிராணிகளுக்கு இல்லாத பலம் யானைக்கே இருக்கிறது. இந்த சக்தி மாம்பலம் சாப்பிட்டா அதற்கு வந்திருக்கிறது? யானை அப்படிப்பட்ட பதார்த்தத்தைத் திரும்பிக்கூடப் பார்க்காதே! 'சுஷ்கைஸ் த்ருணைர் வநகஜா பலினோ பவந்தி' என்று பர்த்ருஹரி வசனம் இருக்கிறது. 'சுஷ்கம்' என்றால் ஈரம் வற்றிப்போனது. இஞ்சிக்கு ஈரம் போய் 'சுஷ்க'மானதைத்தான் 'சுக்கு' என்கிறோம். 'சுஷ்கம்' தமிழில் 'சுக்கம்' ஆகும். நெஞ்சில் ஈரம் இல்லாமல் பணத்தைக் கெட்டியாய் வைத்துக் கொள்பவனை 'ஆசாமி ரொம்ப சுஷ்கம்' என்கிறோம். இங்கே 'சுஷ்கை: த்ருணை:' என்றது காய்ந்த புல்லை. புல்லையும் தேங்காய் மட்டையையும் தின்றுவிட்டே யானை ஸகல மிருகங்களையும்விட பலமுள்ளதாயிருப்பதை இங்கே சொல்லியிருக்கிறது.



''கட்டாயம் செய்கிறேன்'' என்றார் வக்கீல்.

''சாருவுக்கு நான் ஒரு கடிதம் எழுதியிருக்கேன். அதில் அவள் என் குழந்தை என்கிறதையும், அடையாறு புத்தர் கோவிலுக்குப் பக்கத்திலே தாத்தா தூங்கிண்டிருந்த போது அவளை விட்டுவிட்டுப் போனதையும் பற்றி எழுதியிருக்கேன். அவ அப்பாவைப் பற்றியும், ஏன் அவள் என் குழந்தை என்கிறதை மறைக்க வைச்சேன் என்பதையும் பற்றிக்கூட எழுதியிருக்கேன். அந்தக் கடுதாசை நீங்க பத்திரப்படுத்தி வச்சிருந்து, குழந்தை மேஜரானதும் அவள் கிட்டக் கொடுக்கணும்...''

''என்னத்துக்காக அம்மா இவ்வளவெல்லாம் யோசனை பண்ணிக் காரியம் செய்யறயள்? குழந்தை மேஜராகிற போது, நீங்களே சொல்லிண்டாப் போதாதா? கடுதாசி என்னத்திற்கு?''

''வக்கீல் ஸார்! என் கதி என்ன ஆகுமோ, யார் கண்டா? எதுவும் எழுத்திலே இருக்கிறது நல்லது. நான் சொல்றபடி செய்யறதாக வாக்குக் கொடுப்பேளா, மாட்டேளா?'' என்றாள்.

''அவசியம் செய்யறேன், அம்மா!''

''சாரு என் குழந்தை என்கிறதை யாரிடமும் சொல்ல மாட்டேளே?''

''சொல்லவே மாட்டேன்.''

''எங்க அப்பா கிட்ட கூடச் சொல்ல மாட்டேளே?''

''சொல்ல மாட்டேன், அம்மா!''

''அப்படி, சத்தியமாய்ச் சொல்லுங்கள்'' என்றாள் உமாராணி.

''சத்தியமாக யார் கிட்டயும் சொல்றதில்லை'' என்றார் ஆபத்சகாயமய்யர்.

அதே அறையில் ஸோபாவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்த சாரு இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். மாமி உண்மையில் தன்னுடைய அம்மாதான் என்றும், தாத்தா தன்னுடைய நிஜத் தாத்தாதான் என்றும் அறிந்தபோது குழந்தைக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதோடு கூட, ஒரு மிக முக்கியமான இரகசியத்தைத் தான் தெரிந்து கொண்டதில் அவளுக்கு ரொம்பப் பெருமையாகவும் இருந்தது. ''ஓகோ! மாமியே எனக்கு அம்மாவா இருந்துண்டு இப்படி ஏமாத்தினாளா? இருக்கட்டும், இருக்கட்டும்'' என்று கறுவிக் கொண்டாள். ஏதாவது ஒரு நல்ல சந்தர்ப்பம் வரும்போது தனக்கு இந்த இரகசியம் தெரிந்திருப்பதை வெளிப்படுத்த வேண்டுமென்னும் ஆசையும் அவளுடைய குழந்தை உள்ளத்தில் குடி கொண்டது. அத்தகைய சந்தர்ப்பமும் சீக்கிரம் வந்தது.

குறிப்பிட்ட தேதியில் கோர்ட்டில் மறுபடியும் ஸ்ரீதரன், உமாராணி கேஸ் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சம்பு சாஸ்திரி விசாரிக்கப்பட்டார். ஆனால், அவர் மூலமாகப் புதிய உண்மை ஒன்றும் வெளியாகவில்லை. சாவித்திரி பூரண கர்ப்பவதியாக இருந்த நிலைமையில், நெடுங்கரைக்கு வந்துவிட்டுத் திரும்பினாள் என்று சமீபத்தில் ஊரில் தாம் கேள்விப்பட்டதாக மட்டுமே சொன்னார். குழந்தை என்ன ஆயிற்று என்று தமக்குத் தெரியாது என்றும், சாவித்திரி தம்மிடம் கூடச் சொல்ல மறுப்பதாகவும் கூறினார்.

நாராயணன், பி.ஏ., பி.எல்., சாஸ்திரியை இலேசில் விட்டுவிடவில்லை. இப்போது அவர் வளர்த்து வரும் குழந்தை ஏது என்று கேட்டார். சாஸ்திரி வழக்கம் போல், ''பராசக்தி எனக்குக் கொடுத்த குழந்தை''

இதிலே விசேஷம், இத்தனை பலம் இருந்தும் அது புலி, சிங்கம் மாதிரி பாய்ந்து ஹிம்ஸை பண்ணாமல் சாந்தமாயிருக்கிறது. அதற்கு தேஹபலத்தோடு புத்தி பலம், ஞாபக சக்தி எல்லாமும் நிறைய இருக்கிறது. மநுஷ்யனுக்கு அடங்கி ஒத்துழைக்கிற பவ்ய குணமும் இருக்கிறது. மலையாளம், பர்மா முதலான இடங்களில் பெரிய பெரிய மரங்களைத் தூக்கிக் கொண்டு போய் வேலை செய்வதெல்லாம் யானைதான். ஆனதால் வெஜிடேரியன் ஆஹாரத்தினாலேயே நல்ல பலமும், அதுமட்டுமின்றி புத்தி, பணிவு, ஸஹாய குணம் முதலான ஸத்வ அம்சங்களும் பெறலாமென்று தெரிகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

என்று சொன்ன போது, கோர்ட்டில் எல்லாரும் சிரித்தார்கள்.

''இது கோர்ட்டு, ஸ்வாமி! விளையாடாமல் உள்ளது உள்ளபடி சொல்லும்'' என்றார் வாதி வக்கீல்.

இதன்மேல் சாஸ்திரியும் நிலைமையை உணர்ந்து, தாம் புத்தர் கோவிலுக்கருகில் படுத்துத் தூங்கியதையும், கண் விழித்த போது இந்தக் குழந்தை அழுது கொண்டு கிடந்ததையும், சுற்றுமுற்றும் தேடியதில் ஒருவரும் இல்லாதபடியால், பராசக்தியினுடைய ஆக்ஞை என்பதாக எண்ணிக் குழந்தையை எடுத்துக் கொண்டு சாவடிக்குப்பம் போனதையும் விவரமாகச் சொன்னார். இதையெல்லாம் கோர்ட்டில் கூடியிருந்தவர்கள் எல்லாரும் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

பிறகு, உமாராணி என்ற சாவித்திரி மறுபடியும் சாட்சிக் கூண்டில் நிறுத்தப்பட்டாள்.

அன்று கேட்டதைத் தொடர்ந்து வாதி வக்கீல், ''இன்றைக்காவது சொல்லுங்கள்; குழந்தை என்னதான் ஆயிற்று?'' என்று கேட்டார்.

கையைக் கட்டிக் கொண்டு கம்பீரமாய் நின்ற உமா, ''சொல்ல முடியாது'' என்றாள்.

''கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லித்தான் ஆகணும்; மறுப்பது சட்ட விரோதம்.''

''மறுத்தால்....?''

''மறுத்தால், குழந்தையைக் கொன்று விட்டீர்களென்று இங்கேயே உங்களை 'அரெஸ்ட்' பண்ணும்படி கோர்ட்டார் உத்தரவிடலாம்'' என்றார் வாதி வக்கீல்.

சாவித்திரியின் முகத்தில் புன்னகை உண்டாயிற்று. 'ரொம்ப நல்லதாய்ப் போச்சு. அப்படி ஏதாவது நடந்தால், எத்தனையோ தொல்லைகள் தீர்ந்து போகும். முக்கியமாக, இந்தப் புருஷனுடன் சேர்ந்து வாழ வேண்டியிராது' என்று எண்ணிக் கொண்டாள். கோர்ட்டுக்கு அன்று வந்தது முதல், ஸ்ரீதரனைப் பார்க்கப் பார்க்க அவளுடைய கோபம் அதிகமாகிக் கொண்டிருந்தது. தனக்கு முன்னே கொடுத்த கஷ்டமெல்லாம் போதாதென்று, இப்போது என்னவெல்லாம் கஷ்டப்படுத்துகிறார்! தன்னைப் படுத்துவது போதாதா? அப்பாவைக் கூடவா சாட்சிக் கூண்டில் ஏற்றி இப்படித் தொந்தரவு படுத்த வேணும்? - கேஸில் ஒரு வேளை தோற்றுவிட்டால், இந்த மனுஷருடன் தான் சேர்ந்து வாழும்படி நேரிடுமோ என்று எண்ணியபோது, அவளுக்குச் சொல்ல முடியாத வேதனையும் ஆத்திரமும் உண்டாயின.

எனவே, வக்கீல் மேற்கண்டவாறு சொன்னதும், உமா ஒரு நிமிஷம் சும்மா இருந்துவிட்டு, ''ஆமாம்; எனக்குப் பிறந்த குழந்தையைக் கொன்றுவிட்டேன். என்னை 'அரெஸ்ட்' செய்யுங்கள், இதோ ரெடி!'' என்றாள்.

கோர்ட்டில் திடீரென்று ஒரு வெடி குண்டு விழுந்தது போல் எல்லாரும் அதிர்ச்சியடைந்து போனார்கள். ஆபத்சகாயமய்யர் சட்டென்று எழுந்திருந்து, ''வாட் இஸ் திஸ்!'' என்றார்.

சம்பு சாஸ்திரி, ''சாவித்திரி!உனக்கு என்ன பைத்தியமா?'' என்றார்.

நீதிபதிக்கு இந்தக் கேஸின் ஆரம்பத்தில் சாவித்திரியிடம் ரொம்ப அநுதாபம் இருந்தது. ஆனால், வர வர அவள் மேல் கோபம் அதிகமாகிக் கொண்டு வந்தது. அவளுடைய அதிகப் பிரசங்கித்தனமான பேச்சுக்களும், அடிக்கடி கேள்விகளுக்குப் பதில் சொல்ல மறுப்பதும் அவருக்குப் பிடிக்கவில்லை. இதெல்லாம் கோர்ட்டில் தம்முடைய கௌரவத்துக்குப் பங்கம் விளைவிப்பதாக அவர் எண்ணினார்.

இப்போது குழந்தையைக் கொன்று விட்டதாக உமாராணி சொல்வது சுத்தப் பொய்; வேண்டுமென்றே சொல்கிறாள் என்பது அவருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. அதனாலேயே அவருக்குக் கோபம் அதிகமாய் வந்தது. எனவே, கோர்ட்டில் நின்ற போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, ''இன்ஸ்பெக்டர்! இந்த அம்மாளை, 'அரெஸ்ட்' பண்ணி, கேஸை 'இன்வெஸ்டிகேட்' பண்ணுங்கோ!'' என்றார்.


இன்ஸ்பெக்டரும், இன்னொரு போலீஸ்காரனும் சாட்சிக் கூண்டினருகில் சென்றார்கள். சாரு எதிர்பார்த்துக் கொண்டிருந்த சந்தர்ப்பம் அப்போது வந்தது.

குழந்தை ஒரு தாவுத் தாவி மேஜைமீது ஏறி நின்றாள். நீதிபதியைப் பார்த்து, ''ஸ்டாப்! ஸ்டாப்! ஜட்ஜு மாமா! இந்த

அடுத்த இதழ்.....

திருவாரூர் சிறப்பிதழ்

- கடவுளுக்குக் கடன் பட்டவர்கள்! - ஓர் உருக்கமான கவர் ஸ்டோரி
- என்ன செய்கிறது, எம்.ஆர்.எல்? - நேரடி ரிப்போர்ட்
- கலைஞரின் பால்யத் தோழருடன் ஒரு சந்திப்பு
- ''மக்களுக்கு அக்கறை இல்லை!'' - திருவாரூர் எம்.எல்.ஏ. பரபரப்பு பேட்டி



மாயி சொன்னதெல்லாம் பொய்! அவ கொழந்தையைக் கொல்லவே இல்லை. நான்தான் அந்தக் கொழந்தை! என்னைக் கொன்னுட்டிருந்தா, நான் எப்படி உசிரோட இருக்கமுடியும்?'' என்றாள்.

''வாட் இஸ் ஆல் திஸ்?'' என்றார் நீதிபதி.

''இதோ இருக்காரே, எங்க தாத்தா - அவர் புத்தர் கோவில்லே தூங்கிண்டிருந்த போது, எங்க அம்மா என்னைப் போட்டுட்டுப் போய்விட்டாளாம். இதையெல்லாம் ஒரு பெரிய கடுதாசியிலே எழுதி, நான் மேஜரான அப்புறம் எங்கிட்டக் கொடுங்கோன்னுட்டு, இந்த வக்கீல்மாமா கிட்ட எங்க அம்மா கொடுத்தா. நான் அவாளுக்குத் தெரியாம ஸோபா மறைவிலே உட்கார்ந்துண்டு, எல்லாவற்றையும் கேட்டிண்டிருந்தேன்!'' இப்படிச் சொல்லிவிட்டு, சாரு மேஜையின் மேலேயே இரண்டடி நடந்து சாவித்திரியின் அருகில் சென்றாள்.

''அம்மா! அப்பா உங்க மேலே கேஸ் போட்டிருக்காரேன்னு என்னை உங்க குழந்தைன்னு சொல்லிக்கிறதுக்கு வெட்கமாயிருக்கா?'' என்றாள்.

சாவித்திரி உடனே சாட்சிக் கூண்டிலிருந்து இறங்கி ஓடிவந்து, ''என் கண்ணே, சாரு!'' என்று சொல்லிக் கொண்டே, குழந்தையைக் கட்டிக் கொண்டு முத்தமிட்டாள். கோர்ட்டில் பெரிய பரபரப்பு ஏற்பட்டது.

நீதிபதி மேஜையை மறுபடியும் ஓங்கித் தட்டினார். ஸார்ஜெண்ட், ''ஸைலன்ஸ்!'' என்று கத்தினான். போலீஸ்காரர்கள் சாவித்திரியை 'அரெஸ்ட்' பண்ணுகிறதா, இல்லையா என்று தெரியாமல் திகைத்து நின்றார்கள்.

சாரு, சாவித்திரியின் ஆலிங்கனத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு கீழே இறங்கினாள். நேரே, ஸ்ரீதரன் இருக்கும் இடத்துக்குப் போனாள். ஸ்ரீதரன் பிரமை பிடித்தவனைப் போல் குழந்தையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் அருகில் வந்ததும் சாரு, ''நானும் எத்தனையோ அப்பா பார்த்திருக்கேன். உங்களைப் போலே அம்மா மேலே கேஸ் போடற அப்பாவைப் பார்த்ததேயில்லை'' என்றாள்.

அப்போது கோர்ட்டில் உண்டான கலகலப்பு அடங்குவதற்கு வெகு நேரம் ஆயிற்று.

(தொடரும்)

பாலம்

●● நாங்கள் மூவரும் விழிவிழந்த மாணவர்கள். எங்களுக்குத் தமிழில் பாடங்களைப் படிக்க உதவி தேவை. ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

– வி.கனகாம்பாள், ஜி.மாரியம்மாள்,
ஓர்து மேரி,
தமிழக விழிவிழந்தோர் சங்கம்,
தண்டையார் பேட்டை, சென்னை – 81.

●● பகவான் ஷீரடி சாயிபாபா பக்தர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஷீரடி சாயி ஆலயங்கள் நம் நாட்டில் எங்கெங்கு உள்ளன என்ற தகவல் அறிந்தவர்கள் எழுதித் தெரிவிக்கவும். நன்றி.

– வெ. சுப்பிரமணியன்,
12, கச்சேரி தெரு, கல்பா,
ஆர்க்காடு, – 632 503.

●● புடைவைகளின் அடியில் வைத்துத் தைக்கப்படும் தரமான காட்டன், பாலியெஸ்டர் ''ஸாரி ஃபால்ஸ்'' தயாரிப்பில் ஈடுபட விரும்புகிறேன். இது சம்பந்தமான தொழில்நுட்பம் அறிந்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன். தரமான ஸாரி ஃபால்ஸ் தயாரிப்போர் விரும்பினால் விற்றுத் தரவும் தயாராக இருக்கிறேன்.

– கா. கார்த்திகேயன்,
1A/5, M.F. சாலை,
இராணிப்பேட்டை – 632 401.


●● 1950 களில் வெளிவந்து கொண்டிருந்த ''சீர்திருத்தம்'' மாத இதழில் நான் படைத்த ''அன்புப் புவல்'' என்ற தமிழ்க் காவியம் (வெண்பாக்கள்) வெளியிடப் பட்டது. அந்த இதழ் யாரிடமேனும் இருக்குமானால் தந்து உதவும்.

– நா. அர. மதனகோபால்,
4, ராஜேந்திரபிரசாத் தெரு,
விநாயகபுரம், அம்பத்தூர்,
சென்னை – 600 053.

●● என்னுடன் தூத்துக்குடி எஸ்.ஏ.வி. பள்ளியில் 1973-75ல் படித்த, புதுக்கிராமத்தில் சகோதரருடன் வசித்த ஸ்ரீதரைச் சந்திக்க விரும்புகிறேன்.

– ஆர்.ஹரிஹர சுப்பிரமணியன்,
5, நாத் பில்டிங், ராம்பாக் சாலை,
கல்யாண் – 421 301.

●● என் புருஷர் கல்பாத்தி கே.ஆர். வேங்கடாசலம், Chief goods clerk, ஈரோடு, போத்தனூர், எர்ணாகுளம் முதலிய இடங்களில் வேலை செய்து 1929ல் திருச்சூரில் இறந்து போனார். எனக்கு இன்று வயது 88. ரயில்வேயில் விதவைகளுக்கு பென்ஷன் அறிவித்துள்ளார்கள். ஆனால் என் கணவர் இறந்து 65 வருடங்கள் ஆகிவிட்ட படியால் அவர் ரயில்வேயில் வேலை பார்த்தார் என்பதற்கு அத்தாட்சி ஏதும் என்னிடம் இல்லை. என் கணவரைத் தெரிந்தவர்கள் - பென்ஷன் பெறுபவர்கள் இருந்தால் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். எனக்கு உதவித் தொகை கிடைக்க இது பேருபகாரமாய் இருக்கும்.



– லக்ஷ்மி அம்மாள்,
194, 12 வது தெரு, நடராஜபுரம்
தெற்கு, மருத்துவக் கல்லூரி சாலை,
தஞ்சாவூர் – 613 007.

●● பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றிணைந்து ''சூப்பர் சிப்பி'' மாத இதழ் வெளியிடுகிறோம். பங்கேற்க விரும்பும் மாணவ, மாணவியர் மற்றும் வாசகர்கள் தொடர்பு கொள்க.

– ''சூப்பர் சிப்பி''
C-29, டி. வி. எஸ். நகர்,
காஜாமலை, திருச்சி – 620 020

●● பருப்புப் பொடி, மிளகாய்ப் பொடி, ரசப்பொடி, போன்றவை சிறிய அளவில் ரூ.1000 முதலீட்டில் தயாரித்து விற்பனை செய்ய ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

– என்.செல்வி,
871 – முதல் மாடி,
36வது தெரு, கொரட்டூர்,
சென்னை – 600 080.

●● தில்லியில் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறேன். ஓய்வு நேரத்தில் வர்த்தகர்கள் - தொழிலதிபர்களுக்கு தில்லி பிரதிநிதியாகச் செயலாற்ற விரும்புகிறேன்.

– எஸ்.கோபாலகிருஷ்ணன்,
2269, லோதிரோடு காம்ப்ளெக்ஸ்,
புதுதில்லி – 110 003.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது. – ஆர்.)

வெள்ளித் திரையில் காணத் தவறாதீர்!

நாயக்கமார் தெருவில் மொபட்டில் நுழையும்போது ஜெனரேட்டர் சத்தம் காதைப் பிளந்தது.

தார்ரோடு போடுகிறார்களா? யோசித்துக் கொண்டே என் காலனியை நெருங்க நெருங்க, அதீத வெளிச்சம் கண்ணை உறுத்தியது. ராணி சித்ரா சினியூனிட் என்று எழுதிய ஜெனரேட்டர் லாரியிலிருந்து தடி தடியான கேபிள்கள் காலனியில் உள்ளே நெளிந்து ஓடிக் கொண்டிருந்தது.

அட ஷூட்டிங்! என்றுள் ஒரு இனிய அதிர்ச்சி ஏற்பட்டு முகத்தில் சந்தோஷம் படர்ந்தது.

மக்கள் கூட்டம் கூட்டமாக பிளாட்டுக்களை முற்றுகையிட்டிருந்தார்கள். சுற்றிப் பார்த்தேன். பால்கனிகள், காம்பௌண்ட் வால், மாடிப் படிகள் கார் டாப்புகள், சன் ஷேடுகள், டெலிபோன் கம்பங்கள், வாட்டர் டாங்குகள்.. அந்த G1 ன் ஸன் ஷேடில் எப்படி அந்தப் பெண் ஏறினாள்? எப்படி இறங்கப் போகிறாள்? கையில் குழந்தை வேறு. ரொம்ப கவலையாகயிருந்தது.

''என்ன படம்?'' குத்து மதிப்பாக நாலு பேரைப் பார்த்துக் கொண்டே கேட்டேன். தெரிந்த முகம் ஒன்றும் கண்ணில் படவில்லை. யாரும் பதில் சொல்லவில்லை. பரவாயில்லை. என்னுடைய சினிமா ஞானத்தை வைத்து சுயம்புவாகக் கண்டு பிடிக்க ஆர்வம் வந்தது. ஆர்வத்துடன் எம்பி எம்பி ஒவ்வொரு மனித இண்டு இடுக்குகளில் வழியாக கொஞ்சமாவது ஷூட்டிங் தெரிகிறதா என்று பார்த்து, முடியாமல் விட்டு விட்டேன். பின் பாக்கெட் பர்ஸ்களைப் பிடித்துக் கொண்டார்களே தவிர கொஞ்சம் கூட இடைவெளி விடவில்லை. அந்தப் பக்கமும் முயற்சி செய்து பார்த்து தோல்விதான் அடைந்தேன். உடம்பு வியர்த்துக் கொட்டிக் கசகசத்தது. எப்ப ஷூட்டிங் முடியும்? எப்ப உள்ளே போவது? லேசாகக் கோபம் வந்தது.

குழம்பிக் கொண்டிருக்கும்போது ஒரு சின்ன இடைவெளியில் ரோஸ் பவுடர் அப்பலோடு ஒரு துணை நடிகை தெரிந்தாள். பக்கத்தில் அசட்டுச் சிரிப்போடு G3 ராமநாதன். கையை ஆட்டினேன். ராமநாதன் கவனிக்கவில்லை. இரண்டாவது தடவை கையை ஆட்டுவதற்கு வரும்போது இடைவெளி மறைந்து விட்டது. நொந்து கொண்டே என் மொபட் இருக்கும் இடத்திற்கு வந்தேன். அந்தப் பக்கம் கொஞ்சம் அசைவு தெரிந்தது. யாரோ கை தூக்கி கொட்டாவி விட, இடைவெளி தெரிகிற மாதிரி இருந்தது. உடனே விஸ்வரூப தரிசனம் கிடைத்த மாதிரி அரனை போல் விடு விடுவென அதை நோக்கி ஓடினேன்.

''சார்... இங்க வேகண்ட் இல்லை. ஆளு சிகரெட் வாங்கப் போயிருக்கு...'' தடுத்தான்.

எனக்கு நிஜமாகவே கோபம் வந்து விட்டது. பின்னே என்ன? லோன் போட்டு எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த காலனியில் இருக்கும் பிளாட்டை வாங்கினேன். உள்ளே விடாமல் தடுத்ததும் தன்மான உணர்ச்சி தலை தூக்கியது. ''நான் உள்ளப் போகணும்பா....





என்னோட பிளாட் இந்த காலனியி லிருக்கு... தெரியுமா? கூப்பிடுப்பா அந்த செகரட்டரிய்ய...'' வேகத்துடன் கேட்டேன்.

''சார்...இது மாதிரி சொல்லிக்கிட்டு பத்துப் பேர் உள்ள பூட்டாங்க சார்...'' பதில் சொன் னான் ஒரு போலீஸ். நிஜ போலீஸா, சினிமா போலீஸா என்று தெரியவில்லை. சினிமா போலீஸ் மாதிரிதான் 'பிகில்' சொருகியிருந் தான். சினிமா போலீஸ் என்று நினைத்து எதிர்த்துப் பேச பயமாகவும் இருந்தது.

அவனைப் பார்த்து இளித்துவிட்டு கம்மா நின்றேன். ''கொஞ்ச நேரம் இரு சார்... இந்த சீன் எடுத்தவுடனே போயிட லாம்...'' சொல்லிவிட்டு தடியை இரண்டு தடவை தரையில் தட்டிவிட்டு ''தள்ளி நில் லுங்க'' என்று சொல்லி அவன் இடத்திற்குப் போய் ஷூட்டிங் பார்க்க ஆரம்பித்தான்.

''டேக் செவன். ஷாட் தெர்ட்டி''

சினிமா கூர்க்கா ஒருவன் பக்கத்தில் தொப்பியணிந்து சாவியை கையால் சுற்றிய படி பெரிய கேட்டைப் பூட்டுவதற்கு நெருங் கினான்.

'கட் கட் கட்' - டைரக்டர் எரிச்சலோடு கத்தினார். ''ஏம்பா...கேமிராவுக்கு வெளில வரை கத்திக்கிட்டு வர...''

கூர்க்கா முகம் கலவரமானது. தலை குனிந்தான். படப்பிடிப்பு நின்றது. நான் சுற்றி வரப் பார்த்து நடிகர், நடிகைகளை அடை யாளம் கண்டு கொண்டேன். 'அவங்க பேரு... இவங்க பேரு...' என்று சினிமா ஞானத்தை பிரஸ்தாபித்துக் கொள்ள பக்கத் தில் உள்ளவர்கள் அதிசயமாகப் பார்த் தார்கள். முதலிலேயே சொல்லியிருந்தால் இடம் கொடுத்திருப்பார்களோ என்னவோ!

அடுத்த காட்சிக்கு கோணம் பார்க்க யூனிட் கலைந்தது. மக்களும் யூனிட் பின்னா டியே அலைந்து இடம் பிடிக்கத் தயாரா னார்கள். பத்தாவது முறையாக பாத்திரத் தோடு ஒன்றி நடித்த வெற்றிக் களிப்பில் '83' பீனாக்கின் கவர்தில் சிறுநீர் கழிக்க ஆரம்பித்தான், அந்த கூர்க்கா.

கமலாமாமி காலனி செகரட் டரியை திட்டிக் கொண்டே 'கர்மம்' என்று தலையடித் துக் கொண்டு ஜ ன் ன லை

ஜே.ஜெய்சங்கர்



அறைந்து சாத்தினாள்.

என் பிளாட்டை நோக்கிப் போனேன். முன்னே பின்னே பார்த்திராத அந்நிய முகங்கள் பிளாட்டில் அங்கேயும் இங்கேயும் ஓடி அடுத்தது என்ன என்று தங்களுடைய அம்மா அப்பாக்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தார்கள். காலனி வாசிகளிடம் 'கோல்கேட் ஜெல்' போல் ஒரு பெருமித வளையம் சுற்றிக் கொண்டிருந்தது.

''டேய்..கமல் வர்றார்டா வழி விடுடா...'' யாரோ சிறுவன் என் பிளாட்டின் துணி உலர்த்தும் கொடியில் தொங்கிக் கொண்டிருந்தான். யாரோ துணை நடிகன் பேசிவிட்டு ஜர்தாவை பச் சென்று துப்பினான். என் வீட்டுச் சுவரில் தெரிந்து வண்ணக் கோலங்கள் ஆயிற்று. உடனே தண்ணீர் விட்டால்தான் கறைபோகும். தண்ணீர் எடுத்து வந்து ஊற்ற தர்மசங்கடமாக இருந்தது. சினிமா விளக்குகளின் வெளிச்சம் நிலா போல் எல்லா ரூம்களிலும் படர்ந்திருந்தது. லைட்டே போடவில்லை.

''சாயந்திரம் நாலு மணிக்கே ஷூட்டிங் ஆரம்பிச்சுட்டாங்க. ராத்திரி பன்னிரெண்டு மணி வரை நடக்குமாம். ராஜேஷ், ராம்கி, நிரோஷாவெல்லாம் வர்றாங்களாம். சாப்பாட்டுக் கடைய ஏழரைக்கு முடிச்சிடணும். சிம்பிளா சமையல் பண்ணிட்டேன். அப்புறம்... நான், 'B3' புவனா, 'A4' சுதா எல்லோரும் அசோஸியேஷன் ஆபிஸ்கிட்ட அசெம்பிள் ஆறோம். நீங்க என்ன பண்ணப் போறீங்க?'' என்றாள் மனைவி.

''அது இருக்கட்டும். முதல்ல எனக்கு குடிக்க காப்பி வேணும்...''

''ஸாரிங்க.. பால்காரன் வரலீங்க. உள்ள விடலயாம். காலனி பாலை சினிமாக்காரங்களுக்கு ஜாஸ்தி விலைக்கு வித்துட்டு ஷூட்டிங் பாத்துட்டு ஓடிட்டானாம்.''

''போக்க போ.''

''பாவங்க இவங்க. ஒவ்வொரு சீனும் எடுக்க எவ்வளவு கஷ்டப்படறாங்க தெரியுமா? டோம் லைட்ல, பல்பு வோல்டேஜ் தாங்காம வெடிக்க எவ்வளவு வாட்டி மாத்தினாங்க? அந்த டோம் லைட் ஷேடுலதான் அந்த கூர்க்கா நடந்து வர்ற மாதிரி சீன். அந்த எலக்ட்ரீசியன் எவ்வளவு திட்டு வாங்கினான். பாவங்க அவன்... ஷூட்டிங் ஒரு மணி நேரம் நின்னு போயிடுச்சி.. வேர்த்து விறுவிறுத்துப் போயிட்டான். அப்பா... எவ்வளவு செலவு பண்றாங்க.''

''ஆனா நீ படம் பாத்துட்டு சடைன்னு சொல்லிடுற!''

மோர் வைத்து விட்டு என்னை முறைத்தாள்.

''சரி போகட்டும். நடிக்கறவங்க யாரா வது உனக்கு அடையாளம் தெரியுதா?''

''காதுல கடுக்கன் போட்டுண்டு சிவிங்கம் மெல்றானே அவனை தெரைய படத்

துல பாத்துருக்கேன். ஹீரோகிட்ட அடிவாங்கிண்டு காய்கறி வண்டி இல்லேன்னா சர்பத் வண்டிமேல ஸ்லோ மோஷன்ல தொப்புன்னு விழுவான். கொஞ்ச நேரம் கழிச்சு எகிறிண்டு வருவான்... அவன் பேரு...''

சொன்னாள். இரண்டு துணை நடிகைகளின் பெயரையும் சரியாகச் சொன்னாள்.

''திருஷ்டி பட்டுபோவுது!''

''முக்கியமான விஷயம் தெரியுமா. நம்ம வீட்டு பால்கனி, பெட்ரூம் எல்லாம் ஷூட்டிங் எடுத்தாங்க. தீவிரவாதி இந்த வீட்ல குடியிருக்கிற மாதிரியாம். எதிர் பிளாட்ல குடி வந்து வேவு பாத்துட்டு ஆள குளோஸ் பண்றாங்களாம். நம்ம கல்யாண போட்டோ; பாலு ஜுவெல்லர்ஸ் காலண்டர் BPL டீவி அட்டைப் பெட்டி எல்லாம் விழுந்திருக்குங்க... இந்தப் படம் கட்டாயம் பாக்கணுங்க... எங்கம்மா, அக்கா ரெண்டு பேருக்கும் லெட்டர்ல மென்ஷன் பண்ணப் போறேன்...''

எனக்கும் சந்தோஷமாகத்தான் இருந்தது. எங்கள் கல்யாண போட்டோ படத்தில் எப்படி விழும்? உடனே போய் அதைப் பார்த்துவிட்டு வந்தேன்.

''தொடச்சி கிடச்சி வைக்கிறதானே. அழுக்கா இருக்கு...''

''இல்லீங்க.. அப்படியே நேச்சரலா இருக்கட்டும்னு சொல்லிட்டாங்க...''

மனைவி புடவை மாற்றிக் கொண்டு கிளம்பினாள்.

பிளாட் வாட்ச்மேன் டேவிட், சினிமா கும்பலோடு ரம்மியாடிக் கொண்டிருந்தான். பக்கத்தில் பிரியாணி பொட்டலம். 'G3' ராமசாமி இந்தப் படத்துக்கு காம்ப்ளிமெண்டரி டிக்கெட் கிடைக்குமா என்று யாரிடமோ கேட்டுக் கொண்டிருந்தார். பக்க வாட்டில் சின்னதாக துண்டு விரிக்கப்பட்டு அதில் மூன்று துணை நடிகைகள் உட்கார்ந்து கொண்டு அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். அதன் அடியில் வில்வ செடி ஒன்று நசுங்கி சின்னாபின்னமாயிருந்தது. என் சித்தி கற்பகம் ஆசையாக வாங்கி நட்டது. 'ஆன்மிக பதில்கள்' பகுதியில் 'வளர்த்தால் தோஷம் உண்டா?' என்று விளக்கம் கேட்டு பிறகு பக்தியோடு வாங்கி நட்டது.


''டேக் பைவ். ஷாட் சிக்ஸ்டி''

ஒரு வெள்ளை மாருதிக்கார் விர்ரென்று வந்து ஹெட்லைட் வெளிச்சம் மங்க கிரீச் சென்று ப்ரேக் போட்டு குலுங்கி நின்றது. அதிலிருந்து லெதர் ஜாக்கெட் இளைஞர்கள் கையில் ஏ.கே.பார்ட்டி செவன்களோடு உதிர்ந்து, சிவிங்கத்தை வில்லத்தனமாக மென்றபடி மெயின் கேட்டை நோக்கி ஆளுக்கொரு பக்கமாக பரவி 'பட்பட்' என்று சுட்டார்கள்.

'கட் கட் கட்' என்று அடிவயிற்றில் கத்தி

RETIRING?

Lavanyaa will show you the easy, comfortable and peaceful way.




Project Manager :

LAVANYAA

Property Developers (P) Ltd.,
C-24, Fort Station Road,
Thillainagar, Trichy-18. Ph : 31447

Kousalya Estates

Residential apartments at Puthur, Trichy-17.



"புதுப் புடைவை வாங்கிக் கொடுத்தும் உன் முகத்திலே சந்தோஷமே காணோமே?"

"எப்படிங்க சந்தோஷப்பட முடியும்? அக்கம்பக்கத்து வீட்டுக்காரிங்க பெருமூச்சு விட்டுப் பொறாமைப்படலையே!"

– லலிதா செல்லப்பா

னார் டைரக்டர்.

"சே...ஏம்பா வேன் உள்ள உடுப்பி ஓட்டல் மாதிரி எல்லா லைட்டையும் போட்டுகினு வந்து கட ஆரம்பிக்கிறீங்க. ஹெட் லைட்ட வேற போட்டுக்கினு வரீங்க... கொஞ்சமாவது சென்ஸ் வேணாம்? எவ்வளவு பிலிம் வாங்குது...!"

இரண்டு மூன்று அசிஸ்டெண்ட் டைரக்டர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நொந்து போனார்கள்.

டைரக்டர் கோபித்துக் கொண்டு தன் சேருக்குப் போய் உட்கார்ந்தார். அரைமணி நேர இடைவெளிக்குப் பிறகு மீண்டும் காட்சி எடுக்கப்பட்டு ஓகேயானது. துணை டைரக்டர்களைப் பார்க்க பரிதாபமாகயிருந்தது.

அடுத்த காட்சிக்கு யூனிட் தயாரானது. மீண்டும் 'கட் கட்'. பிறகு 'ரீடேக்'. இட மாற்றம். அங்கும் இங்கும் ஓடி எல்லாவற்றையும் மாற்றினார்கள். துணை நடிகை நடிகர்கள் உடைமாற்றி, மேக்கப் போட்டார்கள். வரப்போகும் ஒரு சீனுக்காக நாலுமணி நேரம் காத்திருந்தார்கள். சினிமா கூர்க்கா குட்டி தூக்கத்திலிருந்து எழுந்தான். விளக்குகள் உயரமான இடங்களில் வைக்கப்பட்டு கோணம் பார்த்தார்கள். அப்போதுதான் என் மனைவி சொன்ன எலக்ட்ரீசியன் தென்பட்டான். வேர்த்து விறுவிறுத்து உடை முழுவதும் தொப்பலாக நனைந்திருந்தான். பாதி சாப்பாட்டில் அழைக்கப்பட்டு ஒரு பிளாட்டின் மாடிக்கு ஓடினான். பல ஒயர்களை மாற்றினான். டிரான்ஸ்பார்மர் வெடித்து சிதறுவதற்குண்டான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தான். டைரக்டர் பார்த்துவிட்டு திருப்தியாகாமல் மீண்டும் மாற்றச் சொன்னார். யூனிட் உழைப்பாளிகள் தளராமல் சரி செய்தார்கள். என்னமாய் உழைக்கிறார்கள்?

ஷூட்டிங் முடிந்தவுடன் நாடோடி கும்பல் மாதிரி எல்லா தட்டு முட்டு சாமான்களையும் தூக்கிக் கொண்டு அடுத்த ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு ஓட வேண்டும். மக்கள் இரண்டரை மணி நேரம் பொழுது போக்க இரவுபகல் பார்க்காமல் ஒரு கும்பல் அயராது உழைக்கிறது. 'வீட்டைக் கட்டிப்பார்', 'கல்யாணம் பண்ணிப்பார்', என்பது போல 'சினிமா எடுத்துப்பார்' என்பதையும் சேர்க்கலாம் போலத் தோன்றியது. இந்த உழைப்பெல்லாம் வீணா அல்லது பாக்ஸ் ஆபீஸ் ஹிட்டா. இதோ இங்கு வேடிக்கை பார்க்கும் ஜனங்கள்தான் ஓட்டுப் போடப் போகிறார்கள். சடைப்படம். சூப்பர்படம். பாஸ் மார்க். செகண்ட் ஆஃப் சொதப்பிட்டான். ஒரு வாட்டி பாக்கலாம். கேமிரா தூள். செந்தில், கவுண்டமணிதான் படமே!

டைரக்டர் பெயர் வரும்போது எல்லா வாத்தியங்களும் டட்டாய்ங்கென்று தட்டு தட்டி வாசித்து தூக்கி நிறுத்துவார்கள். ஆங்கிலத்தில் ஒரு முறை. அதே வாசிப்போடு தமிழில் ஒரு முறை. இந்த எலக்ட்ரீசியன் பெயர் சின்னதாக ஒரு ஓரத்தில் ஊர்ந்து போகும்.

"என்னங்க இந்த ஷூட்டிங் எப்ப முடியும்? மணி பன்னிரெண்டு ஆகப் போகுது!" கொட்டாவிக் கொண்டே மனைவி கேட்டாள்.

"ரெண்டு மணியாகும்."

தூக்கம் கண்களைத் தழுவ, பிளாட்டை நோக்கி நடந்தோம். சாக்கடை பக்கத்தில் பூந்தொட்டிகளைக் கொண்டு வந்த கிழவன் துண்டைப் போர்த்தி தூங்கிக் கொண்டிருந்தான். பரிதாபமாகயிருந்தது.

வீட்டில் போய்ப் படுத்தோம்.

"பாவங்க அந்த எக்ஸ்ட்ராவெல்லாம்..."

"எக்ஸ்ரான்னாத... ஜூனியர் ஆர்டிஸ்டு. எக்ஸ்ரான்னு சொன்னா உதைப்பாங்க..."

"சரிங்க.. கொழந்தைங்களோட தூங்கறாங்க. திடீர்திடீர்னு எழுப்பி நடிக்க கூப்பிடறாங்க. கொழந்தைங்க கொசுக்கடில அழுவுது. மிஞ்சி மிஞ்சிப் போனா இவங்களுக்கு எவ்வளவு கெடைக்கும்?... இன்னிக்கு ஷூட்டிங் செலவு மட்டும் ஒரு லட்சமாயிடுச்சாம்..."

"என்ன பண்றது? அவங்க பொழப்பு அப்படி."

"ஏங்க... அவசியம் இந்தப் படத்த தியேட்டர்ல போய்ப் பாக்கணும். இவங்க உழைச்ச உழைப்பெல்லாம் எப்படி வந்துருக்குன்னு பாக்கணும்."

"கவலைப்படாத! ரிலீஸான முதல் வாரத்திலேயே வீட்ல உட்கார்ந்துக்கிட்டே நிறுத்தி நிதானமாப் பாக்கலாம்."

"ப்ளீஸ் வேண்டாங்க. திருட்டு வீடியோ காசெட் பாக்க வேணாம்." சொல்லியபடி மனைவி தூங்கிப் போனாள்.

மனைவியை அதிசயமாகப் பார்த்தேன். 'இந்தப் படம் மட்டும்தானா...' என்று கேட்க ஆரம்பித்து, முடிக்காமல் கண் செருகியது.

சுலிவன் கார்டன் பெனிபிட் பண்டு லிமிடெட்

பதிவு அலுவலகம் :- 8, கற்பகாம்பாள் நகர், லஸ்
மைலாப்பூர், சென்னை - 600 004 போன் : 4993241/4990953
கிளை அலுவலகம் : 132, ராசப்ப செட்டி தெரு,
பார்க் டவுன் (முதல் மாடி), சென்னை - 600 003
போன் : 563055

ரொக்க நடவடிக்கை : காலை 8:30 முதல் மாலை 5:30 வரை
ஞாயிறு காலை 8:30 முதல் பகல் 12:30 வரை
வரவு செலவுகள் அங்கத்தினர்களுடன் மட்டுமே
(வெள்ளிக் கிழமை விடுமுறை)

கடன்

நகைகள் பேரில் கிராம் 10க்கு ரூ. 3000/- வழங்கப்படும்.
சென்னை மாநகரில் உள்ள கட்டிடங்கள் பேரிலும் வழங்கப்படும்.

இயக்குநர்கள் :

பெயர் :	விலாசம் :
திரு T. V. சீனிவாசன்	15, லஸ் அவின்யூ, சென்னை - 4.
திரு P. K. சந்திரசேகரன்	89, போயஸ் கார்டன், சென்னை 86
திரு ப்ரவின் கோவிந்தராவ்	22, போயஸ் கார்டன் சென்னை 86
திருமதி P. C. சுந்தரவதனி	சுந்தரவதனி கல்யாண மண்டபம் எழும்பூர், சென்னை 7- ✆ 8261078
திரு P. K. C. ரமேஷ்	89, போயஸ் கார்டன், சென்னை - 86
திரு D. தனுஷ்கோடி	21/1A, பழைய குயவர்பாளையம் ரோடு, மதுரை - 625 009
திரு P. C. பாஸ்கர்	89, போயஸ் கார்டன், சென்னை - 86
திரு K. R. நிரஞ்ஜன் குமார்	1, பின்னி ரோடு, சென்னை - 86
திரு P. C. சியாம் சுந்தர்	89, போயஸ் கார்டன், சென்னை - 86
திரு K. G. கிருஷ்ணன்	Y-210, 2வது அவென்யூ, அண்ணா நகர், சென்னை - 40.

OUR VALUED DEPOSITOR



Sri K. G. Appusamy
Ex. Chairman & Managing Director – AIR INDIA

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும்

ஒருவரையும் தேர்ந்தெடுக்கிறார்கள் என்ற கோடம்பாக்க வட்டாரத் தகவலை நம்பிக் கொண்டு, 'கட்டுமரக்காரன்' தொடக்க விழாவிற்கு ஆசைக் கனவுகளோடு படையெடுத்த ஏராள நடிகைகளுக்கும், அவர்களது தாய்க் குலங்களுக்கும் பயங்கர ஏமாற்றம்.



மதுபாலா:
மதுரமான ரேட்

பிரபு-வாக காம்பினேஷனில் கடைசியாக வந்தது செந்தமிழ்ப்பாட்டு. இரண்டு வருட இடைவேளைக்குப் பிறகு இப்போது 'கட்டுமரக்காரன்'. கட்டுமரக்காரனாகப் பிரபு நடிக்கிறார்.

பிரபுவிற்கு ஜோடியாக ஒரு முன்னணி நடிகையும், புதுமுகம்



'கிருஷ்ணா'வில்: பிரசாந்த், கஸ்தூரி

~~பிரபு - குஷ்பு~~
பிரபு - டபூ!

இந்தி நடிகை ஃபாராவின் தங்கை டபூ (இப்படியும் பெயர்களா!) கதாநாயகியாக ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்டார்! டபூ, நேற்றுவரை சஞ்சய்கபூருடன் கிசுகிசுக்கப்பட்டவர்! வாகவின் நல்லாசியில், பிரபு-குஷ்பு போல இந்த பிரபு-டபூ ஜோடியும் செழித்து வளரக் கூட்டுப் பிரார்த்தனை செய்வோமாக!

மதுபாலா இந்தியிலும், தெலுங்கிலும் படு பிசி... இப்போதைய ஒரே தமிழ்ப்படம் 'செந்தமிழ்ச் செல்வன்'.

அரண்மனைக் காவலனைத் தயாரித்த லட்சுமி மூவி மேக்கர்ஸ், தாங்கள் அடுத்ததாகத் தயாரிக்கும் சரத்குமார் படத்துக்குக் கதாநாயகியாக மதுபாலாவை அணுக, விஜய சாந்தியின் சம்பளத்தில் முக்கால் பங்கு கேட்டிருக்கிறார்.

தயாரிப்பாளர் அரண்டு போய் விட்டாராம். கடைசித் தகவலின்படி மதுரமாக பேரம் படிந்திருக்கிறது.

ஓர் உழைப்பாளியின் கதையைக் கேளுங்கள். சூப்பர் ஸ்டார் அல்ல. யாகவா புரொடக்‌ஷன்ஸ் ஆர். தனபாலன். 1975வரை தொண்ணூறு ரூபாய் சம்பளத்திற்கு விறகு கடையில் வேலை பார்த்தவர். பிறகு சின்னதாக ஒரு ஹார்டுவேர் கடையைச் சொந்தமாக ஆரம்பித்து, அதற்குப் பிறகு இரண்டு லாரி வாங்கிப் போட்டதில், இன்றைக்கு ஆர்.தனபாலனின் நிர்வாகத்தில் பதிமூன்றுக்கும் மேற்பட்ட தொழில்கள் உள்ளன. பூச்சிக் கொல்லி மருந்து, டாங்கர் லாரிகள், தார் பொருட்கள், தேக்குப் பண்ணை, நட்சத்திர ஓட்டல்... இது தவிர யாகவா புரொடக்‌ஷன்ஸ் என்ற சினிமா கம்பெனி வேறு.

'ஞானப் பறவை', 'தங்கமனசுக்காரன்', 'மணிக்குயில்' என்று இவர் எடுத்த எல்லாப் படமுமே ஊற்றிக் கொண்டிருந்தாலும் தொடர்ந்து 'செவத்தப் பொண்ணு' படத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்.



பிரபு : ஜோடி கிடைச்சாச்சு!



✱ தனபாலன்: குருவின் கட்டளை

''ஏன் இப்படி?''

''என் ஆன்மீக குருவான யாகவா முனிவரின் கட்டளை இது. அவருடைய ஆக்ஞை என்னை நூற்றி பதினொன்று படம் எடுக்கச் சொல்லியிருக்கிறது. லாப, நஷ்டம் பாராது அதை நிறைவேற்றுவேன்'' என்கிறார் ஆர்.தனபாலன்.

'கிருஷ்ணா'- பட ஆடியோ காசட்டை வெளியிடுவதற்காக வந்த கமல்ஹாசனுக்கு ஓர் இனிய அதிர்ச்சி. 'மகாநதி'க்கு விருது கிடைத்ததற்காக யுனீக் க்ரியேஷன்ஸ் சார்பில் நடக்கும் முதல் பாராட்டு விழாவாகவும், அதனை அறிவித்து, மகாநதி கலைஞர்களை கௌரவப்படுத்தினார்கள். ''மேலை நாட்டு 'ராப்' இசையைப் போல, தமிழில் அமைக்க நானும் இன்ன பிறரும் முயற்சிகள் செய்து கொண்டிருந்தாலும், அது சரியாக அமையவில்லை. 'கிருஷ்ணா'வில் 'எக்கச்சக்கமா அவ நிப்பா, நிப்பா...'' பாடலில் 'ராப்'பின் உண்மையான இசையும் வடிவமும் பொருந்தியுள்ளது. நான் கேட்ட முதல் ராப் தமிழ்ப்பாடல் இதுதான்'' என்று கமல் பாராட்டினார்.



✱ நீருசர்மா: இன்னொரு கதாநாயகி?

பாடலுக்கு ஆடிய பிரசாந்தையும், இசையமைத்த எஸ்.ஏ. ராஜ்குமாரையும் விட அதிக மகிழ்ச்சி அடைந்தவர் கெட்டி அலையஸ் ராஜா கிருஷ்ணமூர்த்தி! அந்த அமரகீதத்தின் பாடலாசிரியர் அவர்தானே!

இதயம் நல்லெண்ணெய் புதிய விளம்பரத்தில் 'சமையலில் நானும் ஒரு கில்லாடிதான்' என்று பேசி நடித்த நீரு சர்மாவின் புகைப் படத்தைப் பார்த்து விட்டு பம்பாய்க்குத் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார் ராஜ்கிரண். 'எல்லாமே என் ராசாதான்' படத்தில் அந்த இன்னொரு கதாநாயகியின் இடம் இன்னும் காலியாகத்தானே இருக்கிறது..?

– ஹர்ஷ ராஜ்.

பரிசு ரூ. 250/-
மகிழ்ச்சி என்பது....

மகிழ்ச்சி என்பது ஒரு பட்டாம்பூச்சி போன்றது. அதைத் துரத்த துரத்த விலகி ஓடும். ஆனால் முற்றிலும் எதிர்பாராத நேரத்தில் தானே தேடி வந்து தோள் மீது மென்மையாய் அமரும்.



'மகிழ்ச்சி'க்கு ஆங்கிலத்தில் இப்படி கவிநயம் மிக்க இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது. எங்கே! நீங்கள் வகுக்கும் மகிழ்ச்சி இலக்கணத்தை ஒரு தாளில் எழுதி, கீழேயுள்ள கூப்பனை நிரப்பியனுப்புங்கள் பார்க்கலாம். இரண்டு நிபந்தனைகள் : உங்கள் சுய முயற்சியில் எழுத வேண்டும். உங்கள் இலக்கணம் 25 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும். கூப்பனுடன் உங்கள் விளக்கம் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.5.94. உறைமீது 'மகிழ்ச்சி என்பது.....!' என்று குறிப்பிடவும். சிறந்த இலக்கணத்துக்கு ரூ. 250/- பரிசு. பிரசுரமாகும் பிறவற்றுக்கு ஆறுதல் பரிசுகள். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

என் பெயர் :..............................

விலாசம் :..............................

....

....


வீட்டின் பேரில் கடன்

- வீடு/மனை/ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்
- மிகக்குறைந்த வட்டிக்கு
- விரைந்த சேவை
- சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இருக்கவேண்டும்



நகைக் கடன்

- மிகக்குறைந்த வட்டிக்கு
- 22 ct. தங்க நகைகளுக்கு 1 கிராமுக்கு ரூ.300/- வீதம் கடன் வழங்கப்படும்.
- R.D. கட்ட தேவையில்லை
- எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை.




திரு.வி.க.நகர் பெனிஃபிட் ஃபண்டு லிமிடெட்

தலைமை அலுவலகம்: 10, 5வது தெரு, ஆண்டாள் அவின்யு (திரு.வி.க. நகர் பஸ் நிலையம் அருகில்) சென்னை- 82. வேலை நேரம் : 9 முதல் 12.30 வரை. 2 முதல் 5 வரை. ✆ 610390 ஞாயிறு விடுமுறை

பாரிஸ் கிளை: 49, வெங்கடாசல முதலி தெரு, முதல் மாடி, (பட்டணம் கோயில் அருகில்), பார்க் டவுன், சென்னை - 3. வேலை நேரம்: 10 முதல் 1 வரை - 2 முதல் 5 வரை. ✆ 565760 ஞாயிறு விடுமுறை

வாழ்க்கை முறையில் புதிய சொகுசு காண



உடலுக்கு சொகுசளிக்கும் உன்னத தயாரிப்பு

FIBROFLEX

MATTRESSES • PILLOWS • CUSHIONS

IS : 8391

ISI

தயாரிப்பாளர்கள் :

bm பாரத் மோட்டார்ஸ்

(உரிமையாளர்: என்.ஆர். பிரை.லிட்.)

இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், பேட்டை

திருநெல்வேலி - 627 010

போன்: 23622, 25932

டெலக்ஸ்: 0433-225 BM-IN

விற்பனை மற்றும் நிர்வாக அலுவலகம் :

151, அண்ணா சாலை

சென்னை-600 002

போன்: 8525512, 8521923

டெலக்ஸ்: 041-6136 BM-IN

மதுரை விநியோகஸ்தர் :

பிரதீபா ஏஜென்சி

153/P, வடக்கு வெளி வீதி

சிம்மக்கல் Ph : 39265, 23301

EXELADS

வண்ணத்துப்பூச்சி வேட்டை

20

சுஜாதா

எந்தக் கணத்தில் என்று சொல்ல முடியாதபடி அர்ஜுனிடம் அந்த சமரசம் நிகழ்ந்தது எனக்கு. ஒரு வாரத்துக்கு சண்டை போடாமல் இருந்து விட்டோம். மாமியாருடன் ஒரு முறை பல்லாங்குழி ஆடிவிட்டேன். மாமனாருக்கு ஒருமுறை அவர் சாப்பிட வேண்டிய மாத்திரைகளை எடுத்துக் கொடுத்தேன். மெல்ல மெல்ல அந்த வீட்டில் என் அன்னியத் தன்மை குறைந்ததற்கு முக்கியக் காரணம் கோவை விஜயமும் காயத்ரியும்தான். காயத்ரி ஊருக்குப் புறப்பட்ட போது கொஞ்சம் அதைரியமாகவே இருந்தது. பழைய படி வாக்குவாதங்களும் கோபங்களும் ஆரம்பிக்குமோ என்று கவலைப் பட்டேன். அப்படி நடக்கவில்லை. அர்ஜுன் தொடர்ந்து அன்பாகவே இருந்தார். ஆபீசிலிருந்து தினம் இரண்டு முறை போன் பண்ணுவார். உரையாடல்கள் இவ்வாறு இருக்கும் :

''என்ன பண்றே?''

''என்ன பண்ணுவா? உங்கம்மாவுக்கு கறிகாய் நறுக்கிக் கொடுத்தேன். ஹிண்டு பேப்பர்ல ஒரு ஆர்ட்டிக்கிள் படித்தேன். ப்ளவ்ஸ் கொஞ்சம் பிடிப்பா இருந்தது; அதை கொஞ்சம் பிரிச்சு தெச்சுண்டேன்.''

''குண்டாயிண்டிருக்கே நீ?''

''ஆமாம்! இந்த மாதிரி சாப்ட்டுட்டு சாப்ட்டுட்டு வீட்டிலேயே உட்கார்ந்திருந்தா?''

''வேற எதும் காரணமில்லையே?''

''சே! கேக்கறதைப் பாரு. அந்த கவலையெல்லாம் வேண்டாம். சான்ஸே இல்லை இன்னும் இரண்டு வருஷத்துக்கு.''

''ராணியம்மா உத்தரவு! நீ எப்ப சொல்றியோ, அப்ப நான் ரெடி.''


இதன்பின் ஆபீஸ் விஷயம் பேசுவார். ஸ்டாக் மார்க்கெட்டில் மஃபத்லால் என்ன ஆச்சு, ரிலயன்ஸ் என்ன ஆச்சு என்று புரியாவிட்டாலும், அப்படியா அப்படியா என்று பொய்யார்வத்துடன் கேட்டுக் கொண்டிருப்பேன். யாராவது விசிட்டர் வந்தால் அப்புறம் பேசுகிறேன் என்று வைத்து விடுவார். சில நாள் பதினைந்து நிமிஷம் கூடப் பேசுவார். எனக்கு வர வர அவர் குரலைக் கேட்பதிலும் அவர் பனியனை சர்ஃப் போட்டுத் தோய்ப்பதிலும் சுவாரஸ்யம் ஏற்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக பரிபூர்ண ரிஷிபத்தினி டைப் மனைவியாக மாறி வருகிறேன் என்பதைத் தெரிந்தே செய்தேன். பொழுது போவதற்காகவாவது கணவனின் சின்னச் சின்ன விவரங்களை கவனிக்கப் பழகிக் கொண்டேன்.

அவர் தாயிடமே ''அம்மா, அவருக்கு காப்பியில் சர்க்கரை அதிகம் போட வேண்டாம்; அவருக்கு உப்புமா பிடிக்காது'' என்று அவருடைய உணவுப் பழக்கங்களின் ஏஜெண்டாகக் கூட மாறிக் கொண்டிருந்தேன்.

இல் வாழ்க்கையில் இருக்கும் அயர்வான விஷயங்களை சுவாரஸ்யமானதாக்க இதெல்லாம் செய்தாக வேண்டும் என்பதை அறிந்து கொண்டு விட்டேன்.

எனக்கு வரவர அவர் குரலைக் கேட்பதிலும், அவர் பனியனை சர்ஃப் போட்டு தோய்ப்பதிலும் சுவாரஸ்யம் ஏற்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக பரிபூரண ரிஷி பத்தினி டைப் மனைவியாக மாறி வருகிறேன் என்பதைத் தெரிந்தே செய்தேன்.

இப்போது அர்ஜுனின் புத்தகங்களை அடுக்கிக் கொண்டிருக்கிறேன். அர்ஜுனின் பொத்தான்களை தைத்துக் கொண்டு, அவருடைய பாண்ட்டு சட்டைகளுக்கு இஸ்திரி போட்டு அர்ஜுனின் நகம் வெட்டியையும்



அர்ஜுனின் பேனாவையும் சரியான இடத்தில் வைத்து, சட்டைப் பைகளை ஆராய்ந்து காலி பண்ணி அதன் பின் என் புடவைகளை பார்த்துப் பார்த்து மடித்து வைக்கவும் எனக்கு அதிகமான சமயமிருந்தது. வீட்டுப் பெண்டாட்டி - ஹவுஸ் வைஃப் அதான் என் பெயர். ரேகா அல்ல!

இதில் ஒருவாறு திருப்தியும் ஏற்பட்டுக் கொண்டிருப்பதுதான் விந்தையாக இருந்தது. என் எடை இரண்டு கிலோ மூன்றுமாதத்தில் கூடியிருந்தது.

எங்களுக்குக் கல்யாணம் ஆகி முதல் ஆண்டு நிறைவு விழாவை எப்படிக் கொண்டாடுவது என்று அர்ஜுன் கேட்டார்.

''கோவிலுக்குப் போகலாம்'' என்றேன்.

''கோவிலுக்கும் போகலாம், வேறு ஏதாவது சொல்லு. சினிமா பார்க்க வேண்டாமா? ஐஸ்கிரீம் சாப்பிட வேண்டாமா? ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலில் டின்னர் வைத்து நண்பர்களைக் கூப்பிட வேண்டாமா?''

''இதெல்லாம் அவ்வப்போது நடந்து வந்திருக்கிறதே? வெட்டிங் ஆனிவர்ஸரி என்று ஸ்பெஷலாக என்ன?'' என்றேன்.

''ஸ்பெஷலாக உனக்கு ஒரு சர்ப்ரைஸ் வைத்திருக்கிறேன். அதை அப்போது சொல்கிறேன்.''

''வைரம், தங்கம் நகை என்றால் வேண்டாம்! இருக்கிற நகைகளே லாக்கரில் தூங்குகின்றன.''

''நகையெல்லாம் இல்லை, இது வேறு'' என்றார்.

''வீடு விஷயம் சொல்லியாகி விட்டது. அதைத் தவிர வேறு எது இருக்க முடியும்?''

''பாரேன்'' என்று சிரித்து எனக்கு முத்தமிட்டார்.

எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் அர்ஜுன் எனக்கு எந்த ஆச்சரியம் அளிக்கப் போகிறார் என்பதைப் பற்றி நான் அதிகம் கவலைப்படவில்லை. ஏதாவது ஸ்டாக் மார்க்கெட் வெடிப்பில் அதிகப் பணம் பண்ணினேன் என்று சொல்லப் போகிறார் என்பதை ஒருவாறு எதிர் பார்த்தேன்.

ஓர் ஐந்து நட்சத்திர ஓட்டலில் பார்ட்டி நடந்தது. அர்ஜுன் ஸூட் போட்டுக் கொண்டு வந்தார். விளம்பரப் படத்தில் புருவம் ஒட்டி ஒருவன் வருவானே, அது போல் இருந்தார். நான் குஜராத்தி ஸ்டைலில் பர்சை சிலுக்கில் பெரிய பார்டர் போட்டு புடைவை கட்டிக் கொண்டிருந் தேன். நீதாதான், எனக்கு சாயங்காலம் வந்து அதை அணிவித்து 'யூ லுக் ராவிஷிங்' என் றாள். அர்ஜுன் கூட ''வாஆவ்' என்று விசி லடித்தார். மிக்கி வந்த உடனே காக்டெயில் பாருக்குச் சென்று கையில் ஒரு கோப்பை வைத்துக் கொண்டதில் என்னிடம் பேச வில்லை. நீதா கையில் கூட சந்தேகத்துக்கு உரிய கலரில் பானம் இருந்தது. நான்தான் பைத் தியம் போல் ப்ரெஷ்லைம் சாப்பிட்டேன்.

அது முடிந்ததும் ஜிஞ்சர் ஏல்.

நேரம் போனதும், டின்னர் தட்டுகளை கொடுக்கும் போது, அர்ஜுன் கையை லேசாகத் தட்டி ''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்'' என்றார்.

''நண்பர்களே! உங்களுக்கு ஒரு முக்கிய மான செய்தி சொல்ல விரும்புகி றேன். இன்றிலிருந்து உங்கள் கம்பெனிக்கு ஒரு புதிய வைஸ் ப்ரெஸிடெண்ட். அது தான் என் நிஜ வாழ்வில் மனைவியான ரேகா அர்ஜுன் என்று சொல்ல யாவரும் கைதட்டினார்கள்.

''கமான் ரேகா, எதாவது பேசுங்க, கமான் கமான்'' என்று சிலர் வற்புறுத்த, கூட்டம் அமைதியாகி நான் பேசக் காத்திருந் தார்கள்.

''நான் என்ன சொல்வேன்? வைஸ் ப்ரெஸிடெண்ட் என்றால் என்ன அர்த்தம் என்றே எனக்குத் தெரியாது.''

''எங்களுக்கும் தெரியாது'' என்றார் அர்ஜுன். எல்லாரும் சிரித்தார்கள்.

''எல்லாம் அர்ஜுன் தீர்மானித்து, அர்ஜுன் நிறைவேற்றுவது! நான் ஒருத்தி இருக்கிறேனா? - என் சம்மதம் தேவை யில்லை என்று அவர் தீர்மானித்திருக்க லாம். ஆனால் என்னை வைஸ் ப்ரெஸி டெண்ட் என்றாலும் இல்லாவிட்டாலும் நான் ஒரு சாதாரண வீட்டு மனைவி, அவ் வளவுதான்.''

''தலைவர் பேசும் போது இடை யில் அடிக்கடி, 'பத்து சென்டிமீட்டர், இருபது சென்டிமீட்டர்'னு சொல் றாரே... ஏன்?''

''வார்த்தைகளை அளந்து பேச றதை சிம்பாலிக்கா சொல்றார் போலிருக்கு!''

- ஏ.கே. ஆனந்தப்ரியா



''உங்கள் பெயரில் நிறுவனமே துவங்கி விட்டோம். ரேகா ஃபினான்ஸஸ்.''

''நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கில்லை.''

''அதெல்லாம் தப்பாட்டம். ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். உங்களுக்கு ரூம் ஒழித்து வைத்துவிட்டார் அர்ஜுன். அதன்பின் எல்லாரும் என்னை மறந்து விட்டார்கள்.

கருநீல ஜார்ஜெட் புடைவை கட்டிக் கொண்டு கழுத்தைப் பிடிக்கும் படியாக வைரக் காலர் அணிந்து கொண்டு என் னிடம் ஒருத்தி வந்து, ''ஹாய் நான் பாலா மணி. அர்ஜுன் என்னைப் பற்றி சொல்லி யிருப்பாரே! வைத்யநாதல் வைஃப்ஸ் சிஸ்டர்'' என்றாள்.

''சொல்லிருக்கலாம், ஞா ப க மில்லை.''

''அர்ஜுன் எப்போதுமே அப்படித் தான். சட்டென்று தீர்மானித்துவிடுவார். வாழ்த்துக்கள்.''

''எதற்கு?''

''புதிய கம்பெனிக்கு டைரக்டர் ஆன தற்கு.''

''எனக்கு எதுவுமே தெரியாது பாலா மணி.''

''எல்லாம் அவரே பார்த்துக் கொள் வார். கால் மி பாலா.''

''பாலா?'' - எனக்கு அந்தப் பெயர் நினைவில் நெருடியது.

''நீங்கள்தான் அர்ஜுனுக்கு ஒரு சட்டை பரிசளித்தீர்களா?''

''ஆமாம்! சட்டை சரியாக பொருந் தியதா?''

''அர்ஜுன் அந்த சட்டை பாலசுப்ர மணியன் என்று ஒருவர் கொடுத்ததாகச் சொன்னார்.''

அவள் சிரித்து ''ஹேய் அர்ஜுன், கம் ஹியர்'' என்று அர்ஜுனை கோட்டுக் கை யைப் பிடித்து இழுத்து, ''உன் மனைவி யிடம் அந்த சட்டை பாலசுப்ரமணி கொடுத் ததாகச் சொன்னாயாமே? என் பெயர் பால சுப்ரமணியமா?''

''பாலசுப்ரமணி - பாலாமணி என்ன வித்யாசம்?''

''அர்ஜுன் இட்ஸ் டு பேட்'' என் கண வனை விட மோசமான ஆசாமி நீ. அவருக்கு சிலநாள் என் பெயரே மறந்து போகும்! வாழ்த்துக்கள்'' என்று கிளாஸை மறுபடி உயர்த்தினாள் அவருக்கு. முப்பது வயசிருக் கும். ஒல்லியாக இருந்தாள். கொஞ்சம் மார்பு. பெரிய கண்கள். ஜிம்னே சியம் போய் உடம்பை உருவி விட்டாற் போல வைத்திருக்கிறாள். இவளை எங்கோ பார்த் திருக்கிறேன் என்று தோன்றியது.

''உங்களை எங்கோ பார்த்திருக் கிறேன்.''

''என் முகம், சோப் விளம்பரத்தில்

வரும். தூர்தர்ஷனில் பாட்டுப் போட்டியில்....''

ஆம், இப்போது ஞாபகம் வந்து விட்டது. எந்த மாதிரியெல்லாம் ஷேப்பில் பெண்கள் வருகிறார்கள் இப்போ என்று வியப்பாக இருந்தது. கிள்ள சதையில் லாமல் பையன் போல இருந்தாள். அவள் சீக்கிரமே புறப்பட்டுப் போய் விட்டாள். நாம் நிச்சயம் மறுபடி சந்திப்போம் என்றாள்.

பார்ட்டி முடிந்து திரும்பிய போது அர்ஜுன் நடையில் சற்றே தள்ளாடினாலும் தெளிவாகப் பேசினார். ''பார்ட்டி பிடித்திருந்ததா?'' காரை கிளப்பாமல் ஸ்டியரிங் மேல் சாய்ந்து எனக்கு முத்தம் கொடுத்த போது ''விஸ்கி வாசனை'' என்றேன்.

''எப்பவாவது ஒரு நாள்.''

''என்னைக் கேட்காமல் பதவி எல்லாம் கொடுத்தீர்கள்.''

''என் வாழ்க்கையில் மட்டும் பார்ட்னர் இல்லாமல் பிஸினஸிலும் ஆக்கிக் கொள்ள வேண்டாமா?''

''குட் நியூஸ் என்று சொன்னீர்களே இதுதானா அது!''

''இல்லை இது இல்லை!''

''பின் என்ன அது குட்நியூஸ்?''

''நான் உன்னை கல்யாணம் செய்து கொள்வதற்கு முன் டில்லியில் பேசிக் கொண்டோம் ஞாபகம் இருக்கிறதா?''

''என்ன, குறிப்பாக என்ன?''

''முப்பத்தைந்து வயசுக்குள் முப்பத்தைந்து லட்சம் பண்ணிவிட வேண்டும் என்றேனே ஞாபகம் இருக்கிறதா?''

''ம்.''

''கை குடு'' என்றார்.

''என்ன, பண்ணி விட்டீர்களா?''

''முப்பத்தைந்து வயசாக வில்லை. அதற்கு இன்னும் ஆறு வருஷம் உள்ளது. ஆனால் முப்பத்தைந்து லட்சம் பண்ணிட்டேன்! முப்பத்தாறு புள்ளி ஏழு எட்டு! கைகுடு'' என்று கையைப் பற்றிக் குலுக்கினார்.

''எனக்கு ரொம்ப சந்தோஷம்! ரொம்ப ரொம்ப சந்தோஷம்!''

''எதையும் அடையுமுன், அது முடியும் என்று நம்பிக்கை வைக்க வேண்டும்.''

''என் சந்தோஷம் அதில் இல்லை.''

''எதில்?''

''முப்பத்தைந்து லட்சம் பண்ணியதும் பணம் துரத்துவதை நிறுத்தி விடுவேன் என்று சொன்னீர்களே ஞாபகம் இருக்கிறதா?''

அர்ஜுன், ''நிறுத்துவதா? இப்போதா? இந்த சமயத்திலா? நோ வே! முடியாது! இது புலி சவாரி! இறங்கினால் சாப்பிட்டு விடும். நிறுத்த முடியாது'' என்றார்.

(தொடரும்)

கடைக்கு கோகுலம் வந்தாச்சு!
குழந்தைகள் ஐஸ்கிரீமை மறந்தாச்சு!

கோகுலம்

ஜூன் இதழில்

* முத்து முத்தான முல்லா கதைகள்!
 - படக்கதை



* பாடத் தெரியாத பாட்டி!
* குட்டை டீச்சர்!
* காலப் பெட்டகம் தெரியுமா?
* திருட்டுப் பழி!
 - படக்கதை

+ 4 போட்டிகள்,
ஏராளக் கதைகள்!
இன்னும் எத்தனை
எத்தனையோ!

மூன்றே ரூபாய்க்கு 96 பக்கங்கள்!

குழந்தைகளுக்கு மட்டுமல்ல,
குடும்பத்தினர் அனைவருக்கும்
மகிழ்ச்சியளிப்பது கோகுலம்

கோகுலம் ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.



ஆனஸ்ட்ராஜ்

முதல் மரியாதை டைரக்டருக்கே. உணர்ந்து, அனுபவித்து எடுத்திருக்கிறார். ஆற, அமர முதல் காட்சியிலிருந்து, கடைசி வரை ஒவ்வொரு கேரக்டரையும் தனித் தன்மையோடு உருவாக்கியிருக்கிறார்.

வழக்கமான பழி வாங்கும் கதைதான். இங்கே வில்லன், நண்பனே. ஆக, சென்ட்டிமென்ட்டுக்குக் குறைவில்லை. மனோரமா அம்மா. கடனை அடைக்க தாலியைக் கழட்டிக் கொடுக்கிறார். சோறூட்டுகிறார். தோள் மேல் வைத்துத் தேற்றுகிறார். 'நீயும் எனக்கு ஒரு பிள்ளைதாம்பா' என்பதுபோன்ற டயலாக்கும் உண்டு. தாய்க்குலம் தாரை தாரையாய்க் கண்ணீர் உருக்கலாம்.

விஜய்காந்துக்கு மற்றொரு நூலேணி. கலபமாய் அழுகிறார். அப்பப்போ கொஞ்சம் காமெடியும் வருகிறது.

கதாநாயகி ஆம்னி. வகையான வழிசல் நாயகி. சுபமாய் முடிக்க வேண்டும் என்பதற்காக கௌதமி. டாக்டராம். வெள்ளைக் கோட் இரண்டு மூன்று சீன்களில் தெரிந்தது. அம்புடுதேன்!

குறிப்பிடவேண்டியவர் அந்த வில்லன். மலையாள இறக்குமதி. ஹீரோ ஆகும் காலம் வெகுதூரமில்லை.

ரீ-ரெக்கார்டிங்கில் இளையராஜா கலக்கியிருக்கிறார். அதுவும் காதல் காட்சிகளில் தான்!

ஆரம்ப சீன்களில் 'புரொட்யூசர் நெறைய பிலிம் வாங்கிக் கொடுத் திருப்பார் போல' என்று யாரோ கமெண்ட் அடித்தார்கள். பின் பகுதி தேவலாம். பின்னங்கால்களை உதறி எழுகிறது.

ரொம்ப நாள் கழித்து ஓர் உருப்படியான விஜய்காந்த் படம். சரியான காம்பினேஷனில் தலையெடுத்திருக்கிறது.

– துளசி.

நஷ்டம் மட்டுமா?

அரசுத் துறையில் நடக்கும் நிறுவனங்கள் உண்மையில் பொதுமக்களுக்கே சொந்தம். எனவே அவற்றின் தலைவிதி நம்மையும் நிச்சயம் பாதிக்கிறது.

இந்திய அரசு பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களில் முதலீடு செய்துள்ள தொகை ரூ.1,50,000 கோடி! இதற்கு அரசுக்குக் கிடைக்கும் லாபப் பங்கீடு - நம்புங்கள் - இரண்டு சதவீதம் கூட இல்லை; அதற்கும் குறைவு! காரணம், ஒரு சில நிறுவனங்கள் தவிர மற்ற எல்லாமே நஷ்டத்தில் நடப்பதுதான்.

இன்றைய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் அரசுத் துறை நிறுவனங்களின் முதலீடுகளில் பொதுமக்களும் பங்கேற்க அனுமதிக்கப்படலாம் என்று முடிவாகியுள்ளது.

இதில் அரசுக்கு இருவித லாபம் உண்டு. முதலாவது, அரசே எல்லாப் பங்குகளையும் தன் வசம் வைத்துக் கொள்ளாமல் பொதுமக்களுக்கும் விநியோகிக்கும் போது கிடைக்கும் பணம், அரசின் சிரமமான பொருளாதாரச் சூழ்நிலையில் கை கொடுத்து உதவும். இரண்டாவது, அரசுத் துறை நிறுவனங்களின் முதலீடுகளில் பொதுமக்களும் பங்கு பெறுவது சாத்தியமாகும்போது, அவர்களுக்கு நேரடியாகப் பதில் கூற வேண்டிய நிர்பந்தம் நிர்வாகத்துக்கு ஏற்படுகிறது. இதனால் அரசுத் துறை நிறுவனங்களின் செயல்பாட்டில் அபிவிருத்தி ஏற்படும்.

நோக்கம் சரியானதுதான். ஆனால் இதனை அமல்படுத்தும் போது தர்ம நியாயமாக நடந்து கொள்ள வேண்டாமா?

நடந்தது என்ன?

அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகள் நேரடியாகப் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவில்லை. மாறாக, யூனிட் டிரஸ்டு ஆஃப் இந்தியாவும் அதுபோன்ற சில நிதி நிறுவனங்களும் விலை கேட்குமாறு கோரப்பட்டன. அதாவது, யூனிட் டிரஸ்ட் போன்ற நிறுவனங்களில் மக்கள் பங்கேற்றிருப்பதால், இந்த நிறுவனங்களுக்குப் பங்குகளை வழங்கினாலே மக்களுக்கும் விநியோகித்த மாதிரி ஆகி விடும் என்று நாடகம் நடத்தியிருக்கிறது, அரசு. இந்த நிதி நிறுவனங்களும் ஏதோ ஒரு விலைக்கு வாங்கிக் கொள்வதாகச் சொல்ல, அவற்றுக்குப் பங்குகளை அரசு விற்று விட்டது. இன்னொன்று: ஒவ்வொரு நிறுவனத்தின் பங்குகளையும் தனித் தனியே

கொள்ளையும் கூடவா?

ஞாபகப்படுத்துகிறோம்!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்கான கதைகள் வந்து சேரக் கடைசி நாள் ஜூன் 15! விரிவான விவரங்களுக்குச் சென்ற இதழைப் பாருங்கள். அல்லது அடுத்த இதழ்வரை காத்திருங்கள்!

\- ஆசிரியர்

விற்காமல், லாபம் காணும் நிறுவனப் பங்குகளுடன் நஷ்டம் காணும் நிறுவனப் பங்குகளையும் இணைத்து, ஒட்டுமொத்தமாக வாங்கிக் கொள்ளச் செய்திருக்கிறது.

இதனாலெல்லாம் சென்ற ஆண்டு அரசுக்கு-அதாவது மக்களுக்கு - ரூ.3600 கோடி நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகப் பிரதம கணக்காயர் அலுவலகம் மதிப்பிட்டுச் சொல்லியிருக்கிறது.

அரசு எப்படி நடந்து கொண்டிருக்க வேண்டும்?

தனியார் துறை நிறுவனங்கள் பங்கு மார்க்கெட்டுக்கு வரும்போது அந்தந்த நிறுவனத்தின் செயல்பாட்டின் அடிப்படையில் பங்குகளின் மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. பத்து ரூபாய் பங்கை மக்கள் பல சந்தர்ப்பங்களில் கூடுதல் விலை தந்து ரூ.25க்கோ அல்லது ரூ.60க்கோ கூட வாங்குவார்கள். இதிலும் யூனிட் டிரஸ்ட் போன்ற நிதி நிறுவனங்களுக்குப் பங்குகள் ஒதுக்கப்படும். ஆனால் கணிசமான பகுதி பொது மக்களுக்கு நேரிடையாகவும் விநியோகமாகும்.

அதேபோல் அரசுத் துறை நிறுவனங்களுக்கும் தனித்தனியே பங்குகளின் விலையை நிர்ணயம் செய்து, பங்கு மார்க்கெட்டுக்கு வந்து, பொதுமக்களுக்கும் விநியோகிக்க வேண்டும். விலை நிர்ணயம் செய்ய நிபுணர்களுக்கு அரசு இலாகாக்களில் பஞ்சமே இல்லை.

இவ்வாறு செய்யாமல், ஏதோ சில நிதி நிறுவனங்களை மட்டும் விலை கேட்கச் சொல்லி, அவர் நிடம் விற்றுவிட்டதில் பிரதம கணக்காயர் கூறியபடி நஷ்டம் மட்டுமல்ல; அதற்கும் மேலே ஏதோ கோல்மாலும் நடந்திருக்கக் கூடும் என்ற சந்தேகம் மக்களுக்கு எழுவது இயல்பு.

நடப்பு ஆண்டிலும் ரூ.2500 கோடிக்கு அரசுத்துறை நிறுவனப் பங்குகளை விற்க அரசு தீர்மானித்தது. அடிமட்ட விலையை நிர்ணயித்து அதை ரகசியமாக வைத்துக் கொண்டது. இதற்கு ரூ. 4500 கோடி வரை பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்தாலும், அடிமட்ட விலைக்கும் அதற்குச் சற்றுக் கூடுதலாகவும் வந்த விண்ணப்பங்களைக் கணக்கிட்டால் ரூ. 2300 கோடிதான் தேறுகிறது. மற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. அரசு நிர்ணயித்த அந்த அடிமட்ட விலை என்ன? இதில் ரகசியம் எதற்கு? ஏன் பங்கு மார்க்கெட்டுக்கு வந்து பகிரங்கமாக மக்களுக்கே நேரடியாகப் பங்குகளை விநியோகிக்கக் கூடாது? போன்ற கேள்விகள் அரசின் உள்நோக்கத்தைச் சந்தேகிக்க வைக்கின்றன.

\- வி.கோபாலன்

சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி

ராவணன் தன் முடிவில் பிடிவாத மாக இருந்தபோதிலும், சீதையைப் பற்றித் தன்னுடைய ஆசை நிறைவேறவில்லையே என்றும், நெருங்கிய உறவினர்களும் தன் காரியங்களைக் குற்றமாகக் கருதுகிறார்களேயென்றும் நினைத்து சாந்தியை இழந்தான். ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல் மறுபடியும் சபை கூட்டினான். காமமும் கோபமும் புத்தியை நேர் வழியில் செல்ல விடாமற் போனாலும் தான் செய்ததில் தவறு இருப்பதை உணர்ந்து மற்றவர்களோடு ஆலோசனை செய்வதில் ஒரு ஆறுதல் கண்டான்.

தங்க மயமான தேரில் ஏறித் தெருவில் சென்றான். மிக உயர்ந்த ஜாதிக் குதிரைகள் பூட்டிய தேர், கத்தியும் கேடயமும் தரித்த வீரர்கள், கண்ணைக் கவரும் உடுப்புகள் அணிந்து முன்னும் பின்னும் இரு பக்கங்களிலும் சென்றார்கள். சிலர் தேர், யானை, குதிரை முதலிய வாகனங்களில் ஏறி பயங்கரமான தோமரம், கோடரி, சூலம் முதலிய ஆயுதங்களைத் தரித்து ராவணனுடைய தேருக்குப் பின்னால் சென்றார்கள். சங்கம், பேரி முதலிய போர் வாத்தியங்கள் முழங்கின. ராஜ வீதியில் லங்கேசன் பரிவாரத்துடன் இப்படி வெகு கம்பீரமாகச் சென்ற போது வழியில் நின்றவர்கள் எல்லாரும் கை கூப்பித் தலை வணங்கி நமஸ்கரித்து வெற்றி கோஷங்கள் செய்தார்கள். திக்குகள் நடுங்கும்படி, சங்குகளும் பேரிகைகளும் கோஷிக்க ராக்ஷசேந்திரன் சபைக்குள் பிரவேசித்தான்.

தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட தூண்களும் சிறந்த விரிப்புகளும் மயனுடைய சிற்பமும் சாமர்த்தியமும் விளங்கிய அந்த மண்டபத்தில் வைடூர்ய சிம்மாசனத்தின் மேல் ராவணன் அமர்ந்தான். நூற்றுக் கணக்கான பிசாசங்கள் சபைக்குக் காவலாட்களாக நின்றன. ராக்ஷசேந்திரன் உத்தரவின்படி ராக்ஷச வீரர்கள் ஆயிரக்கணக்காக வந்து குழுமியிருந்தார்கள். அவர்கள் வந்த வாகனங்கள் வெளியில் பெருங்கணக்காக நின்றன. அவரவர்கள் பதவிக்குத் தக்கவாறு ஆசனங்களில்

உட்கார்ந்தார்கள். புரோகிதர்கள், வேதம் ஓதுபவர்கள் நூற்றுக்கணக்காக வந்து வெகுமானிக்கப்பட்டு அமர்ந்தார்கள்.

விபீஷணன், சுகன், பிரஹஸ்தன் முதலியவர்கள் ராவணேசுவரனை வணங்கி விட்டுத் தங்களுடைய ஆசனங்களில் அமர்ந்தார்கள். ஆலோசனை சபையில் நிர்வாகிகள், உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் வந்து கூடியிருந்தார்கள். அவர்கள் அனைவரும் மகா நிபுணர்கள், சூரர்கள், ராவண பக்தர்கள்.

பரிமளப் பொருள்களின் வாசனை மண்டபத்தில் வீசிற்று. ஒருவருடன் ஒருவர் பேசாமல், சப்தம் அடங்கி, சபை மிக கம்பீரமாக அறிவாளிகளும் மகாபலசாலிகளும் உக்ர வீரர்களும் நிறைந்து தேவேந்திரனுடைய சபைக்கு நிகராக விளங்கிற்று.

தன் ராஜ்யத்தின் க்ஷேமத்தைக் கோரினவனும் இயற்கையாகச் சிறந்த அறிவாளியுமான ராவணன் காமத்தின் வேகத்தால் மதியை இழந்தான். பெருங் கவலையிலிருந்தானாகிலும் காமத்தாலும் அகங்காரத்தாலும் சரியான யோசனை செய்ய முடியாத நிலையிலிருந்தான். சபையில் கூடிய தன் பந்துக்களும் தன் நன்மையை விரும்புகிறவர்களுமான ராக்ஷஸ கூட்டத்தைப் பார்த்துச் சொன்னான் :

''எல்லாவிதத்திலும் நீங்கள் திறமைசாலிகள். எந்தச் சிக்கலான விஷயத்திலும் சரியான யோசனை சொல்லும் சக்தி வாய்ந்தவர்கள். இதுவரை நீங்கள் ஆலோசித்துச் சொன்ன எந்த விஷயமும் பயன் பெறாமல் போனதேயில்லை. ஆனபடியால் உங்களை இப்போது கேட்கிறேன். நான் செய்த காரியம் உங்களுக்குத் தெரிந்ததே. தண்டகாரண்யத்தில் வசித்துக் கொண்டிருந்த ஜானகியைக் கொண்டு வந்து விட்டேன். அவள் பேரில் எனக்கு உண்டாகியிருக்கும் ஆசையை என்னால் அடக்க முடியவில்லை. அவளை நான் திருப்பியனுப்ப முடியவே முடியாது. இப்போதும் அவள் பேரில் எனக்குள்ள விருப்பத்தை நீக்கிக் கொள்ள என்னால் முடியவில்லை. இதை நான் உங்கள் முன்னிலையில் ஒப்புக் கொள்ளுகிறேன்.

''என் விருப்பத்துக்கு அவள் சம்மதிக்கவில்லை. ராமன் வருவான், தன்னை மீட்பான் என்று நம்பி வருகிறாள். 'அவன் வர முடியாது, உன்னை அவன் அடைய முடியாது, என்னை ஒப்புக் கொண்டு சுகமாக இரு' என்று எவ்வளவோ நான் சொன்னேன். ஒரு வருஷ காலம் கெடு கேட்டாள். நானும் அதற்கு ஒப்புக் கொண்டேன். இப்போது உங்கள் யோசனையைக் கேட்கிறேன். என் இஷ்டம் பூர்த்தியாகவில்லை. சீதையைத் திருப்பி அனுப்பிவிட்டு ராமனிடம் மன்னிப்புக் கேட்க என் மனம் ஒருநாளும் இசையாது. இது வரையில் நானும் வீரர்களாகிய நீங்களும் எந்த யுத்தத்திலும் தோல்வியைக் கண்டதில்லை. இந்தச் சமுத்திரத்தைத் தாண்டி ஒரு வானரன் எப்படியோ வந்து இந்த நகரத்தைச் சேதம் செய்து விட்டுத் திரும்பினான். ராமனும் வானர சேனையும் கடலைத் தாண்டி வருவது கஷ்டம். வந்தாலும் எனக்குப் பயமில்லை. நன்றாக யோசித்துச்



சொல்லுங்கள். கடல் எதிர்க் கரையில் ராமலக்ஷ்மணர்களும் வந்திருக்கிறார்கள். ராம லக்ஷ்மணர்களைக் கொல்லும் உபாயம் சொல்லுங்கள்.

''நான் முந்தியே சபை கூட்டியிருப்பேன். கும்பகர்ணன் விழித்துக் கொள்ளவில்லை. அதற்காகக் காத்திருந்தேன்'' என்றான்.

இவ்வாறு காமத்தால் புத்தியிழந்து; தன் கவலையை மறைத்துக் கொஞ்சம் பொய்யும் கலந்து பேசினான். சீதை ஒரு வருஷ காலம் கெடு கேட்கவில்லை. தன் கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள இவ்வாறு மாற்றிச் சொன்னான்.

(தொடரும்)





''டாக்டர் பெரிய ஆளுய்யா!''

''என்ன விஷயம்?''

''ஆபரேஷன் தியேட்டருக்கு வெளில ஆறிலும் சாவு நூறிலும் சாவு; கன்ஸ் யூமர் கோர்ட் எதுக்கு?ன்னு எழுதி வச்சருக்கார்!''

- அம்பை தேவா





''பத்திரிகைக்காரங்க எதையெதைத் தான் 'எடிட்' பண்றதுன்னு விவஸ்தை யில்லாம போச்சு...!''

''ஏன்...?''


''கதை 'போர்'னு கடிதம் எழுதினா கதை 'ஜோர்'னு வெளியிடறாங்களே''

- ஜுனியர் தேஜ்.

''உங்களுக்கு இப்ப ரொம்ப மோசமான டயம் நடக்குது; ஆபீஸ்ல லஞ்சம் வாங்கினா கண்டிப்பா மாட்டிக் கிடுவீங்க...''

''அப்ப, லஞ்சத்தை வீட்டுல கொண்டு வந்து தரச் சொல்லிட்டாப் போச்சு!

- சீர்காழி வி. ரேவதி.





''இதுக்குத்தான் கீழ்மட்டத்தி லேர்ந்து படிப்படியா வந்த ஆசா மியை மானேஜராகப் போடணுங் கிறது! நேரடியாக வந்தால் இப்படித் தான்; சே!''

''என்னாச்சு?''

''பின்னே பாருங்களேன்! பத்து ரூபாய் லஞ்சம் வாங்கறதுக்குள்ள எப்படி வேர்த்துக் கொட்டுது அவ ருக்கு!''

- எஸ்.ரமேஷ்.

கே. கந்தவேல்

ஏமாந்தவன்

"கமலா! நம்ம வசந்தாவுக்கு பார்த்திருக்கற வரன் சரிப்பட்டு வரும்னு தோணல."

"ஏங்க? மாப்பிள்ளை பேங்க்லதானே வேலை பாக்கறார்?"

"ஆமா, ஆனா கை சுத்தம் இல்ல. நாலாயிரத் துக்கு நாற்பத்தோரு நூறு ரூபா நோட்டு கொடுத்தேன். ரெண்டு தடவை எண்ணிப் பார்த்தும் அந்த ஒரு நூறு ரூபா நோட்டை அவன் திருப்பித் தரல. இப்படி நேர் மையில்லாதவன் நாளைக்கு பேங்க் பணத்துலேயே கை வச்சாலும் வைப்பான். மாட்டிக்கிட்டா வேலை யைத் தொலைச்சிட்டுத் தெருவுல நிப்பான். அப்புறம் நம்ம பொண்ணுதான் கஷ்டப்படணும். வேணாம். நாம வேற இடம் பார்க்கலாம்."



பேங்க்...

கேஷ் கவுண்டரில் சட், சட்டென பணத்தை வாங்கி, எண்ணி, என்ட்ரி போட்டு அனுப்பிக் கொண்டிருந் தான் ரகு.

கடைசியாய் வந்தவர் நீட்டிய கற்றை நோட்டுகளை வழக்கம்போலவே வாங்கி எண்ணியவன் கொஞ்சம் நிதானித்தான்.

இதென்ன? இவர் நீட்டிய ஸ்லிப்பில் நாலாயிரம் என்று எழுதியிருக்கிறது! ஆனால் நாற்பத்தோரு நூறு ரூபாய்த் தாள்களை நீட்டுகிறார்?

"எவ்வளவு சார்?" சந்தேகத்திற்கு ஒருமுறை கேட்டுக் கொண்டான் ரகு.

"நாலாயிரம்" என்றார் அவர்.

ரகு மீண்டும் ஒரு முறை வேகவேகமாக எண்ணினான்.

நாற்பத்தொன்றுதான் இருந்தது. ஒரு நோட்டைத் திருப்பிக் கொடுத்துவிடலாமா என ஒரு செகண்ட் யோசித்தான். ஆனாலும் ஆசை விடவில்லை.

பணத்தை பாக்ஸில் போட்டுவிட்டு என்ட்ரி போட்டு, ரப்பர் ஸ்டாம்ப் அடித்து கவுண்டர்ஃபைலை நீட்டினான்.

அவர் எதுவுமே நேராதது போல வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

அட ஏமாளி! ரகு மனம் குதூகலித்தான்.


தேவை: ஜம்ஷெட்பூர் மாப்பிள்ளை!

ஜம்ஷெட்பூர்.
எஃகு நகரம்.

இங்கு தயாராகும் மனித மனங்கள் இரும்பல்ல, கரும்பு. அதிலும் தமிழர்கள், முக்கியமான நிலைகளில் உயர் பதவிகளில் இருந்து கொண்டு, உள்ளூர்வாசிகளுடன் உற்சாகமாக ஒத்துழைத்துப் பெரிய பெரிய காரியங்களைச் சாதித்து வருகிறார்கள்.

என்ன சாதனைகள்? தெரிந்து கொள்ள, நாமும் ஒரு சாதனை புரிய வேண்டும். கொரமாண்டல் எக்ஸ்பிரஸில் ஏறி, ஏஸி இரண்டாம் வகுப்பு என்றாலும் குஷியாகக் 'குடுகுடு'வென்று குறுக்கும் நெடுக்குமாக ஓடும் கண்டெலிகளுக்காகக் கால்களை அவ்வப்போது 'விசுக் விசுக்'கென்று உயர்த்திக் கொண்டு, ரயிலில் தரப்படும் உணவை எப்படியோ மென்று விழுங்கிக் கொண்டு, இடை இடையே மறியல் என்று சாக்கிட்டு ரயில் நிறுத்தப்படுவதையும் அதனால் ஏற்படும் தாமதத்தையும் சகித்துக் கொண்டு, ஒன்றரை நாள் பயணித்து, கரக்பூர் சென்று அடைய வேண்டும். இந்தியாவிலேயே நீளமானது என்று பெருமையுற்ற பிளாட்ஃபாரம் மீது நடந்து, நடந்து, நடந்து வெளியே வந்து 200 கி.மீ. கார் பயணம் மேற்கொள்ள வேண்டும். (கூரையில் உள்ளூர்வாசிகள் போல் சகஜமாக ஏறி சவாரிக்கத் தயாராயிருந்தால்தான் பஸ்ஸில் இடம் கிடைக்கும்!) படைபதைக்கும் வெயிலில் 'டமால் டமால்' என்று தூக்கிப் போட்டுப் பந்தாடும் சாலையில் பல்லைக் கடித்துக் கொண்டு மூன்று மணி நேரம் பயணித்தால் சொர்ணமுகி ஆறு குறுக்கிடும். அங்கே ஒரு ஊர்வலம் ஒரு மணி நேரம் உங்கள் பொறுமையைச் சோதித்துப் பிறகு வழி விடும்.

ஆற்றைத் தாண்டிவிட்டால் எங்கும் பசுமை, பசுமைதான். பெங்களூரைத் தோற்கடிக்கும் மர நிழல் நகரம் ஜம்ஷெட்பூர். ''முதலில் மரங்களைத் திட்டமிட்டுப் பயிரிடு; பிறகு எஃகு ஆலை; அப்புறம் குடியிருப்புப் பகுதிகள்'' என்று வரிசைப்படுத்திய ஜம்ஷெட்ஜி டாடாவின் தீர்க்க தரிசனம் பயன் தந்து இன்று கடும் கோடையிலும் ஜம்ஷெட்பூரை ஜில் நகரமாக்குகிறது.



● தமிழ் வாரப் பத்திரிகைகளைக் கிழி கிழி என்று....

ஆரம்ப நாட்களிலிருந்தே டாடா எஃகு ஆலையில் தமிழர்கள் பலர் சேர்ந்து பணியாற்றியிருக்கிறார்கள். வீட்டு நினைவே இன்றி தினம் 12 மணி நேரம், 14 மணி நேரம் என்று உழைத்திருக்கிறார்கள். வீட்டில் தனித்து விடப்பட்ட மனைவிமார்கள் பொழுது போகாமல் தவித்து, சில காலத்துக்குப் பிறகு ஐந்தாறு பேர்களாகச் சேர்ந்து ஒரு மாதர் சங்கம் ஆரம்பித்தார்கள். தக்ஷிண பாரத மகிள சமாஜம். சுருக்கமாக





* பாராட்டுப் பரிசு - டாடா ஸ்டீல் நிர்வாக இயக்குனர் இரானி வழங்குகிறார்

ஆங்கில முதலெழுத்துக்கள்: டி.பி.எம்.எஸ். இன்று பொன் விழா கண்டிருக்கும் இந்த மாதர் சங்கத்தில் ஆரம்பத்தில், எங்கேயும் போலத் தான் அரட்டை, கோலப் போட்டி, பிக்னிக், தையல் வகுப்பு, ஊறுகாய்க்கு ரெஸிபி என்று நடந்திருக்கிறது. சில காலம் சென்றதும் குழந்தைகளுக்குப் பள்ளிக் கூடம் வசதியாக இல்லாதது உணரப்பட்டிருக்கிறது. டிஸ்கோ நிர்வாகம் எஃகுத் தயாரிப்பிலிருந்து கவனத்தைத் திருப்பி எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட விரும்பவில்லை. ஆனால் இந்தப் பொறுப்பைக் கர்ம சிரத்தையுடன் ஏற்பவர்களுக்கு ஓரளவு உதவத் தயாராக இருந்தது. இந்த வாய்ப்பை மகிள சமாஜம் பயன் படுத்திக் கொண்டு ஒரு ஹிந்தி மீடியம் பள்ளி ஆரம்பித்தது.

சிறப்பான இந்த சமுதாயப்பணி பின்னர் ஆங்கில மீடியம் பள்ளி ஒன்று தொடங்கவும் வழி வகுத்தது. அப்போது தான் ஜம்ஷெட்பூரில் வசிக்கும் எல்லோருடைய ஏகோபித்த நன்றிக்கும் பாராட்டுதலுக்கும் டி.பி.எம்.எஸ். பாத்திரமாயிற்று. காரணம், எஃகு ஆலையில் இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் வந்து பணியாற்றுவோர் இருந்தார்கள். பிள்ளைகளின் எதிர்காலத்தை எண்ணி ஆங்கில மீடியத்தில் படிக்க வைக்க விரும்பினார்கள். படிப்படியாக வளர்ந்த இந்தப் பள்ளியில் இன்று 2750 மாணவ மாணவியர் படிக்கிறார்கள் என்றாலும் அட்மிஷனுக்கு அனுமார் வாலாக நீண்ட கியூ பள்ளியின் கட்டடங்களும் பரிசோதனைச் சாலைகளும் இதர பல வசதிகளும் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தை உணர்த்துகின்றன. கல்வித் தரமும் கூடவே




* கவிதையும் கானமும் இணைந்த நம் கலாசாரம்

உயர்ந்திருப்பதை பள்ளி மாணவ மாணவியரே மேடை ஏறி, ஆடிப் பாடி, நாடகம் நடத்தி நிரூபித்தார்கள். டி.பி.எம்.எஸ்ஸின் பொன் விழாவையொட்டி நடந்தன, இந்தக் கலை நிகழ்ச்சிகள்.

நாடகம் என்றால் ஏதோ காதல் கதையோ, புராணமோ அல்ல. ஜோக் தோரணமோ என்றால் அதுவும் அல்ல. இன்றைய இந்தியாவின் நிலை. 'இந்தியா வில் கல்வி வளர்ச்சி' என்று நமது பண்பாட்டின் சிறப்பை உணர்த்தும் ஒரு நாடகம்; பெண்ணுரிமையை நிலைநாட்ட நடக்கும் போராட்டங்களைச் சித்திரிக்கும் நாடகம்; அரசியல்வாதிகளுக்கு நாளுக்காக சூடு கொடுக்கும் ஒரு அங்கத நாடகம் என்று பல வகை. ஒரு டி.கே.எஸ். முத்திரை யையோ பாலசந்தர் தேர்த்தியையோ நாடகத்தில் காண முடியாமல் போகலாம்; ஆனால் நாடகத்தின் இலக்கில், அதன் இலக்கிய அமைப்பில் தாங்கள் யாருக்கும் சோடை போகவில்லை என்பதற்கு மாணவ மாணவியரே சாட்சியமானார்கள்.

தக்ஷிண பாரத மகிள சமாஜம், பள்ளிகள் நடத்துவது தவிர வேறு பல பணிகளும் செய்கிறது. ஆதர வற்ற பெண்களுக்குப் புனர் வாழ்வு



* டிஸ்கோ: இரவு நேரத் தோற்றம்

மையம் நடத்துகிறது. இவர்களுக்கு பன்-ரொட்டி தயாரிக்கும் கலையைக் கற்றுக் கொடுக்கப் போக, இன்று DBMS ரொட்டி ஜம்ஷெட்பூரில் மட்டுமின்றி சுற்று வட்டாரத்திலும் பிரசித்தி பெற்று விட்டது - அதன் ருசிக்கும் தரத்துக்குமாக. இந்த அமைப்பும் வளர்பிறையாகி இன்று மிக நவீனமான ரொட்டி தயாரிப்பு உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன. தையல் வகுப்பு, கோலப் போட்டி போன்ற வழக்கமான அம்சங்களுக்கும் குறைவில்லை.

ஜம்ஷெட்பூர் வாழ் மாதர்கள் இப்படியென்றால் அவர்களின் கணவன்மார் எப்படி? பாதுகாப்புக்காகத் தலையில் இரும்புத் தொப்பி மாட்டிக் கொண்டு டிஸ்கோ எஃகு ஆலைக்குள் நுழைந்தால் தெரியும். இங்கு எல்லாமே பிரும்மாண்டம் தான். ஆரம்ப கால ஆலை முதல் அதிநவீன அமைப்புகள் வரை டிஸ்கோவின் பரிணாம வளர்ச்சியைப் பறை சாற்றுகின்றன. ஒவ்வொரு கட்டடத்திலும் ஒவ்வொரு நிலையிலும் தவறிப் போய் தடுக்கி விழுந்தால் கூட ஒரு தமிழன்தான் நம்மைத் தாங்குவார். ஆனால் இவர் சர்வதேச நோக்குடைய தமிழர்.

ஓர் உதாரணம் பாருங்கள். இத்தாலியிலிருந்து ஒரு அதிநவீன எஃகு ஆலை போர்ச்சுகலுக்குத் தருவிக்கப்பட்டது. ஆனால் ஏதோ அரசியல் குறுக்கீடு, போர்ச்சுகலில் அந்த ஆலையைத் தருவித்தவர்களால் நிறுவ முடியவில்லை. மோப்பம் பிடித்தான் ஜம்ஷெட்பூர் தமிழன். பிரும்மாண்ட எஃகு ஆலையை என்ன செய்வது என்று தவித்துக் கொண்டிருந்தவர்களிடம் போய் தன்னுடைய விலைக்குத் தட்டிக் கொண்டு வந்து டிஸ்கோ வளாகத்தில் நிறுவி விட்டான்! திட்டமிட்ட காலக் கெடுவுக்கு முன்னதாகவே அது இயங்க ஆரம்பித்து இரும்புக் கால்வாயை ஒரு பக்கமும் சிமெண்ட் தயாரிப்புக்குப் பயன்படும் கழிவுக் கால்வாயை இன்னொரு புறமும் ஓட விடுகிறது. இரண்டுமே அனல் பறக்கும் செங்குழம்புக் கால்வாய்கள். எல்லாவற்றையும் ஏ.ஸி. அறைக்குள் நாலு பேர் உட்கார்ந்து கொண்டு கம்ப்யூட்டர்களை இயக்கி கட்டுப்படுத்துகிறார்கள்.

உருகி ஓடும் இரும்பு, எஃகாக மாறுவதும் செம்பாளங்களாக வார்க்கப்படுவதும் அதனை லேஸர் கதிர்கள் ஆவின் வெண்ணெய் போல் கருதி குறிப்பிட்ட நீளங்களில் துண்டு போடுவதும் வெட்டப்பட்டு முன்னேறும் பாளங்கள் மாபெரும் உருளைகள் இடையே சிக்கி நீ நீ நீட்டப்படுவதும், நீண்டு நெளியும் எஃகுத் தகடுகள் பாயாகச் சுருட்டப்படுவதும், லாரியில் ஏற்றப்பட்டு ஏற்றுமதிக்கும் உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் விரைவதும் நேரில் காணப்பட வேண்டிய கண் கொள்ளாக் காட்சிகள்.

இதே டிஸ்கோவுடன் சென்னை கோதாரி நிறுவனம் இணைந்து தமிழகத்தில் ஒரு எஃகுத் தொழிலகம் அமைக்க முற்பட்டபோது, தமிழக அரசு நெருப்புக் கோழியாக மணலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு மோடியுடன் மோடி செய்தது புரட்சியா, அறிவு வறட்சியா என்பதுதான் கேள்வி. நஷ்டம் தமிழகத்துக்குத்தானே?

ஜம்ஷெட்பூர் டிஸ்கோ வளாகத்தில் பல காலம் முன்பு நிறுவப்பட்ட பழைமையான எஃகு ஆலைகளும் தங்கள் பணியைச் செய்துதான் வருகின்றன. ஆனால் இவற்றால் லாபம் குறைவு என்பதுடன் சுற்றுச் சூழல் மாசும் ஒப்பு நோக்க அதிகம். ஜம்ஷெட்ஜி டாடாவின் மரம் நடு மகோத்சவம் தான் மாசுக் கட்டுப்பாட்டுக்கும் கணிசமாக உதவுகிறது. ஆரோக்கியம் பாதிக்கப்படுவதில்லை. ஆயினும் நவீனமயமாதலுக்கு இந்தப் பழைய ஆலைகள் படிப்படியாகத் தலை வணங்கியே ஆக வேண்டியிருக்கும்.

ஜம்ஷெட்பூரின் வளர்ச்சியில் ஒரு வேடிக்கை என்னவென்றால் பெண்மணிகளின் ஒத்துழைப்பு இருப்பதால்தான் வீட்டுக் கவலை இன்றி தங்களால் டிஸ்கோ தொழிலகத்தின் முன்னேற்றத்துக்கு முழு மூச்சுடன் உழைக்க முடிகிறது என்று புருஷர்களும், ஆண்களின் ஒத்துழைப்பு இருப்பதால்தான் நாங்கள் இல்லத்தரசிகளாக மட்டுமில்லாமல் சமுதாயப் பணியும் ஆற்ற முடிகிறது என்று குடும்பத் தலைவிகளும் சத்தியம் பண்ணுகிறார்கள்! சாட்சியமாக, டி.பி.எம்.எஸ். பொன் விழாவில் அதன் வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றிய பெண்மணிகள் மட்டுமின்றி அவர்களின் கணவன்மார்களும் கௌரவிக்கப் பட்டார்கள்!

விதிவிலக்கின்றி எல்லோருமாகச் சேர்ந்து கொண்டாடுவது மகிளா சமாஜத்தின் தலைவி பானுமதி நீலகண்டனை. பானு - மதி என்ற பெயருக்கு ஏற்ப இவரது



● நாடக மேடையிலும் பெண் உரிமைப் போராட்டம்!



✱ பொன் விழாவையொட்டி ஈங்கோலி போட்டியும் உண்டு


ஊக்குவிப்பும் உற்சாகமான தலைமையும் இல்லாது போனால் - கூடவே கண்டிப்பும் கறாரும் இல்லாதிருந்திருந்தால் - தக்ஷிண பாரத மகிள சமாஜம் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கவே முடியாது என்று எல்லோருமே ஏகமனதாகச் சொல்கிறார்கள். நீலகண்டன் பணி ஓய்வு பெற, பானுமதி - நீலகண்டன் தம்பதி சென்னையில் குடியேறினாலும், ''சதா எங்களுடனேதான் இருப்பார்கள்'' என்கிறார்கள். அப்படி எல்லாருடைய இதயத்திலும் குடியேறியிருக்கிறார் பானுமதி!

மகிள சமாஜம் தவிர, மதராஸி சம்மேளனம் ஒன்றும் 75 ஆண்டுகளுக்கு மேலாக ஜம்ஷட்பூரில் நடந்து வருகிறது. தனது சமுதாயப் பணியின் ஓர் அங்கமாக விசாலமான திருமணக் கூடம் ஒன்று அமைந்திருக்கிறது. கலைஞர்களைத் தருவித்தும் அங்கத்தினர்களே கலை நிகழ்ச்சிகள் நடத்தியும் தமிழர்களின் கலாசார தாகத்தைத் தணிக்கிறார்கள். நான் போயிருந்த போது ''அகஸ்தியன்'' பாணியில் ஒரு சிரிப்பு நாடகம் நடத்தி தமிழ்ப்பத்திரிகைகள் சிலவற்றைக் கிழி கிழி என்று கிழித்தெறிந் தார்கள், மதராஸி சம்மேளனத்தினர். மறுபடி ஒட்ட வைப்பதற்குள் பெரும் பாடாகி விட்டது!

இரண்டு நாட்கள் முழுசாக ஜம்ஷட்பூரில் தங்கியிருந்து விட்டு மூன்றாம் நாள் புறப்பட்டு கொரமாண்டலில் திரும்பும் போது ஏற்பட்ட எண்ணம் இதுதான் : ''மங்கயராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா!'' என்று கவிஞன் பாடியிருக்கலாம்; ஆனால் அதை நேற்று வரை நான் நம்பியதில்லை. காரணம், 'ஏன் தான் பெண்ணாய்ப் பிறந்தேனோ?' என்ற பிரலாபத்தைக் கேட்டதுதான் அதிகம். ஆனால் தக்ஷிண பாரத மகிள சமாஜத்தின் சாதனைகளைப் பார்த்த பிறகு, அடுத்த ஜன்மத்திலாவது பெண்ணாய்ப் பிறக்கலாமே என்ற ஆசை தோன்றி விட்டது! அதுவும் ஜம்ஷட்பூரில் பிறக்க வேண்டும், அல்லது ஜம்ஷட்பூர் மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப் படவாவது வேண்டும்!

– கி. ராஜேந்திரன்

படங்கள் : யோகா





எவ்வளவோ பேர் தினமும் தியானம் செய்வதாகக் கூறுகிறார்களே, நாமும் தான் செய்து பார்ப்போமே என்ற நல்லெண்ணம் ஒரு நாள் திடீரென்று எழுந்தது. கூடவே, 'உன்னால் முடியுமா...?' என்று உள் மனம் கேள்வி கேட்டது. 'அதிகமில்லை ஜென்டில்மேன்! - ஜஸ்ட் ஐந்தே நிமிடம் பண்ணித் தான் பார்க்கறேனே.....' என்று அதற்குச் சவால் விட்டு விட்டுக் காரியத்தில் இறங்கினேன்.

கண்கள் திறந்திருந்தால், கண் வழியே மனம் சென்று விடுகிறது. எனவே, கண்களை இறுக மூடிக் கொண்டு மனத்தைக் கட்டிப் போட்டேன். சனியனே! எங்கும் நகராதே. இங்கேயே நில்.

''மாநிலச் செய்திகள் வாசிப்பது ஜெயா பாலாஜி. சட்டசபையில் நேற்று மீண்டும் அமளி ஏற்பட்டது. மத்திய அரசின் மீது முதல்வர் புகார் கூறியிருக்கிறார்...''

''அட சட்! கமலா அந்த ரேடியோவை கொஞ்சம் ஆஃப் பண்ணேன். ஒரே நியூஸை எத்தனை வருஷமாகக் கேக்கறது? ஒரு அஞ்சு நிமிஷமாவது தியானம் பண்ண விடு!''

ரேடியோ அணைக்கப்பட்டது. ஏன் கடவுள் காதுகளுக்குக் கதவு வைக்கவில்லை? உஸ்ஸ்.... மனக் குரங்கே. தேவையற்ற சிந்தனை வேண்டாம். ஒழுங்காக தியானம் செய்.

அமைதி. மின் விசிறியின் சப்தம் மட்டும்தான் கேட்கிறது. வாங்கி, பத்து வருடங்களுக்கு' மேல் ஆகிவிட்டது. மாற்ற வேண்டும். ஐந்நூறு ரூபாயாவது ஆகும். தியானம்... தியானம்... எங்கேயோ போகாதே.

கமலா வெங்காய சாம்பார் வைக்கிறாள் போலிருக்கிறது. சூடாக இட்லியும் இருந்தால் நன்றாக இருக்கும். சீ! தியானம்

'தினமும் தியானம் செய்!'

செய்யும் போது இட்லி சாம்பாரைப் பற்றி என்ன நினைப்பு! இந்த அல்பமான மனத்தை வைத்துக் கொண்டு எப்படி நான் மகானாவது?

சத்யா

தியானம் செய்வது ஒன்றும் கஷ்ட

மான காரியம் இல்லை. அந்தக் காலத்தில் விஸ்வாமித்திரர் நூற்றுக்கணக்கான வருடங்கள் தவம் செய்திருக்கிறாரே.

அவரால் எப்படி முடிந்தது? பசியே எடுத்திருக்காதா? மனம் தவம் செய்தாலும் வயிறு சும்மா இருந்திருக்குமா? தவத்தைக் கெடுத்திருக்குமே! மடையா! முனிவருக்கும் உனக்கும் வித்தியாசம் இல்லை?... நீ ஐந்து நிமிடங்கள் மனத்தைக் கட்டுப்படுத்தினால் ஐம்பது வருடங்கள் தவம் செய்வதற்குச் சமம். எதைப் பற்றியும் நினைக்காதே.... தியானம் செய்.

“ஸார் தியானம் பண்றார் போலிருக்கு. சரி, நான் அப்புறம் வரேன்!''

எதிர் வீட்டு ஆசாமியின் குரல் கேட்டது.


''இருங்க. பேப்பர்தானே? நான் எடுத்துத் தரேன். ஏங்க?... கொஞ்சம் எழுந்திருங்களேன். பேப்பர் மேலேயே உட்கார்ந்து தியானம் பண்றீங்களே?''

கண்களைத் திறக்காமலேயே நகர்ந்து கொண்டேன். திறந்தால் தியானம் கெட்டுவிடும். கமலா பேப்பரை எடுத்து அவரிடம் கொடுத்து அனுப்பினாள்.

நானே இன்னும் பேப்பர் படிக்கவில்லை. லீவுநாள்தானே, தியானத்தை முடித்து விட்டுச் சாவகாசமாகப் படிக்கலாம் என்றிருந்தேன். அதற்குள் பேப்பரைப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டான் அந்த ஆள்.

சரி சரி... மனத்தைத் திருப்பு. தியான மார்க்கத்தில் போ. தியானம் செய்தால் மனம் அமைதி பெறும். அமைதியான நதியினிலே ஓடம்.... அருமையான பாட்டு. சிவாஜி என்னமாய் நடித்திருந்தார்? அநாவசியமாய் அரசியலில் நுழைந்து வேண்டாத மனக் கஷ்டங்களை ஏற்படுத்திக் கொண்டார். சிவாஜி கணேசன் இல்லாத திரை உலகம் என்னவோ போலிருக்கிறது. ஏன் அவர் ஒரு படத்தை டைரக்ட் செய்யக் கூடாது? அடாடா... தியானத்தை விட்டு விலகி விட்டோமே. மனமே... ஏன் இப்படி சோதிக்கிறாய்? அலையாமல் ஒரு இடத்தில் நில்லேன்!

ரமண மஹரிஷி மயக்க மருந்து போட்டுக் கொள்ளாமலேயே ஆபரேஷன் செய்து கொண்டாராம். அது அந்தக் காலம். இப்போது, மாத்திரை போட்டுக் கொண்டால் தான் பலருக்குத் தூக்கமே வருகிறது. உடல் வலியை உணராமல் இருக்க ரமணரால் மட்டும் எப்படி முடிந்தது? உடல் வேறு, மனம் வேறு என்றால், உடல் அழிந்த பிறகு மனம் என்ன ஆகிறது? எங்கே போகிறது? அடச்சீ! நமக்கு எதற்கு இந்த தத்துவ விசாரம்? கமலாவுக்கும் அம்மாவுக்கும் நடக்கிற சண்டைகளுக்கே தீர்வு சொல்ல முடியாத நமக்கு இவ்வளவு பெரிய தத்துவங்கள் எல்லாம் எப்படிப் புரியும்?



''எங்க அம்மா 'ஜுராஸிக் பார்க்' பார்த்த பிறகு ரொம்ப மாறிட்டாங்க.''

''ஏன்? என்ன பண்றாங்க?''

''முன்னாடியெல்லாம் ஏண்டா எருமை மாடு மாதிரி சுத்தறியேன்னு திட்டுவாங்க. இப்ப ஏண்டா, டைனோஸர் மாதிரி அலையறியேன்னு கேட்கறாங்க!''

- அகவிளி அய்யப்பன்

போதும்... மனமே சும்மா இரு. தியானம் முடிந்த பிறகு எதைப் பற்றி வேண்டுமானாலும் நினை. ப்ளீஸ்... கொஞ்சம் ஒத்துழையேன். அலை பாய்ந்து கழுத்தறுக்காதே.

'அலை பாயுதே கண்ணா...! என் மனம் அலைபாயுதே!' கமலாவைப் பெண் பார்க்கப் போனபோது அவள் இந்தப் பாட்டைத்தான் பாடினாள். அப்படியும் தான் அவளையே கல்யாணம் செய்து கொண்டு விட்டேன். ஒரு பாட்டுக்காக ஒரு பெண்ணை நிராகரிப்பது எனக்குச் சரியானதாகப் படவில்லை.

அட, அடங்காப்பிடாரி மனமே! ஏன் இப்படி சண்டித்தனம் செய்கிறாய்? ஒரு ஐந்து நிமிடம் அசையாமல் இரு. அப்புறம் எங்கே வேண்டுமானாலும் போய்த் தொலை.

இப்போதுதான் புரிகிறது. மனம் என்பது விலைவாசி மாதிரி. யாராலும் கட்டுப்படுத்த முடியாதது. தறிகெட்டு செல்லக் கூடியது. அதன் இஷ்டத்திற்கு விட்டு விட வேண்டியதுதான். ஆட்சிக்கு வருபவர்கள் அப்படித்தான் செயல்படுகிறார்கள். அது தான் மரபு.

முடியாது. என்னுடைய மனம் என் பேச்சைக் கேட்க மறுப்பதா? எவ்வளவு நேரமானாலும் சரி, ஒரு நிமிடமாவது மனத்தை அடக்காமல் விடுவதில்லை. அட்டென்ஷன். பல்லைக் கடித்து மனத்தை நிறுத்தினேன்.

ஆபீஸரின் முகம் தேவையில்லாமல் நினைவுக்கு வந்தது. இந்த ஆள் இங்கே ஏன் வருகிறார்? போய்யா... நாளைக்கு ஆபீஸுக்கு வந்து பார்த்துக் கொள்கிறேன். லீவு நாள்ல கூட முகம் காட்டி எரிச்சலூட்டாதே!

திடீரென்று நான் என்னை மறக்க ஆரம்பித்தேன். ஓஹோ... இதுதான் தியானமா?

எவ்வளவு நேரம் அப்படி இருந்தேனோ தெரியவில்லை.

யாரோ என்னை உலுக்கி எழுப்பினார்கள். கமலாதான்.

''ஏங்க... எழுந்திருங்க! தியானம் பண்ணும்போது குறட்டை என்ன குறட்டை?''



✱ ராக்கெட் முன்னேற்றம்..



✱ ....இவரால் தாமதப்படுமா?

● கே. ஏ.காளிமுத்து, ராணிப்பேட்டை.

? "ராமர், புத்தர், துக்காராம் – இவர்களை வழிபடும்வரை பெண்ணடிமைத்தனம் நீங்காது" என்று சரத்பவார் கூறியிருப்பது பற்றி...?

! அரசியல்வாதிகள், நரசிம்மராவைப் பின்பற்றி அதிகம் பேசாமலிருப்பதே நல்லது என்று தோன்றுகிறது. பேசப்பேச அசடுவழிதல்தான் அதிகமாகிறது.

● பி.ஆர்.மணி, செங்குன்றம்.

? திடீரென்று நெல்சன் மண்டேலாவைச் சந்தித்தால் என்ன கேட்பீர்கள்?

! இருபத்தேழு ஆண்டுகள் சிறையில் இருந்தபோது எதிர்காலக் கனவுகள் எப்படி இருந்தன? நம்பிக்கை இழக்காமல் இருந்தது எவ்வாறு?

● ச.ஜான்ரவி, கோவில்பட்டி.

? பெண்டாட்டி சொல்படி கேட்டு நடப்பதுதான் புருஷ லட்சணமா?

! காதில் வாங்கிக் கொள்ளவே கூடாது என்ற தீர்மானமும் புருஷ லட்சணமல்ல.

● என். ஜெயராமன், சென்னை.

? தனித்து நின்று தோற்றாலும் சொந்தக் காலில் நிற்க முயன்று சுயமரியாதையுடன் நடப்பதற்கு ஒருவரி பாராட்டி எழுதக் கூடாது?

! இதோ பாராட்டி விடுகிறேன். ஆனால் ஒற்றுமையின்றி உட்கட்சிப்பூசல் ஓங்கினால் சொந்தக் காலில் நிற்கும் நல்ல முயற்சியெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகிறதே என்ற வருத்தம்தான் எனக்கு.



✱ ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்!

● ப.கணேஷ்ராகவன், சென்னை-19.

? 'அரிஜனங்களை 'ஜெ ஜனங்கள்' என்று சொல்ல வேண்டும்' என்று ஒரு அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கூறியுள்ளாரே?

! ஹரியின் (கடவுளின்) ஜனங்கள் என்ற அர்த்தத்தில் காந்திஜி பெயர் சூட்டினார். அவ்வளவு உயரத்தில் கொண்டு வைத்தார்! இப்போது உருட்டித் தள்ளப் பார்க்கிறார்கள்.

● தி.மா.தமிழழகன், திருச்சி

? "எங்கள் பெருந்தன்மையால்தான் தண்டனையை (தினகரன் செய்தி ஆசிரியர் கைது) ரத்து செய்யக் கோருகிறேன்" என்று ஜெ. கூறுவது எந்த விதத்தில் நியாயம்?

! அதுவும் அரசியல்; இதுவும் அரசியல். இதிலே பெருந்தன்மை, நியாயம் எல்லாம் எங்கே தலைகாட்டியது? ஒரு மண்ணும் இல்லை.

● எம்.அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? பிடிவாதம், வைராக்கியம் என்ன வித்தியாசம்?

! சரியான விஷயங்களில் உறுதி, வைராக்கியம் எனவும் தவறான விஷயங்களில் காட்டும் தீவிரத்தைப் பிடிவாதம் என்றும் கூறலாம். ஆனால் எது தவறு; எது சரி என்பதிலேயே கருத்து வேற்றுமை முளைக்க, வைராக்கியம் பிடிவாதமாவது சகஜம்.

● எஸ். குமார், காரைக்குடி.

? காங்கிரஸ் உறுப்பினர்கள் ஐந்து பேரைத் தாற்காலிக நீக்கம் செய்தது சரியா?

! கொஞ்சமாவது சொரணை இருக்கிறது என்று காண்பித்துக் கொள்வது தப்பா?

● பா.கணேசன், பொன்னகரம்.

? 'ஜெ'க்கு நோபல்பரிசு தரப்படுமா?

! அது என்ன டாக்டர் பட்டமா? காசுக்கு வீசை வாங்கிப் போட்டுக் கொள்ள?

● தென்னூர் யாதவன், திருச்சி.

? ஜெயலலிதா பெயரில் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டப் போகிறார்களாமே?

! அவர் பெயரால் அமைய முடியாத ஒரே ஒரு பொது நல வசதியும் உண்டு!

● ஆர்.சங்கரநாராயணன், குணசீலம்.

? ஜனனம் – சின்ன விளக்கம்?

! மரணத்துக்காகவே ஏற்படுவது என்றாலும் எத்தனை மகிழ்ச்சி அளிக்கிறது! எத்தனை எதிர்பார்ப்பைத் தோற்றுவிக்கிறது! வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குகிறது! ஒவ்

'ஜெ' பெயர் சூட்டினால் மட்டும் ஏன் எகிறிக் குதிக்கிறீர்கள்?

வொரு நாளும் காலையில் மலரும் பூக்கள் எனக்குள் புத்துணர்ச்சி ஊட்டுவது உள்ளத்தை என்ன, உயிரையே புதுப்பிப்பதாகிறது!

● அன்பு கதிரேசன், கீழ்கட்டளை.

? 'குழந்தைகளைப் பள்ளிக்கூடம் அனுப்பாத பெற்றோருக்கு நூறு ரூபாய் அபராதம்' என்று தமிழக அரசு அறிவித்திருப்பது, கல்விக் கண்ணைத் திறக்குமா?

! லஞ்ச ஊழலுக்கு இன்னும் கொஞ்சம் விஸ்தரிப்புக் கொடுத்திருக்கிறார்கள், அவ்வளவுதான். பள்ளிக்குப் பிள்ளைகள் வரவில்லையெனில் காரணம் என்ன என்று அனுதாபத்துடன் புரிந்து கொண்டு அதை அகற்ற முற்பட வேண்டுமே தவிர, அபராதம் ஒன்றையும் சாதிக்காது.

● எஸ்.பழனியப்பன், கீழச்சேரி.

? அண்மையில் தங்கள் மனத்தைப் பாதித்த நிகழ்ச்சி?

! என்னத்தைச் சொல்ல? சென்னை, அரசு பொது மருத்துவ மனையில் அரிசி இல்லை என்று சொல்லி நோயாளிகளை மேலும் நோகடித்த கொடுமையையா, கோழிக்கோட்டில் விமானப் பணிப் பெண்களை கஸ்டம்ஸ் அதிகாரிகள் சந்தேகித்துச் சோதனை செய்வதாகக் கூறி அம்மணமாக்கி அவமானப் படுத்திய அசிங்கத்தையா, மெத்தப் படித்த வங்கி அதிகாரிகளும் ஊழியர்களும் தேதிகள் அறிவித்து தொடர் ஸ்டிரைக் நடத்தி நாட்டுப் பொருளாதாரத்தைக் குட்டிச் சுவராக்கும் போக்கையா, பழவேற்காடு ஏரியில் படகுச் சவாரி என்று கூறி பச்சிளம் பள்ளிப் பிள்ளைகளைப் பலி கொடுத்த சோகத்தையா, பட்டப்பகலில் பம்பாய் தொழிலதிபர் கட்டாய் குண்டர்களால் கடப்பட்டு மாண்ட கோரத்தையா...



* பெயர் சூட்டவில்லையா?

மனத்தை வாட்டி வதைக்க நாள்தோறும் சம்பவங்களா இல்லை? போதுமடா சாமி! போதும்! போதும்!.

● ரா.ரவி, ஓட்டன்சத்திரம்.

? கலைஞர் ஆட்சியில் புல்லுக்கும், நெல்லுக்கும் 'கருணா', 'பத்மா' என்று பெயர் சூட்டவில்லையா? ஜெயலலிதா பெயர் வைத்தவுடன் ஏன் எகிறிக் குதிக்கிறீர்கள்?

! அப்போது ஓரிரு தடவை எகிறிக் குதித்து



* பேசப் பேச...



* என்ன கேட்பீர்...

சமாளித்தோம். இப்போது எகிறிக் குதிப்பது தவிர வேறு எதற்குமே நேரமிராது போலிருக்கிறது! அத்தனை 'ஜெ' பெயர் சூட்டல்! எகிறி குதித்துக் குதித்து உடம்பெல்லாம் வலிக்கிறது ஸாரே!

● எஸ். சசிகுமார், செங்குன்றம். ❑

? சமீபத்தில் நடந்த ராக்கெட் சோதனை பற்றி...?

! அன்று காலை 'வாக்' போனபோது வானில் தென்பட்ட கோலம் வேடிக்கையாக இருந்தது. மறுநாள் பத்திரிகைச் செய்திதான் ராக்கெட் சோதனை வெற்றியை அறிவித்தது. இந்த வெற்றியானது, செயற்கைக் கோள்களை விண்ணில் சுற்றிவரச் செய்து செய்தி தொடர்புக்கும் இதர பல பணிகளுக்கும் நாம் பயன்படுத்துகிற நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதைத் தெரிவிப்பதுடன் ஏவுகணை தயாரிப்பிலும் திறமை பெற்று வருகிறோம் என்பதை உணர்த்துகிறது. இதுதான், உலகின் அமைதிக் காவலனாகத் தன்னை எண்ணியுள்ள அமெரிக்காவுக்கு கலக்கத்தைத் தருகிறது. கிளிண்டனின் ராவ் பேச்சு வார்த்தை இத்திசையில் நமது முன்னேற்றத்தைச் சற்று தாமதப்படுத்தலாம்; தடுத்துவிட முடியாது!

❑ ரூ.25 பரிசு பெறுபவர்:
எஸ்.சசிகுமார்,
120, மேட்டுத் தெரு,
செங்குன்றம்,
சென்னை - 52.

கிண்டல் ஸ்பெஷலா?

வட்டமேஜை

◆ மழை விட்டாலும் தூவானம் விடாது என்று வாழப்பாடியைக் கிண்டல், கொடி இறந்த கோபாலன் என்று வை. கோ. வைக் கிண்டல், இராமனைக்கும் பெயரை மாற்றி விடுவார்கள் என்று முதல்வரைக் கிண்டல், மறுபடி சிவகவி காலத்திற்குப் போகிறோமா என்று "வீரா"வைக் கிண்டல் - இதென்ன கிண்டல் ஸ்பெஷலா?

ஒட்டன்சத்திரம், ரா. ரவி.

நடக்குமா அதிசயம்?

◆ கவர்ஸ்டோரி, தமிழக காங்கிரஸின் பரிதாப நிலைமையை வெளிச்சம் போட்டுக் காட்டியிருந்தது. தமிழக காங்கிரஸ் இனியும் எழுந்து நிற்கும் என்ற நம்பிக்கையை மக்கள் இழந்து விட்டார்கள். ஏதாவது அதிசயம் நடந்தாலொழிய, அக்கட்சிக்கு விமோசனமில்லை!

மொரட்டுப்பாளையம், க.நா. இராஜேஸ்வரன்.

கனவுக்கு என்ன அவசரம்?

◆ காங்கிரஸ்காரர்கள், ஒருமித்த கருத்தோடு முதலில் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். ஆட்சிக் கனவுகளை அப்புறம் காணலாம்.

சேலம்பட்டி, எஸ் மாறன்.

குதிரை வீரர் வை.கோ.

◆ 'கொடி இறந்த கோபாலன்' தலையங்கம், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இருக்கும் வை.கோபால்சாமிக்கு! என்றாலும், ஒரு கட்சியில் இருந்து பிரிந்தவுடன் புதிய கட்சியை உருவாக்க வேண்டுமே தவிர, குண்டு சட்டியிலே குதிரை ஓட்ட நினைக்கக் கூடாது. வை.கோவின் வாதம் விதண்டாவாதம் என்றும் அவரது முகமூடி கிழிக்கப்பட்டு விட்டது என்றும் ஆணித்தரமான தலையங்கம் தீட்டிய 'கல்கி'க்குப் பாராட்டுக்கள்.

அம்மனூர், கோ. பாலசுப்ரமணியன்.

இது நியாயமா?

◆ வை.கோ. அவர்களைப் பற்றி எழுதியுள்ள தலையங்கத்தைப் பார்த்து அதிர்ந்து போனேன். நீதிபதிகளின் தீர்ப்பைப் பற்றியோ அல்லது தேர்தல் ஆணையாளரின் ஆணை பற்றியோ நான் ஏதும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் கல்கி, "தான்தான் ஏதோ புத்தர் போலவும் தமக்குத் தி.மு.க. தலைமை மாபெரும் தீங்கு இழைத்து விட்டது போலவும் பேசிவந்த வை.கோவின் முகமூடி கிழிக்கப்பட்டுவிட்டது" என்று எழுதியிருப்பதற்குப் பதில் அளித்துதான் ஆக வேண்டும்.

தி.மு.க. தலைமை கடந்த காலங்களில் வை. கோவிற்கு எந்தவித தீங்கும் இழைக்கவில்லையா? இந்த பிரச்னை பற்றி கடந்த காலங்களில் கல்கி ஏடுகளில் கூட வை. கோவிற்கு ஆதரவாக எழுதியுள்ள சூழ்நிலையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். வை.கோ., தி.மு.க.வில் தொண்டர்கள் ஆதரவுடன் வளர்ந்து வருகிறாரே, தமது மகனுக்கு எதிராக வை.கோவின் வளர்ச்சி அமைந்துவிடுமோ என்ற அச்சத்தினால் அல்லவா, வை.கோவுக்குப் பல இடையூறுகளை அளித்து வந்தார்கள்? கலைஞரின் அத்தனை இடையூறுகளையும் வை.கோ. எதிர்நோக்கிக் கொண்டே வளர்ந்தார். ஒரு தீங்கும் கலைஞர் வை.கோ.விற்குச் செய்யாதது மாதிரி கல்கி எழுதி இருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

சென்னை - 35, கே.எல். இராதாகிருஷ்ணன்
செய்தி தொடர்பாளர், மறுமலர்ச்சி தி.மு.க.

ஸ்பெஷல் சாதா!

◆ ஜெயகாந்தன் விழாவில் காரத்தில்லாமல் பேசியவர்களை சாதா தோசைப் பேச்சாளர்கள் என்று குறிப்பிட்டது நன்றாக இருந்தது.

சென்னை - 14, ஜானு வாசுதேவன்.

சூப்பர் பஜார்!

◆ சினிமா என்றாலே ஆபாசம் என்றாகி விட்ட இன்றைய சூழ்நிலையில் கண்ணியமான சினிமா செய்திகளை "மாயா பஜாரில்" தந்த கல்கியைப் பாராட்டுவதோடு, இப்புதிய பகுதியையும் வாழ்த்தி வரவேற்கிறோம்.

திருச்சி - 8, உ.ர. சங்கர்.

ஜெலுஸில் குடுங்கப்பா!

◆ டாக்டர்களுக்கும் உங்களுக்கும் ஏதாவது ரகசிய உடன்பாடா? இவ்வார சத்யாவின் கதை படித்து, சிரித்து சிரித்து வயிற்று வலி தாங்க முடியலை சாமே!

வேலூர், பா.வை. சுவாமிநாதன்.

ரோம் இல்லீங்க!

◆ "கல்கி" 8.5.94 இதழ், பக்கம் 34 ல் இடம் பெற்றுள்ள துணுக்கில் 1964 ம் ஆண்டு 'ரோம்' ஒலிம்பிக் போட்டி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1964ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி 'டோக்கியோ'வில்தான் நடந்தது. அதில்தான் இந்தியா ஹாக்கியில் வெற்றி பெற்றது.

பெங்களூர், வி. திருநாராயணன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

நமோ நம:

என்னைப் பெரியவனாக நினைத்து எல்லாரும் நமஸ்காரம் பண்ணுகிறீர்களென்றால் எனக்கும் நிஜமாகவே பெரியவர்களாக இருக்கப்பட்டவர்களை நமஸ்காரம் பண்ணுமென்று நிறைய இருக்கிறது. ஆனால் ஸ்தானம் - ஜகத்குரு, பீடாதிபதி, இன்னும் பகவத்பாதாள் பெயரே - சின்ன வயஸிலேயே, ஒரு யோக்யதையும் இல்லாத போதே வந்துசேர்ந்து விட்டதால், 'பெரியவர்' என்று நேரே நடமாடிக் கொண்டிருக்கிற இன்னொருத்தருக்கு நமஸ்காரம் பண்ணும் பாக்யம் அன்னியிலிருந்தே (அன்றிலிருந்தே) இல்லாமல் போய்விட்டது. ஊர் நமஸ்காரத்தையெல்லாம் வாங்கிக் கொண்டு, நாம் ஒருத்தருக்கும் நமஸ்காரம் பண்ணாமல் இப்படியொரு ஜம்ப ஜன்மாவா என்று இருக்கிறது.

இத்தனையிலும் ஆசார்யாள் ஒரு பெரிய நல்லது பண்ணியிருக்கிறார். என்னவென்றால் - 'ஸந்நியாஸிகள் என்று இருக்கிற எங்களைப் பெரியவர்களாக வைத்து நீங்கள் நமஸ்காரம் பண்ணினாலும் வாஸ்தவத்தில் அந்த நமஸ்காரம் எங்களைச் சேர்ந்தது என்று நாங்கள் நினைத்துவிடக் கூடாது. லோக வ்யாபாரம் ஸகலத்தையும் நடத்திக் கொண்டிருக்கிற பரமாத்மாவும் பராசக்தியுமான ஒன்றுக்குத்தான் எவர், எங்கே செய்கிற நமஸ்காரமும் ஸொந்தம்' என்று அவர் ஞாபகப்படுத்தியிருக்கிறார். அதோடு நிற்காமல், நீங்கள் செய்கிற நமஸ்காரத்தை நாங்கள் எங்களுக்கேயாக்கும் என்று ஸ்வீகரித்துக் கொண்டு விடாமல் அந்த ஒன்றிடம் சேர்த்து விடும்படியாக எங்களுக்கு ஒரு விதியும் பண்ணிக் கொடுத்திருக்கிறார். என்ன விதி என்றால், கேட்கிறதற்கு ரொம்ப ஸுலபமாகத் தோன்றும், அப்படி ஒன்று.

ஜகத் வியாபாரத்திற்குக் காரண சக்தி என்று சொன்னேனே, அதை ஆசார்யாள் தம்முடைய பாஷ்யப் புத்தகங்களில் 'நாராயண' என்ற பெயராலேயே குறிப்பிட்டிருப்பார். அதற்கு



- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



அநேக காரணம். இப்போது அந்த டிஸ்கஷனில் இறங்காமல் குறிப்பாக ஒன்றைச் சொல்லி நிறுத்திக் கொள்கிறேன்.

தத்வங்களை அலசி அலசி முடிவு கண்டு வேதாந்தம், மீமாம்ஸ, ஸாங்க்யம், ந்யாயம் என்றெல்லாம் சாஸ்திரங்களைப் படைத்த தேசம் நம்முடைய இந்த தேசம். முக்யமாக இந்த சாஸ்திரங்களில் ஈடுபட்டவர்களை உத்தேசித்துத்தான் ஆசார்யாள் பாஷ்யப் புத்தகங்கள் எழுதினது. ஆனாலுங் கூட....

தத்வ ஆராய்ச்சிக்கு இந்த தேசம் பெயர் போனது என்றாலும் அதைவிட இதற்கு ஜாஸ்திப் பெயர் - நல்ல பெயர், அவப் பெயர் இரண்டுந்தான் - எதில் என்றால் dry தத்வமாக இல்லாமல், ஆனாலும் தத்வ ரூபமாகவே இருக்கிற ஜீவனுள்ள மூர்த்திகளாக ஏகப்பட்ட தெய்வங்களைக் காட்டியிருப்பதற்குத்தான். ஆகையினால் ஆசார்யாள் தம்முடைய பாஷ்யங்களில் ப்ரபஞ்ச காரண சக்தியான பரமாத்மாவை அப்படியொரு தத்வமாகவே முழுக்கச் சொல்லிக் கொண்டு போய்விடாமல், மூர்த்தியாக பாவித்து உறவு கொண்டாடிப் பழகிப் போன ஸமூஹத்திற்கு 'அப்பீலா'கும்படியான ஒரு நாமத்திலேயும் அங்கங்கே குறிப்பிட வேண்டுமென்று நினைத்திருக்கிறார். அப்போது எந்த ஸ்வாமியின் நாமாவைப் போடுவது?

ஏகப்பட்ட ஸ்வாமிகள் இருந்தாலும் ஆதியிலிருந்து இன்றுவரை நம் ஜனங்களை சைவர் - வைஷ்ணவர் என்று இரண்டு broad division களாகவே வைத்துவிடலாம். இப்படி இரண்டு பேர் சிவன், விஷ்ணு என்று இருப்பதில் எதைப் போடுவது என்று ஆசார்யாள் பார்த்திருப்பார். ஆசார்யாள் யார்? சிவ அவதாரந்தானே? அதனால், 'தன் பெயரையே போட்டுக் கொள்ளுவாவது?' என்று நினைத்திருப்பார். சிவனுக்கு ரொம்பவும் ஆப்தம் மஹாவிஷ்ணு; அப்படியே மஹாவிஷ்ணுவுக்கும் சிவன். ஆனபடியாலேதான் ஜகத்காரண சக்தி, ப்ரபஞ்ச மஹாசக்தி, ஸகுண ப்ரம்மம், ஈச்வரன் என்றெல்லாம் வேதாந்தத்திலே சொல்கிற பரமாத்மாவுக்கு ஒரு மூர்த்தி காட்டுகிற இடத்திலெல்லாம் அவர் 'நாராயணன்' என்கிற பேர் போட்டுவிட்டார்... நடுவாந்தரத்தில் 'ஈச்வரன்' என்று ஒரு வார்த்தை சொன்னேன். ஈச்வரன் என்றாலே சிவன் என்று பொதுப்படை அபிப்ராயமாகியிருந்தாலும் வேதாந்த சாஸ்திரத்தில் ஸகுண ப்ரம்மத்துக்கே அந்தப் பேர். ராமாநுஜாசார்யார், மத்வாசார்யார் எல்லாருங்கூட அந்த அர்த்தத்தில் அதே பேரைத்தான் போட்டிருக்கிறார்கள்...

''ஆசார்யாள் 'சிவாநந்த லஹரி', இன்னும் அநேக சிவ ஸ்தோத்ரங்களெல்லாம் பண்ணியிருக்கிறாரே, அங்கே மட்டும் எப்படித் தன்னையே தான் ஸ்துதித்துக் கொண்டார்?'' என்று கேட்டால், அதெல்லாம் பக்தி ஸ்துதிகள். பல்வேறு ஸ்வாமிகளை இஷ்டதெய்வமாகக் கொண்ட பல்வேறு ஜன ஸமூஹங்களுக்கும் அவரவருடைய இஷ்ட தெய்வத்திடம் மனஸை நிறுத்துவதற்கு ஸஹாயமாக ஆசார்யாள் அத்தனை ஸ்வாமிகளையும் பற்றிப் பாட வேண்டியிருந்தது. அதிலே ப்ரதான தெய்வங்களில் ஒன்றான சிவனை எப்படி விட முடியும்? ஆகையினாலே சிவபரமான ஸ்துதிகளும் பாடினார்.

ஆசார்யாள் தமக்கென்று எந்த 'ஐடென்டிடி'யும் இல்லாத ஆத்ம ஸ்வரூபமாக இருந்தவர். அதனாலேயே அவரால் எவரெவர் மனப்பான்மையுடனும் 'ஐடென்டிஃபை' பண்ணிக் கொண்ட மாதிரி இருந்து கொண்டு, அவரவரையும் மேலே உசத்திக் கொண்டு போக வழிபண்ண முடிந்தது. ஒரு கலரும் இல்லாத ஜலம் கரிசல் பூமியில் பாய்கிற போது கறுப்பு மாதிரி, செம்மண் பாய்கிற போது சிவப்பு மாதிரி பூமியில் எல்லாம் தெரிகிறதோல்லியோ? அப்படி. இப்படி இருந்ததில் பக்தி வழியில் வந்து விருத்தியாகக் கூடியவர்களுக்காக அவர் எல்லா ஸ்வாமிகளின் மேலேயும் ஸ்தோத்ரங்கள் பண்ணும்போது அந்தந்த ஸ்வாமிக்கும் பக்தராக ஐடென்டிஃபை ஆன மாதிரி இருந்தார். அந்த ரீதியிலே ஈச்வரபரமாக, அதாவது சிவனைப் பற்றி, ஸ்தோத்ரம் பண்ணும்போதும் அவர் சிவாவதாரமாக இல்லாமல் சிவ பக்தராகவே பாடிக் கொடுக்க முடிந்தது. அவதாரமாயிருந்தால்தானே தன்னையே தான் ஸ்தோத்ரம் பண்ணிக் கொண்டதாகும்? அப்படியில்லாமல் சிவ பக்தராக இருக்கும்போது தமக்கு பகவானான அந்த சிவனை எத்தனை வேண்டுமானாலும் ஸ்தோத்திரிக்கலாந்தானே?

''தம்முடைய மடங்களிலே அவர் சந்திரமௌளீச்வரர் என்று சிவனைத்தானே ப்ரதானமாக வைத்து மற்ற ஸ்வாமிகளைப் பரிவாரமாக வைத்திருக்கிறார்? எல்லாருக்குமான மடத்தில் எல்லா ஸ்வாமிகளுக்கும் ஸம ப்ராதான்யம் கொடுக்காமல் ஏன் இப்படிப் பண்ணினார்?'' என்றால், இது அவர் உத்தேசித்து ப்ளான் போட்டுப் பண்ணிய கார்யமே இல்லை. அந்தப் பரமேச்வரனேதான் தன்னுடைய இந்த அவதாரத்திடம் ஐந்து ஸ்படிக லிங்கங்களைக் கொடுத்து தேசத்தில் ஐந்து இடங்களில் ப்ரதிஷ்டித்து சாச்வதமாகப் பூஜை நடக்கப் பண்ணும்படியாக ஆக்ஞை செய்தார். அப்படியே நடத்தும்போது ஆசார்யாள் தம்முடைய மடங்கள் இரண்டிலும் அந்த லிங்கங்களில் இரண்டைப் ப்ரதிஷ்டை பண்ணினார் - இங்கே நம் (காஞ்சி) மடத்திலும், ச்ருங்கேரி மடத்திலும் பரமேச்வரனே கொடுத்து, பூஜிக்கும்படியாகவும் ஆக்ஞை பண்ணியதால் அந்த

லிங்கங்களுக்கே ப்ரதான மூர்த்தியாக ஸ்தானம் கொடுத்து மற்ற ஸ்வாமிகளைப் பரிவாரமாக வைக்க வேண்டும் என்றாகி விட்டது. இப்படி இரண்டு மடங்களில் செய்ததால் தம்முடைய மற்ற மடங்களிலும் அதேபோலச் செய்தால்தானே 'யூனிஃபார்மிடி' இருக்கும் என்று நினைத்து எல்லா மடங்களிலும் சிவபஞ்சாயனமாகவே (சிவபெருமானை நடுநாயகமாகவும் அம்பிகை, திருமால், விநாயகர், சூரியன் ஆகிய நால்வரைப் பரிவாரமாகவும் கொண்டதே பஞ்சாயனம்.) பூஜையை ஆசார்யாள் வைக்கும்படி ஆயிற்று.

''எல்லாம் சரி. ஆனால் ஆத்ம சாஸ்த்ரமான பாஷ்யப் புஸ்தகங்கள் எழுதும்போது ஆசார்யாள் 'ஒரு ஐடென்டிடியும் இல்லாத ஆத்ம ஸ்வரூபம்' என்றீர்களே, அப்படித்தானே இருந்து கொண்டிருக்க வேண்டும்? அங்கே எதற்கு அவர் சிவ அவதார ஐடென்டிடியை வைத்துக் கொண்டு, 'நாமே நம்மைச் சொல்லிக் கொள்வாவது? அதனால் 'நாராயண' என்று போடுவோம்' என்று நினைக்க வேண்டும்?'' என்று கேட்டீர்களானால் - பதில் வைத்திருக்கிறேன். 'கொஸ்ச்சின் பேப்பர்', 'ஆன்ஸர் பேப்பர்' எல்லாம் 'ப்ரிபேர்' பண்ணிக் கொண்டுதான் கதை அளக்க வந்திருக்கிறேன்!

என்ன ஆன்ஸர் என்றால் ஆத்ம ஸ்வரூபம் புஸ்தகமே எழுதாது! எதுவும் பண்ணாது! அது பாட்டுக்கு இருக்கிறபடி இருக்கும். இருக்கும்தானே ஒழியப் பண்ணாது! எப்போது புஸ்தகம் எழுத உட்கார்ந்தாரோ அப்போதே ஆத்ம ஸ்வரூபம் போய் அவதாரம் வந்தாச்சு என்று அர்த்தம்... ஸரியாகச் சொன்னால், ஆத்ம ஸாக்ஷாத்கார ஸமாதி நிலை போன மாதிரியும், லோகத்திலே தர்மாபிவிருத்திக்காகக் கார்யம் பண்ண வேண்டிய 'ட்யூடி' உள்ள அவதாரமே தாம் என்று அவர் நினைத்த மாதிரியும் உள்ள போதுதான், 'புஸ்தகம் எழுத வேண்டா' என்று அவர் உட்கார்ந்து கொண்டது. அந்த நிலையில் அவதாரம் என்றால் யாருடைய அவதாரம் என்று கேள்வி வரத்தானே செய்கிறது? சிவாவதாரம் என்று பதில் கிடைக்கிற போது அவதார சிவனே ஆதாரச் சிவனைச் சொல்லிக் கொள்வது ஔசித்யமில்லை (உசிதக் குறைவானது) என்றும், விஷ்ணுவைச் சொல்வதுதான் அழகு, ஸமரஸம், கௌரவம் என்றும் ஆகிற தோல்வியோ?

ஆகக் கூடி, ஜகத்துக்குக் காரணப் பொருளாக இருக்கப்பட்ட மூலத்துக்கு ஆசார்யாள் நாராயணப் பேர் கொடுத்தே பாஷ்யப் புஸ்தகங்களில் எழுதியிருக்கிறது. அந்தப் புஸ்தகங்களின் பரம தாத்பர்யம் பரமாத்ம ஜீவாத்மாக்களின் அத்வைதம். அவற்றிலே சிவாவதாரமானவர் விஷ்ணுவின் பெயரைப் போட்டிருப்பதில் ஹரிஹராத்வைதமும் (திருமாலும் சிவபெருமானும் ஒன்று என்பதும்) வந்துவிடுகிறது!

மஹாவிஷ்ணுவுக்கு எத்தனையோ பேர் - ஸஹஸ்ரநாமமே - இருக்கும்போதிலும் ஏன் நாராயண நாமத்தைப் போட்டாரென்றால் அதுதான் மஹாவிஷ்ணுவுக்குப் பரம மந்த்ரமாக இருக்கிற அஷ்டாக்ஷரியில் வருகிற பெயர்.

அயனம் என்றால் வழி, பாதை என்று ஒரு அர்த்தம். பாதை வழியாகப் போய்ச் சேருகிற இருப்பிடம் என்றும் அர்த்தம். நரர் என்கிற ஜீவாத்மாக்களுக்கு இரண்டு அர்த்தத்திலும் அயனமாக இருக்கிறவன் நாராயணன். கடைத்தேறும் வழியான ப்ரம்ம வித்யா சாஸ்திரமாக இருப்பவன் அவனே. ''அத்யாத்ம வித்யா வித்யானாம்'' என்று அவனே கிருஷ்ண பரமாத்மாவாக வந்த போது (கீதையில்) சொல்லிக் கொண்டிருக்கிறான். அந்த வித்யையின் முடிவாக, பலனாக சென்று சேரும் இருப்பிடமான பரப்ரஹ்மமாக இருப்பவனும் அவனே. ஆகையினாலேதான் ப்ருஹ்ம வித்யா குரு பரம்பரையைச் சொல்லும்போதும் ''நாராயணம்'' என்று ஆரம்பிக்கிறது. ஆகையால் ப்ரஹ்ம வித்யா சாஸ்திரமான பாஷ்யப் புஸ்தகத்தில் நாராயண நாமத்தைச் சொல்லுவது ரொம்பவும் பொருத்தமானதே.

சங்கர நாமாவோடேயே நாராயண நாமாவைச் சேர்த்துத்தான் சங்கரநாராயணன் என்றே பெயரும் இருக்கிறது. தென்பாண்டி நாட்டில் சிவ விஷ்ணு ஒற்றுமையை இரண்டு பேரும் ஒரே சரீரத்தில் சேர்த்திருக்கிற மூர்த்தியால் எடுத்துக் காட்டிக் கொண்டு பெரிய க்ஷேத்ரம் இருக்கிறது. அந்த மூர்த்திக்கு சங்கரநாராயணன்





என்றே பேர். க்ஷேத்ரத்திற்கும் சங்கரநாராயணன் கோவில் என்று பெயரிருந்து, அதைத்தான் 'சங்கர நயினார் கோவில்' என்று வழங்குவதாக ஆகியிருக்கிறது.

ஆசார்யாளே அந்தப் பெயரை ஒரு முக்யமான ஸந்தர்ப்பத்தில் போட்டிருக்கிறார். கேள்வி - பதில் ரூபத்தில் 'ப்ரச்னோத்தர ரத்னமாலிகா' என்று அவர் ஒன்று அருளியிருக்கிறார். அதை ஸமாப்தி பண்ணுவதற்கு முந்திய ச்லோகத்தில், ''பகவான் என்றும் மகேச்வரன் என்றும் சொல்கிறது யாரை?'' என்று கேள்வி. பதிலாக சிவன், விஷ்ணு என்று எவரொருவரையும் நம்முடைய ஸமரஸ அத்வைத ஆசார்யாள் சொல்லாமல், ''சிவ விஷ்ணுக்களாகச் சேர்ந்துள்ள ஒரே ஆத்மாதான்'' என்று சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்லும் போது 'சிவ விஷ்ணு' என்றோ, 'ஹரிஹரன்' என்றோ வார்த்தை போடாமல் 'சங்கர நாராயணன்' என்றே போட்டிருக்கிறார் :

கச்ச பகவான்ம ஹேச:?
சங்கர நாராயணாத்மைக:

ஆனபடியால் இந்த சங்கரரும் நாராயண நாமத்தை விசேஷித்துச் சொல்லியிருப்பது பொருத்தந்தான்.

மொத்தத்தில் விஷயம், ஜகத்காரண மஹாதத்வத்தை ஆசார்யாள் 'நாராயணன்' என்றே குறிப்பிடுவார். அப்படித்தான் எங்களுக்கு மற்றவர்கள் பண்ணுகிற நமஸ்காரத்தையும் காரண வஸ்துவுக்குச் சேர்த்துவிட வேண்டுமென்று சொல்லும் போது 'நாராயணனுக்குச் சேருங்கள்' என்று சொல்லி, சேர்ப்பிப்பதற்கு ஈஸியாகத் தோன்றுகிற ஒரு விதி பண்ணிக் கொடுத்திருக்கிறார்.

ஸகலத்தையும் ஆக்கிப் படைத்து, அததற்கும் ஒரு சக்தியைக் கொடுத்திருக்கிற அந்த நாராயணனுக்குத்தான் அத்தனை நமஸ்காரங்களையும் வாங்கிக் கொள்கிற 'ரைட்' இருக்கிறது. எந்த தேவதைக்கு நமஸ்காரம் பண்ணினாலும் அது கேசவனைத்தான் சேர்கிறது - ''ஸர்வதேவ நமஸ்கார: கேசவம் ப்ரதி கச்சதி'' என்கிற ச்லோகம் சொல்கிறோம். அப்படி மற்ற தேவதைகளுக்குப் பண்ணும் நமஸ்காரங்களே அவனொருத்தனுக்குத்தான் போய்ச் சேருகிறது என்னும் போது மநுஷ்யர்களுக்குப் பண்ணும் நமஸ்காரம் அந்த மநுஷ்யர்களுக்குச் சொந்தமாக முடியுமா? இந்த நமஸ்காரமெல்லாமும் நாராயணனிடந்தான் போய்ச் சேருகிறது. இதைத்தான் எங்களுக்கு யார், எப்போது நமஸ்காரம் பண்ணினாலும் நாங்கள் நினைவு வைத்துக் கொண்டு, அவனுக்கே உரித்தான நமஸ்காரத்தை எங்களுக்கு 'மிஸப்ரோப்ரியேட்' பண்ணிக் கொண்டு விடாமல் அவனுக்கு 'ரீடைரக்ட்' செய்வதற்காக ஆசார்யாள் கருணையோடு ஒரு விதி - ஈஸியாகத் தோன்றும் விதி - போட்டுக் கொடுத்திருக்கிறார். என்னவென்றால், எங்களுக்கு ஒருத்தர் நமஸ்காரம் பண்ணும்போது நாங்கள், ''நாராயண, நாராயண'' என்று சொல்ல வேண்டும். அதுதான் விதி.

அப்படிச் சொன்னால், பேரைச் சொன்னவுடன் ஆஸாமி ஞாபகம் வந்துவிடுமோல்லியோ? இங்கே ஸ்வாமிதான் ஆஸாமி! அவன் ஞாபகம் வந்தவுடன், 'எல்லா நமஸ்காரத்திற்கும் உரியவன் அவன்தான். அவன் உரிமையை நாம் அபஹரித்துவிடக் கூடாது' என்றும் தோன்றி, அவனுக்கே நமஸ்காரத்தை அனுப்பிவிடுவோமோல்லியோ? அதற்காகத்தான் நாராயண ஸ்மரணத்தை விதித்தார். 'ஸ்மரணம்' என்கிறது முக்கியம்.

வாயால் 'நாராயண' என்று சொன்னால் அது நாராயண 'வசனம்'தான்; 'ஸ்மரணம்' இல்லை. ஸ்மரணம் என்றால் மனஸால் நினைப்பது, நன்றாக நினைப்பது. வெறுமே வாயால் மட்டும் சொல்லிப் ப்ரயோஜனமில்லை. மனப்பூர்வமாக நினைத்துச் சொல்லணும். ஆனால் நடைமுறையில் என்ன ஆகிறதென்றால், ஒரு ஸ்தோத்ரம், மந்த்ரம் எதுவானாலும் ஸரி, அடிக்கடி ஒரு 'ரொடீனா'கச் சொல்கிற போது வார்த்தையை மாத்திரம் சொல்வதாகத்தான் ஆகிவிடுகிறது; அந்த வார்த்தைக்கு என்ன அர்த்தமோ அதை மனஸ் நினைக்காமல், மனஸ் அது பாட்டுக்கு எதையோ யோஜிப்பதாகவும் வாய் மட்டும் மொண மொண பண்ணுவதாகவும் ஆகிவிடுகிறது! அப்படி இங்கேயும் நாராயணனை ஸ்மரிக்காமல் பேரை மாத்திரம் சொன்னால் மஹாதோஷமாகிவிடும். மநுஷ்யாளுக்கு மநுஷ்யாள் மிஸப்ரோப்ரியேட் பண்ணுவதே குற்றமென்றால் பகவானுக்கானதை அப்படிப் பண்ணுவது மஹா பெரிய குற்றந்தானே? ஸதா காலமும் ஸர்வ ஜாக்ரதையாக இருந்தாலொழிய, ஒரு ஸந்நியாஸிக்குப் பல பேர் தினந்தினமும் நமஸ்காரம் பண்ணுகிற போது அவன் 'நாராயண' சொல்வது ஒரு ரொடீனாகிவிடுவதில் அவன் இப்படிப்பட்ட அபராதத்திற்கு ஆளாகிவிடக் கூடும். அதனால்தான் இந்த விதியை 'ஈஸி' என்று சொல்லாமல், 'ஈஸி மாதிரி இருக்கிற' என்றது.

நிஜ ஸந்நியாஸி - நூறு பெர்ஸென்ட் ஸந்நியாஸி - என்றால் அவனுக்கு ஒரு கடமையும் இல்லை. அவன் யாருக்கும் எந்த




விதத்திலும் கடமைப்பட்டிருக்கவில்லை. ஆனபடியால் அவன் யாருடைய நல்லது பொல்லாததைப் பற்றியும் நினைக்க வேண்டியதில்லை. அப்படிப்பட்ட ஸ்திதியில் அவனுக்கு யாரோ நமஸ்காரம் பண்ணுகிறார்கள் என்றால் அதற்காக அவர்களுடைய நல்லதை அவன் நினைக்க வேண்டுமென்பதில்லை. அப்படி நினைக்க ஆரம்பித்து விட்டானென்றால் அப்புறம் அந்தப்படி அவர்களுக்கு நல்லது நடந்ததா என்றும் பார்ப்பதில் அவன் புத்தி போக ஆரம்பிக்கும். இப்படிப் பல பேர் விஷயமாக அவன் புத்தியைப் போக விட்டால் அப்புறம் அவனுடைய ஆச்ரம தர்மப்படி ஒரே சிந்தனையாக நினைக்க வேண்டிய ஆத்ம விசாரம் என்ன ஆவது? அவனுக்கான பரம தர்மம் ஸதா ஸர்வதா ஆத்ம விசாரம் பண்ணிக் கொண்டிருப்பதுதான். பண்ணா விட்டால் அவன் ஸந்நியாஸி இல்லை; ஸந்நியாஸியாயில்லாத அவனுக்கு யாரும் நமஸ்காரமும் பண்ண வேண்டியதில்லை என்றும் ஆகிவிடுகிறது! அதனால் ஒரு நிஜ ஸந்நியாஸி அவனுக்கு ஒருத்தன் நமஸ்காரம் பண்ணுகிற போது தன்னுடைய லக்ஷ்யமான ஆத்மாவையே த்வைத லோக நிர்வாஹகனான நாராயண ரூபத்தில் பாவித்து, அந்த நாராயணனிடம் நமஸ்காரம் பண்ணுகிறவனின் நல்லதோ, பொல்லாததோ எதுவானாலும் 'அது உன் (நாராயணனின்) பாடு' என்று போட்டு விட்டு அதோடு விஷயத்தைக் கத்திரித்து விட வேண்டும்.

இது நிஜ ஸந்நியாஸிக்கு, நூறு பெர்ஸெண்ட் ஸந்நியாஸிக்குச் சொன்னது. ஆனால் எதிலும் good, bad, indifferent என்று பல நிலை இருக்கத்தானே செய்கிறது? அப்படி, முழுக்க நிஜ ஸந்நியாஸியாக இல்லாமல் எங்கள் மாதிரி அரை ஸந்நியாஸியாக இருக்கிறவர்கள் (நெடுநேரம் குமிழ்த்துக் குமிழ்த்துச் சிரிக்கிறார்)... 'அரை' என்கிறது கூட ஜாஸ்தியோ என்னவோ? அப்படிச் சொன்னால் ஐம்பது பெர்ஸெண்டாகி விடுமே! அதனால் 'பாஸ் மார்க் ஸந்நியாஸி' என்று வேணுமானால் வைத்துக் கொள்ளலாம்!.. இப்படிப்பட்ட எங்கள் மாதிரி 'பாஸ் மார்க் ஸந்நியாஸிகள்' தங்களுக்குப் பிறத்தியார் நமஸ்காரம் பண்ணும் போது அதில் தங்களுக்கு அடியோடு ஸம்பந்தமில்லை என்று நாராயணனிடம் தள்ளி விட்டு இருக்க முடியுமா?

('எங்கள் மாதிரி பாஸ் மார்க் ஸந்நியாஸி' என்றதில்) 'எங்கள் மாதிரி' என்று யாரைச் சொல்கிறேனென்று புரியாதவர்கள் இருக்கலாம். அதனால் யார் என்று சொல்லி விடுகிறேன். ஸந்நியாஸிக்குக் கடமையே கிடையாது என்று சொன்னேன். அவனுடைய ஒரே கடமை என்று சொல்லக் கூடியது ஆத்ம விசாரம்தான். பெண்டாட்டி, பிள்ளை குட்டி என்ற கடமைகளையே விட்டு விட்ட அவனுக்கு ஜன ஸமூஹத்தைப் பற்றிய கடமையும் கிடையாது. அதனால் அவன் நமஸ்காரத்தை நாராயணன் கிட்டே தள்ளி விட்டுச் சும்மா இருந்துவிட வேண்டியதுதான்.

ஆனால் 'குரு பீடம்' என்று போட்டுக் கொண்டு, 'மடாதிபதி' என்று பிரட்டிக் கொண்டும் சில ஸந்நியாஸிகள் உட்கார்ந்திருக்கிறோமே, அப்படிப்பட்டவர்களைத்தான் மற்ற ஸந்நியாஸிகளிடமிருந்து பிரித்துப் 'பாஸ் மார்க் ஸந்நியாஸிகள்' என்று சொன்னேன்! ஏனென்று கேட்டால் எப்போது குரு பட்டம் கட்டிக் கொண்டோமோ அப்போதே கடமையையும் வாரிக் கட்டிக் கொண்டு விட்டோம் என்று அர்த்தம்! ஜன ஸமூஹத்தைக் குறித்த பெரிய கடமை, பாரமான கடமை, ஜனசமூகத்தை சிஷ்ய சமூகமாக நினைத்து, அதை நல்ல வழியில் கொண்டு போகிற பெரிய கடமை, எங்களுக்கு இருக்கிறது. அதனால் நல்லதோ பொல்லாததோ யாருக்கு வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் நடந்து விட்டுப் போகட்டும் என்று நாங்கள் தள்ளி விட்டு இருந்தால் அது கடமையில் தவறின குற்றமாகி விடும். சிஷ்ய வர்க்கம் நல்வழிப்படணும், அவர்களுக்கு நல்லது நடக்கணும் என்று நினைத்து, அதற்கானதைச் செய்ய வேண்டிய 'ட்யூடி' எங்களுக்கு இருக்கிறது. அப்படியிருக்கும்போது நாங்கள் நல்லது பண்ணுவோம் என்று நம்பிக் கொண்டு சிஷ்யர்கள், பக்தர்கள் நமஸ்காரம் பண்ணும் போது, "இவர்களுடைய நல்லது பொல்லாதுகளில் எங்களுக்கு ஸம்பந்தமில்லை. உன் பாடு! என்ன பண்ணிப்பியோ, பண்ணிக்கோ!" என்று நாராயணனிடம் தள்ளினால் அவன் ஒப்புக் கொள்வானா?

"வேத ரக்ஷணம்: ஸப்ஸ்க்ருப்ஷன் கொண்டு வா" என்கிறேன். "கோபுரம் கட்டணும்; டொனேஷன் கொண்டு வா" என்கிறேன். தினந்தினமும் பிக்ஷை என்று வாங்கிக் கொட்டிக் கொள்கிறேன். இதெல்லாம் த்ரவ்ய ரூபத்தில் பிடுங்கிக் கொள்கிறது. இன்னும் சரீர ப்ரயாஸையாகவும் பிழிந்து எடுக்கிறேன்- "பிடி அரிசி கலெக்ட் பண்ணு", "ஆஸ்பத்திரி ஆஸ்பத்ரியாகப் போய் ப்ரஸாத விநியோகம் பண்ணு", "மாடு கன்றுக்காகக் குளம் வெட்டு" இப்படி தினமும் ஏதாவது. இந்த மாதிரியெல்லாம் பணத்தையும் பிடுங்கிக் கொண்டு, வேலையும் வாங்கிக் கொண்டு, நீங்கள் நமஸ்காரம் பண்ணுகிற போது



மட்டும் உங்களுக்கும் எனக்கும் ஒரு ஸம்பந்தமுமில்லை என்று கத்திரித்தேன் என்றால் அது எப்படி ந்யாயமாகும்?

ஸரி, அதற்காக நான் உங்கள் நல்லதற்கு ஆசீர்வாதம் பண்ணுகிறேனென்றால் அந்த ஆசீர்வாதம் நிஜமாகவே நல்லது பண்ணி விடுமா? அந்த சக்தி அதற்கு உண்டா? நிஜமாகத் தபோசக்தி பெற்றவர்களாக இருந்து கொண்டு பரமாத்மாவுடன் 'டச்' வைத்துக் கொண்டிருப்பவர்களுடைய ஆசீர்வசனத்திற்குத்தான் சக்தி இருக்கும். மற்றவர்கள் ஆசீர்வாதம் பண்ணுவதென்பது எந்த கப சிந்தனைக்கும் கொஞ்சம் நல்லது பண்ணும் சக்தி உண்டு என்ற அளவில் ஏதோ துளி, தாற்காலிகமாகப் பண்ணுவதோடு முடிந்து போய்த்தான் விடும்.

வேடிக்கை என்னவென்றால், எவன் ஸம்பந்தமே இல்லை என்று கத்திரித்திருக்கிறானோ அவனுக்குத்தான் ஆத்ம மார்க்கத்தில் இருக்கிற 'டெடிகேஷ'னாலும், அதிலே அவன் அடைந்திருக்கிற அநுபவங்களாலும் ஆசீர்வாத சக்தி - அருள், அநுக்ரஹம் என்கிறது - ஸ்வாபாவிகமாகவே (தன்னியல்பாகவே) உண்டாகி விடுகிறது! அவனுக்கே தெரியாமலும், அவன் உத்தேசம் பண்ணாமலுங் கூட அந்த ஆசீர்வாதம் அவனை நமஸ்காரம் பண்ணுகிறவனிடம் போய்ச் சேர்ந்து அவனுக்கு நல்லது பண்ணி விடும் - பழுத்த பழம் தானாகவே வெடித்து, யார் அதற்குக் கீழே போய் வாயைத் திறந்தாலும் சாற்றைச் சொட்டுகிற மாதிரி!

அவன் மாதிரி ஸ்வாநுபூதி ஒன்றே குறி என்றில்லாமல் ஊர் பாடெல்லாம் கால்பாடு என்று இழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிற எங்கள் ஸமாசாரம் என்னவென்றால்: நாங்கள் இழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிற ஈடுபாடுகளே எங்களை இழுத்துக் கொண்டு - அநுபூதிக்கானதைப் பண்ணிக் கொள்ள முடியாமல் 'டிஸ்ட்ராக்ட்' பண்ணி இழுத்துக் கொண்டு - போய் விடுகிற ஆபத்து இருக்கிறது. பெரிய 'ரிஸ்க்'. அதிலிருந்து எந்த அளவுக்குத் தப்பித்து, ஆத்ம லக்ஷ்யத்திற்குக் குந்தகமில்லாமலே லோகத்திற்கான கார்யங்களை - குருவாகச் செய்ய வேண்டிய கடமைகளை - பாகுபடுத்திக் கொண்டு, இந்த இரண்டும் பரஸ்பரம் பாதகம் பண்ணிக் கொள்ளாமல், ஒன்றுக்கொன்று ஸாதகமாக, ஸாதனா பலத்தினால் குருவாகப் பண்ணும் லோக க்ஷேம கார்யம் புஷ்டி பெறுவதாகவும், இப்படி லோக க்ஷேமமாகத் தொண்டு பண்ணுவதே சித்த சுத்தியை விருத்தி பண்ணி அதன் மூலம் ஸாதனைக்கு இன்னும் பலம் தருவதாகவும் அழகாக முறைப்படுத்திக் கொண்டு, வரம்பு தப்பாமல் போவதில் எந்த அளவுக்கு ஜயிக்கிறோமோ, அதைப் பொறுத்தே ஆசீர்வாத சக்தியும் உண்டாகும்.

அப்போதுகூட அந்த சக்தி மூலம் நாராயணன்தான். அதை ஒருநாளும் மறந்துவிடக் கூடாது. அவனன்றி அணுவும் அசையாது என்றால் ஆசீர்வாதமும் அவன் திருவுள்ளம் கொண்டால்தானே கார்ய ரூபத்தில் பலன் தரும்? ஆகையினால் ஒரு பக்கம் நாங்கள் நமஸ்காரத்தில் ஸம்பந்தமேயில்லை என்று தள்ளக் கூடாதானாலும், இன்னொரு பக்கம் எங்கள் ஆசீர்வாதத்துக்கே சக்தி இருப்பதாக நினைத்து ஆசீர்வதிக்கவும் கூடாது. பின்னே என்ன பண்ணணுமென்றால், நீங்கள் எங்களுக்கு முன்னாலே சரீரத்தைப் போட்டு நமஸ்காரம் பண்ணும்போது நாங்கள் 'நாராயண' சொல்லி அதனால் அவனை நினைத்துக் கொண்டு மானஸிகமாக அவனுக்கு நமஸ்காரம் பண்ணி, ''இந்தக் குழந்தைகளுக்கான நல்லது நடக்க அருள் செய்யப்பா!'' என்று ப்ரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

'ஸ்தானம்' படுத்துகிற பாடு, இப்படிப் பண்ணுகிற ப்ரார்த்தனையைக் கூட எங்கள் மாதிரி இருக்கிறவர்கள் கையினாலே அஞ்ஜலி பண்ணிச் செலுத்த முடிவதில்லை! நீங்கள் எங்களுக்கு நமஸ்கரிக்கிறபோது நாங்களே ஆசீர்வாதம் பண்ணுவோம். பண்ண வேண்டும் என்றுதான் எதிர்பார்க்கிறீர்கள். நாங்களும் இன்னொருத்தருக்கு நமஸ்காரம் பண்ணி அந்த ஆசீர்வாத 'ஸோர்ஸை'த்தான் tap பண்ணப் பார்க்கணும் என்றால் உங்களுக்கு ஏமாற்றமாயிருக்கும். பண்ணிய நமஸ்காரத்திற்கு, யாருக்குப் பண்ணினோமோ அவரிடமிருந்தே உடனே ஆசீர்வாதம் வந்தால்தானே ஆறுதலாயிருக்கும்? அதனால் நாங்கள் மனஸுக்குள்ளே உங்கள் நமஸ்காரத்தை நாராயணனுக்கு அனுப்பி வைத்தாலும், வெளியிலே அவ

னுக்கு அஞ்ஜலி பண்ண வேண்டிய கையை உங்களுக்கு ஆசீர்வாத அபிநயமாகத் தூக்கவே வேண்டியிருக்கிறது!

இத்தனை வருஷமாக நித்யமும் நீங்கள் கூட்டங் கூட்டமாக எனக்கு நமஸ்காரம் பண்ணிக் கொண்டு வந்திருப்பதில் நானும் உங்களுக்காக அவனை மனஸால் நமஸ்கரித்து, உங்கள் நல்லதற்காக ப்ரார்த்தித்துக் கொள்ளத்தான் முடிந்த மட்டும் முயற்சி பண்ணி வந்திருக்கிறேன். இருந்தாலுங்கூட நீங்கள் ப்ரார்த்திக்கிற விஷயங்கள் ஏதாவது பலித்திருக்கிறதென்றால் அதற்கு என் முயற்சியை விட உங்கள் நம்பிக்கைதான் முக்ய காரணம். நீங்கள் என்னிடம் எந்த அளவுக்கு நம்பிக்கை வைத்திருக்கிறீர்களோ அந்த அளவுக்கு 'ஸின்ஸிய'ராக உங்களுக்காக என்னால் ப்ரார்த்திக்க முடியுமா என்றே தோன்றுகிறது. அதனால்தான் சொன்னேன், என் ஆசீர்வாத பலன் என்று நினைப்பது கூட அதைவிட உங்களுடைய நம்பிக்கையின் பலனேதான் என்று. முடிவாகப் பார்த்தால் உங்கள் ப்ரார்த்தனா பூர்த்திக்கு முடிவான காரணம், என் வக்காலத்து இல்லாமல் அந்த நாராயணனுக்கே உங்களிடமுள்ள க்ருபா சித்தந்தான்.

பெத்தப் பேர் கூட்டி, நூறு, ஆயிரம் என்று ஜனங்கள் நமஸ்காரம் பண்ணி, அது போதாதென்று, ''ஒங்க ஆசீர்வாதத்துல தான் இன்ன இன்ன நடந்தது; ஆச்சர்யமா நடந்தது'' என்று வேறே சொல்லும் போது, ஆசீர்வாதம் பண்ண நமக்கே 'அதாரிடி' இருக்கிறது என்று ப்ரமைப்படாமல் ஜாக்ரதை செய்து கொள்வது ரொம்ப அவச்யமாகிறது. இதில் கொஞ்சம் தப்பினால் கூட ஸாக்ஷாத் நாராயணனின் உடைமையை 'மிஸப்ரோப்ரியேட்' பண்ணிக் கொள்கிற பெரிய அபசாரமாகி விடும்.

வெளியிலே பீடம் போட்டுக் கொண்டு 'ஸ்தானம்' கொண்டாடிக் கொண்டாலும் வாஸ்தவத்திலே பாரத்தைத் தூக்கிக் கொண்டு கூலி வேலை செய்கிறதுதான்! கூலி வேலை செய்கிறவனையே இங்கிலீஷில் Cooly என்கிறார்கள்! அப்படித்தான் நாங்களும். இன்னொருத்தனுக்காக அவன் பாரம் சுமக்கிற மாதிரிதான் நாங்களும். அவன் உடம்பாலே பாரம் தூக்குகிற மாதிரி நாங்கள் உங்கள் நமஸ்காரத்தை மனஸாலே தூக்கி, உங்களுக்காக நாங்கள் செய்கிற ப்ரார்த்தனையின் 'வெய்ட்'டையும் அதோடு சேர்த்து நாராயணனிடம் கொண்டு இறக்க வேண்டும். ஆனால் ஒரு கூலித் தொழிலாளிக்குத் தெரிகிற ஸத்யம் எங்களுக்குத் தெரியுமா என்பதே கேள்வி! தான் தூக்குகிற ஸாமான் தன்னுடையதில்லை. இன்னொருத்தனுடையதைத்தான் தூக்குகிறோம்; அதை இறக்க வேண்டிய இடத்தில் இறக்க வேண்டியதே தன் தொழில் என்று அவனுக்குத் தெரிகிற அந்த ஸத்யத்தைத்தான் சொன்னேன்! நாங்கள் இந்த ஸாமானை - நமஸ்காரம் என்கிற ஸாமானை - இறக்க வேண்டிய அந்த நாராயண பதத்தில் இறக்காவிட்டால் அந்த அபசாரத்திற்கு அவன் 'கூலி கொடுத்து விடுவான்!' கூலிக்காரன் தூக்கும் ஸாமான் அவனுக்கு பாரமாயிருக்கிற மாதிரி நமஸ்காரத்தையும் எங்களுக்குப் பண்ணும் ஸம்மானமாக நினைக்காமல் பாரமாகத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். பக்தர்களிடம் ப்ரியத்தினால் அந்த பாரத்தை ஸந்தோஷமாகவே தாங்கி - தற்காலிகமாகத் தாங்கி - பகவானிடம் இறக்கத்தான் வேண்டுமென்றாலும் தாங்குகிற மட்டும் பாரம் பாரம்தான். அப்படி இறக்காமல் எங்களுக்கே என்று ஸ்வாரஜிதம் பண்ணிக் கொண்டாலோ அது நிரந்தரமான பாப பாரமே ஆகி விடும்.

நமஸ்காரம் பண்ணப்படுகிறவன் கதை இத்தனை 'ரிஸ்கி'யாக இருக்கிறது!


மறு பக்கம், நமஸ்காரம் பண்ணுகிறானே, அவனைப் பார்த்தால் அவன்தான் பாக்யசாலி என்று தெரிகிறது. என்ன பாக்யம் என்றால் பாரத்தைத் தள்ளி விட்டு அக்கடா என்று கிடக்கிற பாக்யம்! பெரியவர் என்று அவன் நினைக்கிற ஒருவருக்கு முன்னாடி தன்னுடைய உடம்பைத் தள்ளி நமஸ்கரிக்கிற போதே அவன், 'இவர் நம்முடைய ஸமாசாரத்தைப் பார்த்துக் கொள்வார்' என்று பாரத்தையும் தள்ளி விடுகிறான். ''ந மம'', அதாவது என்னுடையதல்ல'' என்று தள்ளுவதே 'நம:' என்று சொல்வதுண்டு. நிஜமான நமஸ்காரம் என்றால் அந்த பாவத்தில் தான் பண்ணியதாக இருக்கும். அநேகமாக, ரொம்பப் பேர் பண்ணும் நமஸ்காரம் அவ்வளவு நிஜமாக இல்லாமல், நூறு பெர்ஸென்ட் - பாஸ் மார்க் என்று முன்னே பிரித்துச் சொன்னேனே, அப்படி 'பாஸ் மார்க் நமஸ்கார'மாகத்தான் இருக்கும்! அப்படி இருக்கும் போது கூட நமஸ்காரம் பண்ணும் அந்த ஸமயத்திலே மட்டுமாவது அவன் பாரத்தைத் தள்ளி விட்டு ஹாயாக இருப்பவனாகத்தான் இருப்பான். ப்ரத்யக்ஷத்தில் அப்படித்தான் தெரிகிறது.

இந்த மாதிரி பாரத்தைத் தள்ளி லேசாகி, எளிசாகி ஒருத்தருக்கு முன்னே நமஸ்கரித்துக் கிடக்கிற பாக்யம் எனக்கு பால்யத்திலேயே போய் விட்டது! பறி போய் விட்டது!



'ஸ்தானம்' வந்து பாக்யத்தைப் பறித்துக் கொண்டு போய் விட்டது!

ஸ்வாமிக்கு, அநேக தேவதாமூர்த்தி களுக்கு, பூர்வாசார்யர்களுக்கு எல்லாம் நமஸ்காரம் பண்ணத் தடையில்லைதான். ஆனால் இங்கேயுங் கூட இரண்டொரு 'எக்ஸெப்ஷன்' தவிர சரீரத்தை பூமியிலே தள்ளி நமஸ்காரம் பண்ண எங்களுக்கான சாஸ்த்ரம் இடம் கொடுக்கவில்லை. 'தண்ட வந்தனம்' என்பதாக எங்களுடைய தண் டத்தை ஒரு மாதிரி அஞ்ஜலியில் சுற்றி அத னால் தொட்டே நமஸ்காரம் பண்ண வேண்டும். நீங்கள் செய்யும் நமஸ்காரத்தை யும் 'தண்டாகார நமஸ்காரம்', 'தண்டவிடு



வது' என்றுதான் சொல்வதென்றாலும் அங்கே அர்த்தமே வேறே. தண்டம் என்பது அங்கேயும் கழிதான். ஆனால் அஸல் கழியை இல்லாமல், அதை உபமித்து (உவ மித்து) 'தண்டனிடுவது' என்று வந்திருக் கிறது. கழியை நிறுத்திப் பிடித்தால் அது துளிக்கூட குறைவு இல்லாமல் அப்படியே நிற்கிறது. 'கழியாட்டம் விறைக்கண்டு நிக் கறே!' என்று பணிவு இல்லாதவர்களைக் கேட்கிறோம். அதே கழி, பிடியை விட்டு விட்டால் ஒரே படிமானமாக பூமியோடு பூமி படிந்து அப்படியே கிடக்கிறது. ஜீவ மனஸ் பொதுவாகக் கழி மாதிரி விறைத்துக் கொண்டு நிற்பதுதான். அஹம்பாவம் அதைப் பிடித்துக் கொண்டு உசந்தி நிறுத்தி யிருப்பதில்! அந்த அஹம்பாவப் பிடிப்பை விட்டு விட்டால் மனஸ் தாழ்மையாகக் கிடக்கும்; அப்படிக் கிடந்தே உசந்ததில் உசந்த ஸௌக்யத்தைப் பெற்று விடும்! இந்த மாதிரி மனஸைக் கிடத்துவதற்கு அடையா ளந்தான், பிடியை விட்ட தண்டம் விழு கிறாற்போல பூமியோடு பூமி நமஸ்கரித்துக் கிடப்பது. 'தண்டாகார நமஸ்காரம்' என்ற பெயர் இதனால்தான். இந்த தாத்பர்யத்தைப் புரிந்து கொள்ளாமல் நமஸ்கரித்தால் அந்த நமஸ்காரமே 'தண்டம்'தான்!

எங்களுக்கு தண்டம் எதற்கென்றால் அதுவே மனஸை வசப்படுத்தி அடக்கி வைத்திருப்பதற்குத்தான். தண்டம் என்பதை அடித்து, அடக்குகிற ஆயுதமாக உபயோகிக் கிறோமல்லவா? தண்டாயுதம், தண்டாயுத பாணி என்கிறோமே! 'தண்டனை' என்ற வார்த்தையே 'தண்ட'த்திலிருந்து வந்தது தான். ஜனங்கள் தப்பு வழிகளில் போகாம லும் சத்ருக்கள் தலைதூக்காமலும் அடக்கி ஆளுவதே ராஜாங்கத்தின் முக்ய கார்யமா கையால் அரசியல் சாஸ்திரத்திற்கே 'தண்ட நீதி' என்றுதான் பெயர். அந்த நீதியிலே எங்கள் மனஸை அடக்கி வைத்துக் கொள்வ தற்கு 'ஸிம்ப'லாக, ரூபகமாக எங்களுக்கு

தண்ட தாரணம் விதித்திருக்கிறது. 'ஸிம்பல்' மட்டுமில்லை; அபிமந்த்ரணம் பண்ணி (மந்திரத்தால் சக்தியூட்டி) ஒரு குரு அநுக்ரஹிக்கிறபோது, மனோநிக்ரஹத்திற்கு ஸஹாயம் என்கிற சக்தி தண்டத்திற்கு நிஜமாகவே உண்டாகிறது. விஞ்ஞானத்தில் கண்டு பிடித்துள்ள யந்த்ரங்களுக்கு (இயந்திரங்களுக்கு) ஆச்சர்யமான சக்தி வெளி லோகத்தில் இருக்கிற மாதிரி மந்த்ரங்களுக்கு உள்லோகத்திலே உண்டு. கையால் தொட்டால் 'ஷாக்' அடிக்கிற மின்ஸாரக் கருவிகளைக் கழியால் தொடலாம்தானே? அந்த மாதிரி இந்த்ரிய ஷாக் அடிக்காமல் எங்களை ரக்ஷிக்க இந்த உபகரணம். ரேடியோ அலைகளை ஏரியல் பிடிக்கவில்லையா? Lightning rod இடியே தாக்காமல் மின்ஸாரத்தைப் பிடித்து விடவில்லையா? அப்படித்தான் இதுவும். எங்கள் விஷயத்தில் மனஸுக்கு அடையாளம், கவசம் இரண்டுமாக தண்டமே இருப்பதால் மனஸை இன்னோரிடத்தில் ஒப்புவிக்கிறதற்கு அடையாளமான நமஸ்காரத்தையும் இதைக் கொண்டே நாங்கள் செய்கிறோம். ஆனாலும், 'தீலம் தோய' என்பார்கள், அப்படி பூமியோடு பூமியாக, சரீரத்தைக் கிடத்தி விட்டுக் கிடப்பதில் ஸைகலாஜிகலாக உண்டாகிற விநயபாவம், அந்த 'ஹாய்' இதில் இல்லைதான்!

அதோடு இன்னொன்று. அதைத்தான் முக்யமாகச் சொல்ல வந்தேன். ஸ்வாமிக்கு நமஸ்காரம் பண்ணுவதைவிடவும், பூர்வ காலத்து மஹா புருஷர்களுக்குப் பண்ணுவதைவிடவும் நம் கண் எதிரே நடமாடிக் கொண்டிருக்கும் ஒரு பெரியவருக்கு இப்படி விழுந்து நமஸ்காரம் பண்ணும் போதுதான் விநயபாவம் இன்னும் நன்றாக உண்டாகிறது.

ஸ்வாமி - தெய்வங்களெல்லாம் மஹா சக்தி படைத்தவை. பூர்வகாலத்து மஹா புருஷர்களைப் பற்றியும் அவர்கள் தெய்வாம்சமாக இருந்தவர்கள் என்பதை நாம் நம்பு



கிறோம்; தெய்வத்தன்மை என்ற லெவலைத் தவிர வேறெதிலும் நாம் அவர்களை வைத்துப் பார்க்க முடிவதில்லை. வாஸ்தவமாகவே அவர்கள் அப்படி இருந்ததன் மஹிமையால்தான் இப்படி எனலாம். அப்பேர்ப்பட்ட மஹாசக்தர்களின் முன்னே நாம் அல்ப சக்தர்கள்தான் என்ற உணர்ச்சியோடு நாம் சரீரத்தைக் கீழே தள்ளுவதில் ஆச்சர்யமொன்றும் இல்லை.

ஸரி; இப்போது நாம் நேரே பார்க்கிற பெரியவர்களைப் பற்றி நம் அபிப்ராயம் எப்படி இருக்கிறது? என்னதான் அவர்களை தெய்வமாகச் சொன்னாலும், அவர்கள் நாம்



தெய்வத்தன்மை என்று ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டிருக்கின்றோமே, அந்த லெவலிலேயே எப்போதும் நடப்பதாகத் தெரியவில்லை. மானுஷ்யமாகவே அவர்கள் அநேகம் செய்வதாகப் பார்க்கிறோம். 'மாயை; விளையாட்டு; லௌலப்யத்துக்காகச் செய்கிற மாய விளையாட்டு' என்றெல்லாம் இதுகளைச் சொன்னாலும் கூட, அஸல் தெய்வங்களைப் பற்றியும், பூர்வ காலப் புண்ய புருஷர்களைப் பற்றியும் கேள்வியே எழுப்பாமல் நமக்கு இருக்கிற உசந்த மனோபாவம்... நான் சொல்ல வேண்டியதில்லை! அதனால்தான் இவர்களை (நிகழ் கால மஹான்களை) நாம் இவர்களுக்காகவே, இவர்களாகவே வைத்து ஸ்தோத்தரிக்காமல் ஏதாவது ஒரு ஸ்வாமி அல்லது பூர்வகால புண்ய புருஷரைச் சொல்லி அவருடைய அவதாரமேதான் இவர் என்று ஸ்தோத்தரிப்பதாக ஏற்பட்டிருக்கிறது! யதார்த்தம் எப்படி வேண்டுமானால் இருந்து விட்டுப் போகட்டும் - நம்முடைய பார்வையில் இப்படியொரு வித்யாஸம் தெரிந்தும், நாம் இந்தப் பெரியவர்களுக்கு முன்னாடியும் சரீரத்தைத் தள்ளுகிறோமென்றால் இங்கேதான் நம்முடைய வினயபாவம் சிறப்பாக வெளியாகிறது.

இன்னொரு வித்யாஸங்கூட - இப்போது சொன்னேனே அந்த வித்யாஸத்துக்கே வித்யாஸம் மாதிரியாக! நான் சொன்ன வித்யாஸத்திலிருந்து ப்ரத்யக்ஷத்தில் தெரிகிற பெரியவர்களிடம் நாம் காட்டும் மரியாதையை விட ஜாஸ்தியாகப் பூர்விகப் பெரியவர்களிடமும் தேவதைகளிடமுந்தான் காட்ட வேண்டும் என்று தோன்றலாம். ஆனால் யதார்த்தத்தில் எப்படி இருக்கிறது? நீங்களே எப்படிப் பண்ணுகிறீர்களென்று கொஞ்சம் ஆலோசித்துப் பாருங்கள். தேவதா மூர்த்திகளிடம் பக்தி என்பது யதேஷ்டமாக இருப்பது வாஸ்தவம். ஆனால் அவர்களிடம் 'மரியாதை' என்று ஒரேயடியாகக் கைகட்டி வாய் புதைத்துக் கொண்டா போகிறோம்? மரியாதையும் இல்லாமலில்லை. ஆனாலும் அதுதான் முக்யமென்று இருக்கவில்லை. பக்தி என்பது இன்னவென்றே வரையறுத்து லக்ஷணம் சொல்ல முடியாமல் இருக்கிற ஒன்று. அது அன்பின் அநேக ரஸபாவங்கள் நிரம்பியதாக இருக்கிறது. பக்திக்குப் பாத்திரமாகிற தேவதையிடம் நாம் 'அப்ரோச்'சையும் வரையறுத்து லக்ஷணம் சொல்ல முடியவில்லை. நாம் எப்படி 'அப்ரோச்' பண்ணுகிறோம் என்று நமக்கே புத்திபூர்வமாகத் தெரியாமல் உண்டாகிற ஏதோ ஒன்று என்றுதான் அதைச் சொல்லணும். அதிலே மரியாதையும் ஒரு அம்சமாக இருக்கும். ஏன், இல்லாமலும் இருக்கும்! ஒரே ஸ்வாதீனத்தில் மரியாதையே பார்க்காமல் நிந்தா ஸ்துதி கூடச் செய்கிறதுண்டாச்சே!

பூர்விக புண்ய புருஷர்களைப் பார்த்தால் அங்கே இத்தனை ஸ்வாதீனம் எடுத்துக் கொள்வது அவ்வளவாக இல்லை. தேவதைகளிடம் காட்டியதை விட இவர்களிடம் மரியாதை அம்சம் முன்னுக்கு வந்து தெரிகிறது. ஆனால் அதுதான் முக்யமென்று சொல்வதற்கில்லாமல் பக்தியின் மற்ற ரஸபாவங்களையும் அதற்கு ஸமமாகக் காட்டுகிறோம்.

நம் காலத்தில் நமக்கு முன்னே கண்ணுக்குத் தெரிகிற பெரியவர்களுக்கு வந்தால், இங்கேதான் மரியாதை என்ற அம்சம் ரொம்பவும் முக்ய ஸ்தானத்தில் இடம் பெறுகிறது. தெய்வசக்தி என்பதைப் பற்றிய நம் கணக்குப்படி - அது ஸரியா, தப்பா என்பது வேறு விஷயம் - ஆனால் அதுதானே நடைமுறையில் இருக்கிறது? அந்தக் கணக்குப்படி பார்த்தால் தெய்வங்கள், பூர்வகால மஹான்கள், நம் காலத்துப் பெரியவர்கள் ஆகிய மூன்று பேருக்கு எப்படி மார்க் போடுகிறோமோ அதற்கு 'இன்வர்ஸ் ப்ரபோர்ஷ'னிலேயே (எதிரிடை விகிதாச்சாரத்திலேயே) நாம் அவர்களிடம் காட்டுகிற மரியாதை இருக்கிறது! ப்ரியம், பந்துத்வம், ஸ்வாதீனம் என்றெல்லாம் இருக்கிற பக்தியம்சங்கள் ப்ரத்யக்ஷப்பெரியவர்களிடம் தூக்கலாக இல்லாமல், இதனாலேயேதானோ என்னவோ, மரியாதையம்சம் இங்கேதான் தலைதூக்கிக் கொண்டு முக்யமாக நிற்கிறது. மத ஸம்பந்தமாகப் பெரியவர்கள் என்றிருக்கிற ஸ்வாமியார்கள் மட்டுந்தான் என்றில்லை; அரசியல் ப்ரமுகர்கள், கட்சித் தலைவர்கள், அறிவாளிகளாக இருக்கப்பட்டவர்கள், கலைகளில் சிறப்புப் பெற்றவர்கள், பணபலம் படைத்தவர்கள் என்று யாரை எடுத்தாலும், எந்தத் துறையிலும் பெரியவர்களாக உள்ளவர்களிடம் மரியாதைதான் நம் அப்ரோச்சில் முக்யமாகிறது.

'மரியாதை' என்பதை விட 'ரெஸ்பெக்ட்' என்று சொன்னால் இந்த விஷயம் நன்றாகப் புரியும். தேவதைகளுக்கு 'ரெஸ்பெக்ட்' சொல்வதுண்டா? 'Respected' போடுவதுண்டா? பூர்வ காலப் பெரியவர்களுக்கும் - நம்முடைய ஆசார்யாள், வ்யாஸாசார்யாள் மாதிரியானவர்களுக்கும் 'respected' போடுவதில்லை; 'adored' என்றுதான் போடுகிறோம். Adoration என்பது பூஜிப்பது. அதில் ரெஸ்பெக்ட் ஒரு அம்சந்தான்; இன்னும் என்னென்னவோ அதற்குள் உண்டு. ப்ரத்யக்ஷத்திலே பார்க்கிற பெரியவர்கள்

விஷயத்தில்தான் 'ரெஸ்பெக்ட்', 'ரெஸ்பெக்டெட்' எல்லாம் முதல் அம்சமாக வருகிறது.

தேவதைகள் எத்தனை உசத்தியாயிருந்தாலும் அந்த உசத்தி அவர்களுக்கு ஸ்வாபாவிகம் (நன்னியல்பாயிருப்பது) என்பதால் அதைப் பெரிசாக எடுத்துக் கொண்டு நாம் விசேஷமாக மரியாதை கொள்ளுவதில்லை. முற்கால மஹாபுருஷர்களையும் ''தெய்வாம்சம் பெற்றவர்கள்; அதனால் உசந்தவர்களாக இருக்கிறார்கள்'' என்று லேசாக எடுத்துக் கொண்டு போய் விடுகிறோம். நம் மாதிரி மநுஷ்யர்களாக நமக்கு மத்தியிலே இருந்து கொண்டே நம்மை விட உசந்தவர்களாக ஆத்மாநுபவத்திலேயோ, அறிவிலேயோ, பணம் - பதவியிலேயோ இருக்கும் பெரியவர்களைப் பார்க்கும் போதுதான் நம்முடைய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் நமக்கில்லாத உயர்வை அடைந்திருக்கிறார்களே என்பதால் மரியாதை விசேஷமாக உண்டாகிறது. அதிலும் ஆத்மா, மதம், ஸ்வாமி என்று ஸம்பந்தப்பட்டவர்களிடம் நன்றாகப் பூரித்துக் கொண்டு உண்டாகிறது. அதனால் ஸ்வாமி, புராண புருஷர்கள் முதலியவர்களை விடவும் இவர்களுக்குச் செய்யும் நமஸ்காரத்தில்தான் 'நாம் சின்னவர்' என்ற எளிமை ஆழமாக ஏற்படுகிறது.


அப்படிப்பட்ட உணர்ச்சியைப் பெற்று லேசாகிற பாக்யம் எனக்குச் சிறு வயசிலேயே பறிபோய் விட்டது! 'ஸ்தான' கௌரவம் ஒரே பளுவாக அமுக்கும் போது லேசாவது எப்படி?

மற்ற ஸந்நியாஸிகளுக்கெல்லாம் இல்லாததாக இதில் எனக்கென்று (''எனக்கு...ன்னு'' என்று அர்த்தபுஷ்டியுடன் இழுத்துக் கூறுகிறார்) இரண்டு 'அன்லக்கி ப்ரைஸ்'கள்! என்னவென்றால்; ஸந்நியாஸிகளும் தங்களை விடப் பெரியவர்களான மற்ற ஸந்நியாஸிகளுக்கு நமஸ்காரம் செய்ய வேண்டும் என்று பொது விதி. இதில் ஒரு வித்யாஸமான அம்சம் என்னவென்றால், ஸந்நியாஸிகளில் யார் பெரியவர் என்று வயஸை வைத்துக் கணக்குப் பண்ணுவதில்லை. ஒருத்தர் எத்தனை வருஷம் வ்யாஸ பூஜை பண்ணியிருக்கிறார் என்பதை வைத்தே கணக்கு. ஒவ்வொரு ஸந்நியாஸியும் ஆஷாட பூர்ணிமையில் வ்யாஸ பூஜை பண்ண வேண்டும். அந்த ரீதியில், இருபது வயஸில் (ஸந்நியாஸ) ஆச்ரமம் வாங்கிக் கொண்ட ஒருவர் முப்பது வயஸில் பத்து பூஜை பண்ணியிருப்பார். இவருக்கு 25 வயஸாகிறபோது, ரிடையரான ஒரு 55 வயஸுக்காரர் ஆச்ரமம் வாங்கிக் கொள்கிறாரென்று வைத்துக் கொள்ளுங்கள். இவர் பத்து வ்யாஸ பூஜை முடிக்கும்போது அந்த வ்ருத்தர் ஐந்துதான் முடித்திருப்பார். அப்போது அந்த இரண்டு பேரும் ஸந்தித்தால் முப்பது வயஸுக்காரர்தான் ஜாஸ்தி வ்யாஸ பூஜை முடித்தவரென்பதால் அவருக்கே அறுபது வயஸுக்கார வ்ருத்த ஸந்நியாஸி நமஸ்காரம் பண்ண வேண்டும். ஆனாலும் என் விஷயத்திலோ... நான் ஸ்வாமிகளான அப்புறம் ரொம்ப வருஷம் என்னைவிட ஜாஸ்தி வ்யாஸ பூஜை பண்ணியுள்ள அநேக ஸந்நியாஸிகளை ஸந்தித்திருக்கிறேன். ஆனாலும் நான் அவர்களுக்கு நமஸ்கரிப்பது என்பது இல்லாமல் நேர்மாறாகவே நடந்திருக்கிறது. காரணம், 'ஜகத்குரு' டைட்டில்! 'ஜகத்தெல்லாம் நமக்கு குரு' என்றுதான் நான் அதை அர்த்தம் பண்ணிக் கொண்டிருந்தாலும், வெளி நடவடிக்கையிலே, 'ஜகத்குருவுக்கு ஜகத்து பூராவும் சிஷ்ய வர்க்கம்; சிஷ்யருக்கு நமஸ்காரம் என்பது மனஸாலேயும் நினைக்கப்படாதது' என்ற மடத்துச் சட்டத்தைத்தானே மதித்து நடக்கணும்? ஆகையினாலே யதிகளிலேயும் எனக்குப் பெரியவர்கள் என்று நான் யாருக்கும் நமஸ்காரம் பண்ண முடியாமலாயிற்று!

இதைவிட இன்னொரு துர்பாக்யம் - 'எனக்கென்று' வாய்த்தது: ஜகத்குரு பட்டம் கட்டிக் கொண்ட மற்ற ஸந்நியாஸிகளும் தங்களுக்குப் பட்டம் கட்டின குரு ஸ்வாமிகளுக்கு நமஸ்காரம் செய்திருப்பார்கள் - யதேஷ்டமாகவே செய்திருப்பார்கள். இங்கே (தம்மையே குறிவிட்டுக் கொள்கிறார்கள்) அதற்கும் கொடுத்து வைத்திருக்கவில்லை. கதை உங்களுக்கே தெரிந்திருந்தால் ஸரி. (ஸ்ரீ மகா பெரியவர்களை அடுத்த பட்டமாக சங்கற்பித்த பூர்வாசாரியர் மகா சமாதி அடைந்த பின்தான் இவர், அவரிருந்த இடத்திற்குச் சென்று பட்டமேற்க முடிந்தது. ஆச்சர்யமாக சிருங்கேரி ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளின் விஷயத்திலும் இவ்வாறே நடந்தது.)

எனக்குக் கிட்டாத அந்த நமஸ்கார பாக்யம் உங்களுக்கெல்லாம் கிட்டியிருக்கிறது. நீங்கள் அதைப் பூராவாக ப்ரயோஜனம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். கோவிலுக்குப் போய் ஸ்வாமி நமஸ்காரம் பண்ணுவதோடு, கண்ணுக்கெதிரே நடமாடிக் கொண்டிருக்கும் பெரியவர்களையெல்லாம் தேடிப் போய் நமஸ்காரம் பண்ணுங்கள்; பின்னாடி சொன்னதில்தான் குறிப்பாக மரியாதையுணர்ச்சி முக்யமாயிருக்கிறது என்கிறேன்.

''இருக்கட்டுமே, அதிலென்ன விசேஷம்?'' என்றால் - ரொம்ப விசேஷம் இருக்





கிறது. இந்த மரியாதை உணர்ச்சிதான் வினயம், பணிவு என்று சொல்கிற உசந்த பண்பை வரவழைத்துத் தருகிறது. 'அடி பணிந்து' என்றே நமஸ்காரத்தைச் சொல்கிறோம். இந்தப் பணிவு நன்றாக மலர்ச்சி பெற்று ப்ரகாசிப்பது, ஏனைய பக்தி பாவ நமஸ்காரங்களை விடவும் மரியாதை உணர்வோடு பண்ணுகிற நமஸ்காரத்தில்தான். ஒரு பெரியவருக்கு முன்னாடி பூமியிலே சரீரத்தைத் தள்ளி நமஸ்கரிக்கும்போது இந்த வினயத்துக்கு நன்றாக ரூபகம் கொடுத்து அநுபவித்து ஸந்தோஷப்பட முடிகிறது. அந்த (வினய) மனோபாவத்திற்கு இந்த (நமஸ்கார) க்ரியை ரூபகமாக மட்டுமில்லாமல் இந்த க்ரியையே அந்த பாவம் மேலும் மேலும் வ்ருத்தியாவதற்குப் புஷ்டியும் தருகிறது.

'மற்ற ப்ராணி வர்க்கங்கள் அத்தனையும் குறுக்கே வளர்கிற 'திர்யக்' ஜந்துக்கள்; மநுஷ்யன் ஒருத்தன்தான் காலுக்கு மேலேயும் உடம்பு, சிரஸு என்று உயரவாட்டில் 'ஊர்த்வமுகமாக வளர்கிறவன்; ஸ்ருஷ்டி வர்க்கங்களிலேயே இவன்தான் உசந்தவன் என்பதால் இப்படி இவனைப் படைத்திருப்பது' என்று பெருமை சொல்கிறதுண்டு. ஆனால் இந்த உசத்தி அஹம்பாவத்திலேயும் தற்பெருமையிலேயும் கொண்டு விட்டால் இவன் மிருக ஜாதிக்கும் கீழே போக வேண்டியதுதான்! நம்முடைய சிந்தனை, வாழ்க்கை முறை எல்லாம் மற்ற ப்ராணிகளுடையதைப் போல இந்த்ரிய ஸௌக்யங்களோடு முடிந்து போகாமல் உசந்ததாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் பகவான் நம்மை இப்படிப் படைத்திருப்பதாகத் புரிந்து கொண்டு அதற்கான ப்ரயாஸைகளைப் பண்ணி இன்னும் உசந்த ஸ்திதிக்குப் போகணுமே தவிர, தற்பெருமைப் பட்டுக் கொண்டு கீழே விழுந்து விடக்கூடாது. தற்பெருமையை என்னவென்று சொல்கிறோம்? 'தலைக்கனம்', 'மண்டைக் கனம்' என்கிறோம். குறுக்குவாட்டில் வளருகிற ப்ராணியாயிருந்து அப்படி மண்டைக் கனம் ஏறினால் பரவாயில்லை; 'பாலன்ஸ்' கெட்டுப் போகாமல் சமாளித்துக் கொண்டு விடலாம். ஆனால் உயரவாட்டில் இப்போது நாம் இருக்கிற நிலையில் மண்டைக் கனம் ஏறினால்.. 'டாப் - ஹெவி' ஆனால் என்னவாகும்? 'ஈக்விலிப்ரியம்' என்கிற ஸமசீர் நிலையே கெட்டுப் போய், குலைந்து போய், தடாலென்று விழ வேண்டியதுதான்! பகவான், நாம் உயரவாட்டில் வளரும்படி வைத்து சிரஸை உச்சியில் வைத்திருக்கிறானென்றால் ஒருபோதும் தலைக் கனம் ஏறாமல் பணிவாயிருந்து நம்மை விழுவதிலிருந்து - வீழ்ச்சியிலிருந்து - காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான். 'பதிதன்', பதிதை' என்று ரொம்பவும் நிஷித்தமாகச் சொல்கிறோமே, அதற்கு நேர் அர்த்தமே 'விழுந்து விட்டவர்' என்பது தான்.

அப்படிக் கீழே விழாமலிருப்பதற்கு நமஸ்காரம் என்பதாக வினயத்தோடு கீழே விழுவதே ஸஹாயம் பண்ணும்! நிற்கிறவன் விழுந்து அடிபட்டுக் கொள்ளலாம். உட்கார்ந்திருக்கிறவன் கூட அப்படியே சாய்ந்து அடி, கிடி படலாம். பூமியோடு பூமியாகச் சரீரத்தைப் போட்டுக் கிடக்கிறவன் விழவோ, சாயவோ, அடிபட்டுக் கொள்ளவோ முடியுமா?

உயரம் ஜாஸ்தியாக ஆக, விழுந்தால் படுகிற அடியும் ஜாஸ்தி ஹானி உண்டாக்குவதாக இருக்கும். உசந்த ஸ்தானம் என்பதன் கதியும் அப்படித்தான். அங்கே இருக்கிறவன் தப்புப் பண்ணி இடறி விழுகிற போதுதான் அப்புறம் எழுந்திருக்கவே முடியாமல் - அதாவாது, அந்த உசத்தியை மறுபடி அடையவே முடியாதபடி - ஊர் உலகமெல்லாம் சிரித்து அவனை மட்டந்தட்டி வைத்து விடுகிறது.

உலகம் சிரிப்பது, ச்லாகிப்பது இருக்கட்டும். ஆத்மார்த்தமாக ஒருத்தனுக்கு எது நல்லது? எப்படி இருந்தால் அவனுக்கு உள்ளூர ஒரு நிறைவு, நிம்மதி ஏற்படுகிறது? பாரம் தூக்கினால் நிம்மதியா, அதை இறக்கிப் போட்டால் நிம்மதியா? பாரம் என்றால் இந்த ஸம்ஸார ஸாகரத்தில் ஏற்படுகிற கஷ்டங்களின் பாரம் மட்டுமில்லை. பெரிய பாரம் அஹம்பாவந்தான்; தற்பெருமை தான். அதை இறக்கினாலே நிரந்தர நிம்மதி. அப்படி இறக்குவதற்கு ஸஹாயம் செய்யும் க்ரியைதான், ஒரு மநுஷ்ய சரீரத்தில் பூமிக்கு ரொம்ப எட்டத்திலிருக்கிற சிரஸை ஒரே இறக்காக, மற்ற அவயவங்களுக்கு ஸமஸ்

தானத்தில் இறக்கி பூமியோடு பூமியாகப் போட்டு நமஸ்கரிப்பது! ''சிரஸே ப்ரதானம்'' என்ற பெருமையை தானம் பண்ணி, அதையும் எண்சாணில் ஒன்றாக எளிமைப் படுத்தும் கிரியை! ''பிறத்தியார் இறக்கினால் அவமானம்; நாமே இப்படித் தலையை இறக்கினாலோ பஹுமானம்; வினய 'ஸம்பத்து' என்றே சொல்லும் வெகுமதி! தலைக்கனம், மூளைப் பெருமை போகவே தலையால் நமஸ்கரிப்பது! ''தலையே, நீ வணங்காய்!'' என்றுதான் அப்பர் ஸ்வாமிகள் பாடியதும்.

ஒருமுகமாக இந்தக் கார்யத்தைப் பண்ண வேண்டும், அப்போது பராக்குப் பார்க்கப்படாது என்பதால்தான் வெளியிலே ஒன்றையும் பார்க்காமல் பூமிப் பக்கமாக தலையைக் குனிந்து கொண்டு குப்புற வாக்கில் நமஸ்கரிப்பது. மற்றவர்களால் தலைகுனிவு ஏற்படுவது அவமானம். நாமே குனிவது பஹுமானம்!

பஹிர்முகமாக (வெளிமுகமாக) ஒரு ஜீவனை இழுக்கிற இந்த்ரியங்களெல்லாமே மல்லாக்குப் பக்கத்தில்தானே இருக்கின்றன? அவை எல்லாவற்றையும் லோகத்தின் திசையிலிருந்து திருப்பவே குப்புற நமஸ்கரிப்பது.

உசத்தி ஒன்றும் வேண்டாம்: தாழவே இருக்க வேண்டும். உயர்மட்டத்தில் ஜலம் நிற்காமல் தாழ்மட்டத்திலேயே சேருகிற மாதிரி நாம் மனோபாவத்தில் தாழ இருந்தால்தான் க்ருபா வர்ஷம் - அருள் மழை - நம்மிடம் பாய்ந்து வந்து தேங்கி நிற்கும். அதற்கு அடையாளமாகத்தான் தலையோடு கால் சரீரத்தை நில மட்டத்தோடு தாழ்த்திக் கிடப்பது.

இதற்கே ஸாஷ்டாங்க நமஸ்காரம் என்று பெயர். முன்னந் தலை, தோள் இரண்டு, கை இரண்டு, வக்ஷமும் வயிறும் சேர்ந்த torso என்கிற கபந்த பாகம், கால் இரண்டு ஆகிய எட்டு அங்கங்கள் நிலத்தில் படுவதால், படிவதால், 'ஸ அஷ்ட அங்கம் - ஸாஷ்டாங்கம்' என்று பெயர். உங்களுக்கே தெரியும். ஸ்த்ரீகள் இப்படிப் பண்ணுவதில்லை என்று. அதற்குப் 'பஞ்சாங்க நமஸ்காரம்' என்று பெயர். பஞ்சாங்கம் என்றால் ஜோஸ்யர் நாள், நக்ஷத்ரம் பார்க்கிற புஸ்தகமில்லை! இப்போது நான் சொன்ன எட்டு அங்கங்களில் 'டார்ஸோ' வும் தோள் இரண்டுமான மூன்று போக, பாக்கி ஐந்து அங்கங்களாலேயே அவர்கள் நமஸ்கரிப்பதால் பஞ்சாங்கம் என்று பெயர். உசத்தி மனப்பான்மையை உதறி எறிந்து விட்டு மட்டத்தில் மட்டமாக நில மட்டத் தோடு கிடக்க வேண்டும் என்று நம் சாஸ்த்ரகாரர்கள் விதி செய்த போது கூட ஸ்த்ரீகளிடம் அம்பாளம்சமாக உள்ள மாத்ருத்வத்தை ஒருகாலும் மட்டப்படுத்தப் படாது என்று நினைத்தார்கள். அதனால், ஒரு ஜீவப் பிண்டத்தை கர்ப்பமாக ரக்ஷித்து, அப்புறம் அது ஜனித்த பிற்பாடும் அதற்கு ஆஹாரத்தைப் படைத்து ஊட்டுகிற சரீரபாகம் மண்ணிலேபடக் கூடாது என்று வைத்தார்கள். அந்த பாகம் படப்படாது என்றால் அப்போது இரண்டு தோளுங்கூடப் படாமலிருந்தால்தான் வாகாக வளைந்து நமஸ்கரிக்க முடியும். இப்படி அந்த மூன்று அங்கங்களும் நீங்கியதால்தான் அஷ்டாங்கம் பஞ்சாங்கமாயிற்று. ஸ்த்ரீகள் வளைந்து கொடுக்கும் குணமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கும் அந்த நமஸ்காரமே ரூபகமாக இருக்கிறது. 'வணக்குவது' என்றால் கூட 'வளைப்பது' தானாகையால் 'வணக்கம்' என்பது வாஸ்தவத்திலே ஸ்த்ரீகள் பண்ணுவதுதான் என்று தோன்றுகிறது. புருஷர்கள் கை வணக்கம் மட்டும் பண்ணலாம். ஸ்த்ரீகள்தான் ஸர்வாங்க வணக்கம் செய்வது.

ஒரு மனோபாவத்தை வெளிப்படுத்துவதற்காகச் செய்கிற சரீர க்ரியையே தலைமுறை தலைமுறையாகப் பல பேர் அப்படிப் பண்ணியதில் மரத்தில் வஜ்ரம் பிடிக்கிற மாதிரி ஒரு உள்பலத்தைப் பெற்று விடுகிறது. அப்புறம் இந்த க்ரியையே அந்த மனோபாவத்தை பலப்படுத்தி விருத்தி செய்து கொடுக்க ஆரம்பித்து விடுகிறது. அடிப்படையில் அந்த மனோபாவத்தை நாம் நினைத்து அந்த க்ரியையைச் செய்தால் க்ரியையே நினைப்பை ஆழப்படுத்தி பாவத்தை வளர்த்துக் கொடுக்கும். அப்படி இந்த ஸாஷ்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் வினய ஸம்பத்து என்ற உசந்த - தாழ்மையாலேயே உசரமான - பாவத்தைப் போஷித்துக் கொடுக்க உதவியாயிருக்கின்றன.

நம்முடைய புராதனமான 'ட்ரெடிஷ'னில் வினய குணத்திற்கு ரொம்பவும் சிறப்பு கொடுத்திருக்கிறது. பதவி, பணம், அறிவு, அழகு என்று ஒவ்வொன்றை வைத்தும் அஹங்காரம் - தலைக்கனம் - ஏற இட முண்டானாலும் அந்தத் தலைக்கனமும் ரொம்பத் தலை தூக்கி நிற்பது 'அறிவிலே நாம் பெரியவர்' என்று ஒருவர் நினைக்கிற போது தான்! அப்படியிருப்பவர்கள் எதையும் துச்சமாகத் தூக்கி எறிந்து, பரிஹஸித்து எல்லாம் பேசுவார்கள். ஆகையால் அப்படிப்பட்ட அறிவு விருத்தியை வினயத்தோடு சேர்த்து இறுக்கி முடிச்சுப் போட்டுக் கொடுத்து விட்டால் எல்லாவிதமான தலைக் கனங்களையும் அடக்கி விட்டதாக ஆகிவிடும். இதைத்தான் நம் சாஸ்திரங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருக்கின்றன - அதாவது





வித்தையானது வினயத்தோடு சேர்ந்தே பயிலப் பட வேண்டும்; இல்லாவிட்டால் 'கற்றது அனைத்தும் வீண்' என்று சொல்லி இருக்கின்றனர். பகவானும் (கீதையில்) ''வித்யா - வினய ஸம்பன்ன'' என்று சேர்த்துச் சொல்லியிருக்கிறார்.

வினயம் இருக்கிற இடத்தில்தான் ஈச்வர க்ருபை சேருமாதலால் எல்லாரும் அதற்கு ஆசைப்பட்டு, அதற்கு உபாயமாக உள்ள நமஸ்காரத்தை நிறையப் பண்ண வேண்டும். பெரியவர்களைத் தேடித் தேடிப் போய் நமஸ்காரம் பண்ணணுமென்று அந்த நாளில் சொல்லிக் கொடுப்பார்கள். அந்தப் பெரியவர்கள் அவர்களே ஆசீர்வாதம் செய்கிறவர்களாகவோ, நமக்காக நாராயணனின் ஆசீர்வாதத்தை ப்ரார்த்திக்கிறவர்களாகவோ, தனக்கு ஸம்பந்தமில்லையென்று அவனிடம் நமஸ்காரத்தைத் தூக்கிப் போடுபவர்களாகவோ, எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். நாம் அதைப் பற்றி யோஜிக்காமல் பெரியவராக இருக்கிற அந்த எல்லா நிறுஸூக்காரர்களுக்கும் முன்னாடி ''நமோ நம:'' என்று பூமியில் சரீரத்தைத் தள்ளி விட்டோமானால் அந்த நாராயணனின் க்ருபை எப்படியோ ஒரு ரூபத்தில் நமக்குக் கிடைத்துவிடும். ஒற்றை 'நம: ' சொல்வதில்லை; 'நமோ நம:' என்று பலவாகப் பெருக்கியே சொல்வது. பேச்சு வார்த்தையில் கூட ''உனக்கு ஆயிரம் நமஸ்காரம்; கோடி நமஸ்காரம்'' என்கிறோம்! அப்படி நமஸ்காரத்தை வளர்த்துக் கொடுத்திருக்கும் ட்ரெடிஷனில் வந்த நாம் இந்தப் பெரிய பித்ரார்ஜிதம் வீணாக விடப்படாது.

வினயத்தோடு - வினயத்திற்காக ஆசைப்பட்டு - இந்த க்ரியையைப் பண்ண வேண்டுமென்பது ரொம்பவும் முக்யம். அந்த அடிப்படை எண்ணம் இல்லாவிட்டால் நமஸ்காரம் என்பது தண்டால் மாதிரி ஒரு கஸரத்துத்தான். தண்டாகார நமஸ்காரத்தைத் தண்டால் நமஸ்காரமாக்கி அபசாரப்படக்கூடாது. கஸ்ரத் பழகி உடம்பைப் புஷ்டி பண்ணிக் கொண்டு மட்டும் என்ன ப்ரயோஜனம்? உள்ளத்தை திவ்யாநுபவங்களால், ஆத்மாநுபவத்தால் புஷ்டி பண்ணிக் கொள்ள இந்த மநுஷ்ய ஸ்ருஷ்டி ஒன்றுக்கே பகவான் வழி போட்டுக் கொடுத்திருக்கிற போது உடம்பளவில் மட்டும் ம்ருக பலத்தை விருத்தி செய்து கொண்டால் நாமும் திர்யக் ஜீவராசிதான். பகவான் கொடுத்திருக்கும் அந்த வழிகளைப் பலவிதமாகச் சொன்னாலும் முக்யமாக அது கொழுத்துக் கிடக்கிற அஹம்பாவ புஷ்டியை வினயத்தினால் மெலியப் பண்ணி இளைத்துத் தேய வைப்பதுதான். அதற்கு உபாயம் நராக்ருதியில் நமக்கு நேரே பெரியவர்களாக இருந்து கொண்டிருப்பவர்களின் காலடியில் 'நமோ நம:' என்று விழுவதுதான்.

பரமேச்வரனை 'அபிஷேகப்ரியன்' என்கிறாற் போலவே 'நமஸ்கார ப்ரியன்' என்றும் சொல்வதுண்டு. அவனுக்கு வேதமே சொல்லும் ஸ்ரீ ருத்ரஸூக்தத்தில் ஒரே 'நமோ நம:' மயமாக வரும். 'நமகம்' என்றே அந்த ஸூக்தத்திற்குப் பெயர் சொல்வதுண்டு. பரமேச்வரனுக்கான பஞ்சாக்ஷரியும், அது மட்டும் இல்லாமல் ஆரம்பத்திலிருந்து நான் சொல்லிக் கொண்டிருக்கிற அந்த நாராயணனுக்கான அஷ்டாக்ஷரியும் நமஸ்காரம் சொல்லித்தான் ஆரம்பிக்கின்றன. ப்ரத்யக்ஷ தெய்வமாக தினமும் பகல் ராத்திரிகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறானே அவனுக்கும் 'ஸூர்ய நமஸ்காரம்' என்றே வழிபாடு செய்கிறோம்.

''பரமாத்மாவையே நமஸ்காரம் என்று பாவித்து உபாஸியுங்கள்: அப்போது எல்லா காமங்களும் உங்களை நமஸ்கரிக்க ஆரம்பித்து விடும்'' என்று வேதம் (தைத்திரீய உபநிஷத்தில்) சொல்லியிருக்கிறது. என்ன அர்த்தம்? பலவிதமான காமங்களின் - அதாவது, விருப்பங்களின் - நிறைவேற்றத்தை வேண்டித்தான் பொதுவாக நாம் நமஸ்கரிப்பது. அதெல்லாம் நிறைவேறுவது ஸாத்யமா? நம் கர்மா அதற்கு விடுமா? அப்படியே நிறைவேறினாலும் அதனால் ஆத்மாவின் நிறைந்த நிறைவைப் பெற முடியுமா? ''ஆசைக்கோரளவில்லை'' என்றபடி இந்த விதமான ப்ரார்த்தனைக்கு முடிவேயில்லாமல் ஒன்று விட்டால் இன்னொன்று என்று பிடுங்கி எடுத்தபடிதான் போகும். ஆனபடியால் புத்திசாலித்தனமாக ப்ரார்த்திப்பதென்றால் எல்லாக் காமனைகளையும் விட்டு விட்ட விடுதலை நிலைக்காகத்தான் வேண்டிக் கொள்ள வேண்டும். ''வேண்டாமை வேண்டி'' என்று இதை அழகாகச் சொல்வார்கள். அந்த விடுபட்ட நிலையைத்தான் 'காமங்கள் இவனை நமஸ்கரிக்கும் ஸ்திதி' என்று சொன்னது. இவன் ஒரு காமனைப் பூர்த்திக்காகவும் அடிபணியவில்லை; காமனைகள்தான், ''எங்களை இப்படித் திரஸ்காரம் பண்ணிவிட்டீர்களே! கொஞ்சம் கண் திறந்து பாருங்களேன்!'' என்று இவனுக்கு அடிபணியுமாம்! ச்ருதி வாக்யம் இதைத்தான் கவிநயத்தோடு சொல்கிறது!



நமஸ்காரம் பண்ணி அதன் மூலம் வேறேதோ காமனையின் நிறைவேற்றம் என்ற பலனைக் கேட்பதே ஒரு நிலையில் அசட்டுத்தனம்தான். ஏனெனில் அதுவேதான் 'ஆடோமாடிக்'காக விநயம் என்ற மஹா பலனைக் கொடுத்து விடுகிறதே! அதுவே பலன், பாக்யம், செல்வம் எல்லாம். ஆசார்யாள் கூட வேறே யாரோ தரித்ர தம்பதிக்காகக் கனகதாரை கேட்டு மஹாலக்ஷ்மியை ஸ்துதித்தாரே தவிர, அந்த ஸ்துதியில் தமக்கு இன்னது வேணும் என்கிற போது கனகம் முதலான பொருட்செல்வம் எதையும் கேட்காமல், அவளை நமஸ்கரிப்பது என்பதேதான் தாம் வேண்டும் செல்வம் என்று சொல்லியிருக்கிறார் ''த்வத் வந்தனானி மாமேவ மாதரநிசம் கலயந்து'' என்று.

ஆகையினால் ''எந்தரோ மஹாநுபாவுலு அந்தரிகி வந்தனமு'' என்றாற்போல எங்கே எவர் பெரியவர்களாகத் தெரிந்தாலும் அவர்களுக்கெல்லாம் - 'அந்தரிகி'- ஸாஷ்டாங்கமாக, ஸ்த்ரீகளானால் பஞ்சாங்கமாக, நமஸ்காரம் பண்ணுங்கள். இப்படிச் சொல்கிறேனே என்பதற்காகக் கூட்டமாக நெரிகிற இடங்களில் கூட விழுந்து நமஸ்காரம் பண்ணணும் என்று பார்க்காதீர்கள்! அது மற்றவர்களுக்கும் ஹிம்ஸை; நீங்களும் மிதிபட்டுப் போவீர்கள்! அதனால் கால, தேச, வர்த்தமானங்களைப் பார்த்துத்தான் எதுவும் செய்யணும் என்பதை இந்த விஷயத்திற்கும் எடுத்துக் கொள்ளுங்கள். கூட்டத்திலே மனஸால் நமஸ்கரித்தால் போதும். உடம்பால் பண்ணாததற்கும் சேர்த்து மனஸால் deep ஆகப் பண்ணினால் போதும். நமஸ்காரத்தை மனஸ்காரமாக்குகிறது! மற்ற இடங்களில் மனஸை ஸரிப்படுத்தவே சரீரத்தை பூமியில் போட்டு நமஸ்காரம் பண்ணுங்கள்.

சக்தியிருந்தும் ஆசீர்வாதப் பொறுப்பு எடுத்துக் கொள்ளாத மஹாநுபாவர்களாக அவர்கள் இருந்தாலும் ஸரி; மஹாநுபாவர்கள் என்று நீங்கள் நினைத்ததோடு ஸரி, வாஸ்தவத்தில் அவர்கள் அப்படியில்லை என்றாலும் ஸரி, எப்படியானாலும் உங்கள் நமஸ்காரம் அதற்கான பலனைப் பெற்றுத் தந்துவிடும். அதெப்படியென்றால்.. நாம் வேலை கொடுக்கிறவர் என்று நினைத்து ஒருத்தரிடம் மனு கொடுக்கிறோம். வாஸ்தவத்தில் அவர் ப்ராஞ்ச் மானேஜர்தான். அப்பாயின்ட்மென்ட் கொடுக்கிறவர் அவர் இல்லை. அந்த அதாரிடி அவருக்கும் மேலே உள்ள ஜெனரல் மானேஜர்தான். எல்லா மனுக்களும் அவரிடந்தான் போய், அவர்தான் அப்பாயின்ட் பண்ணுவது. ப்ராஞ்ச் மானேஜர் நம் சார்பில் பண்ணக் கூடியதெல்லாம் பலமாக சிபார்சு செய்வதுதான். அதற்காக ஜெனரல் மானேஜர் கொஞ்சம் ''கூடப் போட்டு'' ஸ்கேலை ஆரம்பிக்கலாமாயிருக்கும். ஆனால் அப்பாயின்ட்மென்ட் பண்ணுவதற்கு இந்த சிபாரிசும் வேண்டாத ஒரு அதாரிடி அவர்தான். புரிகிறதோல்லியோ?

ஆனாலும் ஜெனரல் மானேஜர் லேசில் பிடிபடுவதில்லை ஆதலால் ப்ராஞ்ச் மானேஜரிடமே நம்முடைய மனுவைக் கொடுப்போம்.

'நமஸ்கார மாஹாத்ம்யம்' ஸவிஸ்தாரமாகச் சொல்லி விட்டேன். இந்த 'டாபிக்' எதற்காக எடுத்துக் கொண்டேனென்றால், வர வர ஜனங்களிடம் விநய குணம் - பணிவு, பவ்யம் என்பது - குறைந்து கொண்டே வருகிறது. அப்படி ரொம்ப வருத்தப்படும்படியாக இன்றைக்கு ஒருத்தர் ஒன்று சொன்னார். அதைப் பற்றியும், அதற்கு மாற்று மருந்து பற்றியும் யோஜனை போயிற்று. அதைத்தான் தெரிவிக்க நினைத்துப் பேசினேன். என்னவென்றால்; ஸமத்வம், ஸ்வதந்திரம், ஸ்வய மரியாதை என்றெல்லாம் ரொம்பவும் முழக்க ஆரம்பித்த நாளாகத்தான் விநயஸம்பத்துக்கு ஹானி ஏற்பட ஆரம்பித்து இப்போது ஒரே முரட்டுத் தனத்திலும் அடங்காமையிலும் கொண்டு விட்டிருக்கிறது. Right, right என்று கிளம்பியதில் ஒரே fight ஆகியிருக்கிறது. ஸமூஹ வாழ்க்கை, பொருளாதாரம் என்று பார்த்தால் இந்தப் புதுக் கொள்கைகளிலும் ந்யாயம் இல்லாமலில்லை. இதை ஆக்ஷேபிக்காமல் ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும், எதற்கும் ஒரு அளவு, வரம்பு இல்லையா? அந்த அளவு மீறாமல் வரம்பு கட்டிப் புதுக் கொள்கைகள் அமுல்படுத்தினால் எல்லாம் அதனதன் இடத்தில் சீராக இருந்து, இப்போதுள்ள




ஓயாத வர்க்கப் போராட்டங்கள் ஓய்ந்து லோகத்தில் சாந்தியும் ஸௌஜன்யமும் ஐக்கியமும் ஏற்படும். எப்படி அளவு படுத்துவது, வரம்பு கட்டுவது என்றால் ஸமூஹம் முழுவதிலும் மறுபடி வினய ஸம்பத்தை விருத்தி பண்ணுவதால்தான். பொருளாதாரம் மட்டும் ஒரு வாழ்க்கைக்குப் பூர்ணத்வம் தந்து விடுமா என்ன? ஒரு நாளும் இல்லை. அருளாதாரத்தைப் பிடித்து அதனால் இதை அளவுபடுத்தினால்தான் பூர்ண வாழ்வின் நிறைவு ஏற்படும். அந்த அருளாதாரத்தைப் பிடிக்க வழி வினயந்தான். வினயத்தை வரவழைக்க வழி? அது வேண்டும் என்ற 'பேஸிக்' எண்ணத்தோடு பெரியவர்களாக இருக்கப்பட்டவர்களைத் தேடிப் போய் விழுந்து நமஸ்காரம் பண்ணுவது தான். இந்த க்ரியையே 'பேஸிக்'காக அடிமட்டத்தில் இருந்ததைப் பெரிய மாளிகையாக எழுப்பிக் கொடுத்து விடும். இந்த தேசத்தில் கால காலமாக வந்திருக்கிற மரபின் சக்தி விசேஷத்தால் எப்பேர்ப்பட்ட தன்மான சூரரானாலும் ஸரி, கொஞ்சம் மனஸு வைத்து விட்டால் தானாக அந்த 'பேஸிக்' மனோபாவம் ஏற்பட்டுவிடும்.


ஆத்மாபிவிருத்தியே முக்யமாக இருந்த தேசத்தில் லௌகிக முன்னேற்றமே எல்லாம் என்பதாக இழுத்து விட்டிருக்கிற அஹங்கார ரோகத்திற்கு எனக்குத் தெரிந்த நமஸ்கார மருந்தைச் சொல்லி, இந்தக் 'கார'த்தால் அந்த 'கார'த்தை நிவிருத்தி பண்ணச் சொல்லிப் பார்க்கலாமே என்று தான் இத்தனை சொன்னதும். இதை வேறே யார் சொல்வதைவிடவும் நான் சொன்னால் அழுத்தமாகப் பதியும் என்று தோன்றியதால் விஸ்தாரம் பண்ணினேன். இப்படிச் சொல்கிறபோது நானே அஹங்காரம் கொண்டாடிக் கொள்கிறேனா என்ன? அதில்லை அர்த்தம். 'ஸ்தானத்'தை நினைத்துத்தானே இந்த ஸமத்வ - ஸ்வதந்திர - ஸ்வயமரியாதைக் கோஷமெல்லாம் கிளம்பி, கோஷம் யுத்தமாகவே ஆகி மரியாதைப் பண்பை, வினய குணத்தை விரட்டி வருகிறது? இந்த ஸந்தர்ப்பத்திலே, 'இதைவிடவோ இதற்கு ஸமமாகவோ ஒரு ஸ்தானமில்லை' என்கிற உச்சிக்கு ஏதோ விதி வசத்தினால் தூக்கிப் போடப்பட்ட ஒருத்தன், 'தான் யாருக்கும் மரியாதை பண்ணத் தேவையில்லை' என்பதில் நிறைவு காணாமல், 'மரியாதை செலுத்தத் தனக்குச் சான்ஸே இல்லையே! இப்படியும் ஒரு ஜன்மாவா?' என்று ரொம்பவும் குறைந்துதான் கொள்கிறான் என்பது லோகத்திற்கு தெரிந்தாலே அதற்கு வினயத்தின் அவச்யம் ஆழமாக மனஸில் தைக்கும் என்றுதான் சொன்னது.

எனக்குக் கிடைக்காத, கிடைப்பதற்கில்லாத நமஸ்கார பாக்யத்தை நீங்களெல்லாம் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு ச்ரேயஸ்களை அடைவதற்காக நானும் அந்த நாராயணனை 'நமோ நம:' என்று நமஸ்காரம் பண்ணுகிறேன்.

(1993 கல்கி தீபாவளி மலரில் வெளியான பெரியவரின் கட்டுரை.)

இந்த இலவச இணைப்புக்கான செலவுகளில் பகுதியளவு
ஏற்றுக் கொண்ட மாங்காடு காமாட்சியம்மன் தேவஸ்தானத்துக்கு நன்றி!


கல்கி
22.5.94
இதழுடன்
இலவச
இணைப்பு
அருள்
அருவி



WITH REVERENTIAL HOMAGE
FROM
ARUNA SUGARS & ENTERPRISES LIMITED
ARUNA SUGARS FINANCE LIMITED
AND
QUALITY - INN ARUNA

With Best Compliments Of :

HAUERS LINES PVT. LTD.

Ship Owners & Charterers

Dedicated to the development of

ANDAMAN & NICOBAR ISLANDS

— Regular sailings from Madras to Port Blair

— Inter-Island services within the A & N Islands

— Assistance in Clearing & Forwarding and Warehouse to Warehouse transportation contracts between the Mainland and the A & N Islands

— Steamer Agency services

Please contact us for cargo space reservation and for further Information / assistance

SVN HOUSE

90, C. P. Ramaswamy Aiyar Road,
Alwarpet, Madras - 600 018.
Tel : 4992081 / 82, Cable : POTENTIAL,
Tlx : 041-7385, Fax : 44-4991007

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka



கனிகளிலே அவள் மாங்கனி
காற்றினிலே அவள் தென்றல்

நல்லி
சின்னசாமி செட்டி
பனகல்பார்க்
சென்னை 600017

இணை பிரியா பந்தம்

என்றும், எப்பொழுதும்
நாங்கள் விரும்புவது **லிவ்பெட்**



- சுகாதாரமானது
- உடையாதது
- கவர்ச்சியான வண்ணத்தில் பல வடிவங்களுடையது.

சம்மர் ஷவர்



உங்கள் மகிழ்ச்சியை மேலும் கூட்டிட, நீங்கள் வாங்கும் ஒவ்வொரு **லிவ்பெட்** பாட்டிலுடனும் ஒரு **மீரா ஹெர்பல் சீயக்காய் பவுடர் ஸாசே** இலவசம் !!

"உடனே விரைந்திடுவீர் அருகாமையிலுள்ள விற்பனையாளரிடம்"

லிவியா பாலிமெர் பாட்டில்ஸ் (பி) லிட்.,
மண்ணைப்பூர் சாலை, மண்ணைப்பூர். Pincode - 622 515
புதுக்கோட்டை மாவட்டம்.

இச்சலுகை தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் கேரள
மாநிலங்களில் 14.8.94 வரை மட்டுமே.

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka

பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிமிடெட்

இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985

225, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை - 600 003. போன் : 582676; 564354

கிளை : 2, கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை - 600 041. போன் : 413582

கனகதாரா முதலீட்டுத் திட்டம்

உங்கள் குழந்தைச் செல்வங்களைக் கோடீஸ்வரனாக்குங்கள்!

ரூ. 50,000/- செலுத்துவீர். 10 ஆண்டுகளில் **ரூ. 50,000/-** ஐ திரும்பப் பெறுவீர்.

மீண்டும் 20 ஆம் ஆண்டு நிறைவில் ரூபாய் **ஒரு கோடியை** பெறுவீர்.

(ரூ. 12,500/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும்)

வெகுமதி முதலீட்டுத் திட்டம்

ரூ. 580/- செலுத்துவீர். 252 மாதங்கள் நிறைவில் **ரூ. 40,000/-** பெறுவீர்.

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	•5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

மாத வட்டிக்கான செக்குகள் முன்கூட்டியே கொடுக்கப்படும். உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது.

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம் 15 ஆண்டுகள்

வைப்புத் தொகை	முதல் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	இரண்டாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	மூன்றாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை
ரூ. 6,320/-	ரூ. 6,000/-	ரூ. 6,000/-	ரூ. 56,320/-
ரூ. 25,280/-	ரூ. 24,000/-	ரூ. 24,000/-	ரூ. 2,25,280/-

பென்ஷனர் நலத் திட்டம் - வட்டி 19 1/2%

வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ

ரூ. 7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் **ரூ. 1,25,000/-** பெறலாம்

ரூ. 9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் **ரூ. 1,50,000/-** பெறலாம்

சேவிங்ஸ் கணக்குகள் மீது 10% வட்டி

SURESH

கடன்	நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும் சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்.	வட்டி வீதம் ரூ. 1.85

கௌரவ ஆலோசகர்:

P. பாலசுப்ரமணியம், B.Sc.

முதன்மை அறங்காவலர்

கந்தகோட்டம், சென்னை - 3.

(Friday Weekly Holiday)

இயக்குனர் குழுத் தலைவர்:

R. விவேகானந்தன், B.Com.

பங்குதாரர்களுக்கு மட்டும் Business Hours :

Week days 8.30 a.m. to 12.30 p.m. &

2.00 p.m. to 6.00 p.m.

Sunday 8.30 a.m. to 12 noon.

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி